உ

சிவமயம்

# சாணக்ய தந்திரம்

அமரர் கி. அருணாசல முதலியார்
அவர்களின் நினைவாக அன்பளிப்பு.
அளிப்பவர்:
திருமதி சியாமளா அருணாசலம்
R. 6578.

முடிகொண்டான்

பிரம்மஸ்ரீ எம். எம். நாராயணஸ்வாமி ஐயர்

இயற்றியது

தஞ்சாவூர் ஜில்லா
முடிகொண்டான்
ஸரஸ்வதீ விலாஸ புத்தகசாலையாரால்
பதிப்பிக்கப்பட்டது.

ஸ்தர் செய்தது] 1927 [விலை அணா 6

## சில முக்கிய அபிப்பிராயங்கள்

ஸ்ரீமான் M. M. நாராயணஸாமி அய்யர் தமிழில் வசன நடையாக எழுதியுள்ள 'சாணக்ய தந்திரம்' 'கதாரஸமஞ்சரி' என்னும் புஸ்தகங்களைப் படித்துப் பார்த்தேன். சிறுவர் சிறுமியர்களுக்கேற்றபடி கதைகளை அழகா யெழுதிக்கொண்டுபோகும் ஆற்றல் இந் நூலாசிரியருக்கு நன்றாக அமைந்திருக்கிறது. ஆசிரியரின் நல்லுழைப்பு மிகவும் பாராட்டத்தக்கதே. இந்தப் புஸ்தகங்களைப் படிக்கும் சிறுவர் சிறுமியர்கள் மிக்க நன்மை யடைவார்கள் என்பது நிச்சயம்.

மஹாமஹோபாத்யாயர் வே. ஸ்ரீமிநாதய்யரவர்கள்
பிரின்ஸிபால், மீனாக்ஷி தமிழ் காலேஜ், சிதம்பரம். 17—4—1922.

தமிழ் அபிவிருத்தியையே பெரிதுங் கருதிப் பலநூல்களை இயற்றி வெளியிட்டு வரும் ஸ்ரீமத் M. M. நாராயணஸாமி அய்யர் இயற்றியுள்ளது "சாணக்ய தந்திரம்". இது சாணக்ய சந்திரகுப்தர் சரித்திர சம்பந்தமாக வடமொழியிலுள்ள வரலாற்றைத் தழுவித் தமிழ் மொழியில் சுருங்கக்கூறி விளங்கவைத்துள்ளது. சிறுவர் சிறுமியர்க்கும் பொருள் விளங்க இனிய நடையில் எழுதப்பட்டுள்ள இந்நூலைப் படிப்போர் அரசியல், அமைச்சியல், விடாமுயற்சி, அறமாட்சி, நண்பர் கடமை யாதிய நீதிகளையறிந்து பயனுறலாகும். சிறு வகுப்பு மாணவர்க்கு இது மிக்க பயன்படுமென்பது எனது அபிப்பிராயம். இதனைப் பாடபுத்தகமாக ஏற்படுத்தல் நலந்தருமென்று எண்ணுகிறேன்.

ம. கோபாலகிருஷ்ணையரவர்கள்
தமிழ்ப்பண்டிதர், நாஷனல் காலேஜ், திரிசிரபுரம். 15—9—22.

'சாணக்ய தந்திரம்' என்னுங் கட்டுரை நூலைப்படித்துப் பார்த்தேன். எளிய செந்தமிழ் நடையில் விழுமியவாக விஷயங்கள் செவ்வனே எழுதப்பட்டுள. சாணக்யனது தந்திரமும் வீரமுஞ் சந்திரகுப்தனுக்குற்ற இடையூறுகளை நீக்கி நன்னிலையிலுய்க்க நாடு முயற்சிகளும் கற்பவர்க்குப் பெரிதும் பெருமிதம் பயக்கின்றன. சிறிதும் பயனற்ற நூல்கள் மலிந்துவரு மிக்காலத்தில் மதிபுகட்டு மெடுத்துக் காட்டாக இந்நூல் வெளிவந்தமை குறித்துச் சாலவு மகிழ்கின்றேன். வடமொழியிலுள்ள வரலாற்றைத் தழுவிச் சுருங்கக் கூறலாக விளங்க வரைந்துள்ள இந்நூல் கல்விச்சாலையிற் பயில்வுறூஉ மாணவர்க்குப் பெரிது முபகாரமாகும் என்பது என் தேர்ந்த கருத்து.

இங்ஙனம்:—ரா. திம்மப்ப ஐயரவர்கள், F. M. T. S.
சேலம் காலேஜ் தமிழ்ப்பண்டிதர், சேலம், 8—10—1921.

உ

சிவமயம்

# சாணக்ய தந்திரம்

அமரர் கி. அருணாசல முதலியார்
அவர்களின் நினைவாக அன்பளிப்பு
அளிப்பவர்:
(1988)
T. 6578.

முடிகொண்டான்
பிரஹ்மஸ்ரீ எம். எம். நாராயணஸாமி ஐயர்
இயற்றியது

திருவனந்தபுரம்
மகாராஜா காலேஜ் புரொபஸர்,
மகா-ா-ா-ஸ்ரீ R. ஸ்ரீநிவாஸய்யரவர்கள், M.A., M.R.A.S.,
முகவுரையுடன் கூடியது

(சீர்திருத்திய இரண்டாம் பதிப்பு)

தஞ்சாவூர் ஜில்லா
முடிகொண்டான்
ஸரஸ்வதி விலாஸ புத்தகசாலையாரால்
பதிப்பிக்கப்பட்டது.

ரிஜிஸ்தர் செய்தது] 1927. [விலை அ...

The happy condition of the subjects, the beautiful towers and magnificent halls, the perfect order and harmony prevalent everywhere, the high esteem in which the learned were held—all these had made *Chandragupta's reign* a never-to-be-forgotten event in the long story of this wonderful land. Above all the contemporaries *Rakshasa* and *Chanakya* who were rival ministers, each setting his intellect against the other's, contributed a lion's share to the glory of that reign. The basis of this story is the famous Sanskrit drama, *Mudrarakshasam*—a drama in which the feud between the two intellectual rivals is depicted with striking effect. Many of the details have been omitted and only the links which are absolutely necessary for the continuity of the story have been maintained. The author has had to condense the material in some places so as to keep the size of the book within the present limits. I hope that our pandit will one of these days publish a good translation of the original *Sanskrit drama* in full.

As to the question when the incidents set forth in this work took place there seem to be slight differences of opinion among the historians themselves; but I believe it will not be for wrong to say that the reign of *Chandragupta* can be fixed at about the end of the fourth century B. C.

I congratulate the author on this production of his and hope that it will be useful to the schoolgoing population. The language is certainly commendable and the ideas are expressed clearly and tersely. I look forward to more of such publications from the pen of my friend, the author.

Trivandrum,
11*th September*, 1921.

R. SRINIVASAN, M.A.

# முகவுரை

இச்சரித்திரத் தலைவனாகிய சாணக்யன், சிறந்த ராஜதந்திரி; புலவர் மதிக்கும் பொருள்நூல் ஆசிரியன்; அரசிழந்து அநாதையாயிருந்த சந்திரகுப்தனுக்குத் தன் புத்திவன்மையால் அரசுரிமையளித்தவன்; கி. மு. 4-ம் நூற்றாண்டில் வாழ்ந்தவன்; சந்திரகுப்தனுக்கு மந்திரித் தலைவனாயிருந்து செங்கோல் நடாத்தியவன். இத்தகைய அந்தணோத்தமனும், மதிமந்திரியும், ராஜதந்திர பாரங்கதனுமாகிய இப்பெரியோனின் வரலாறு, காவியங்களிலும் அலங்காரங்களிலும் காலங்கழிக்கும் தமிழ்மக்கட்கு அரசியன் முறையிலும் அறிவு பெற ஒரு தூண்டுகோலாயிருக்கும் என்பது எனது அபிப்பிராயம்.

உலகம் புகழும் இந்நிபுணர் மகிமையையும், விடாமுயற்சியையும், தெளிவாகக்கூறும் இச்சிறுநூல், கற்பவர்மனதைக் கவரத்தக்கவாறு பிரஹ்மஸ்ரீ பண்டிதர் நாராயணஸாமி ஐயரவர்களால் எழுதப்பட்டிருக்கிறது. இதில், சாணக்யனது சாகஸமும், ராக்ஷஸனுடைய சூழ்ச்சிகளும் விளங்குகின்றன. வடமொழி நூல்களாலும், மொழிபெயர்ப்புகளாலும் இச்சரித்திரத்தைப் பலர் அறிந்திருக்கலாம். ஆனால் இந்நூல், இனியதமிழ் நடையில், இலேசாயும், தெளிவாயும், படிப்பவர் மனதில் எளிதிற் பதியும் வண்ணமாயும், புதுமாதிரியில் அமைந்திருக்கின்றது. இது பாவலர்க்கும் பாமரர்க்கும், உற்சாகத்தை விளைவிக்கும் என்பதில் ஐயமில்லை. உபயோகமில்லாத பல கட்டுக்கதைகளையும், வெற்றுக்கதைகளையும் கற்கும் சிறுவர் சிறுமியர்க்கு, இந்நூல் பாடமாக உபயோகிக்கப்படின், சிறந்த ஒழுக்கமும், விடாமுயற்சியும் எண்ணித்துணியும் கருமமும், துணிந்த கருமத்தை எண்ணியாங்கு சாதிக்கும் மனோதைரியமும் ஏற்படுவது திண்ணம்.

தமிழின் அபிவிருத்தி ஒன்றையே கருதிப் பல நூல்களை இயற்றிப் பிரசுரித்துவரும் இவ்வாசிரியர், இத்தகைய பல நூல்களை இன்னும் இயற்றித் தமிழுலகிற்கு உபகரிக்கும் வண்ணம், தமிழபிமானிகளும், தமிழ்த்தெய்வமும், உவந்து முன்வந்து உதவுவார்கள் என நம்புகிறேன்.

வி. கி. ஸ்ரீநிவாஸய்யங்கார்

தமிழ்ப்பண்டிதர், மஹாராஜா கலாசாலை,

புதுக்கோட்டை.

# முன்னுரை

தர்ம சாஸ்திரங்களின் விதி, விலக்குகள், செந்தமிழ் நடையில் நாநாவித ரஸங்களுடன் அமைய எழுதப்படும் நூல்களே சிறுவர்கள் மனதில் நன்னெறியைப் பசுமரத்தாணிபோல் பதியவைத்து, புருஷார்த்தங்களைப் பெறத்தக்க வாழ்நாளை அளிக்கும் என்பது கற்றோர் தீர்மானம். இவ்வுறுதியைப் பின்பற்றி வடமொழியில் விசாகதத்தர் எழுதியுள்ள "முத்ராராக்ஷஸ"த்தைப் பெரும்பாலும்தழுவி இந்நூலை எழுதலானேன். பலதடவை படிப்பினும் கூறிய விஷயமிதுவெனத் துணியக்கூடாத கடினநடையில் வடநூல் அமைந்துள்ளது.

நாம் படித்திருக்கும் கதைகளுள் சுவை, சிறப்பு, நீதி முதலியன மலிந்த இச்சரிதைக்கு உவமை இல்லையென்றே கூறலாம். சந்திரகுப்தன் புதியவனன்று. இந்தியதேச சரித்திரத்தில் இவ்வரசன் முதன்மைபெற்றவன் என எல்லாரும் அறிவார்கள். வடநூற் புலவர்களால் இச்சரித்திரம் மிகவும் பாராட்டப்பட்டது. இந்நூலில் வகுப்புத் துவேஷமும், சிருங்காரரஸ விஷயங்களும் ஒரு சிறிதுமில்லை. ஆதலால் கல்வித்துறை அதிகாரிகளும், உபாத்தியாயர்களும் இந்நூலை அபிமானித்து ஊக்கமளிப்பார்கள் என நம்புகிறேன்.

இக்கதையினால் புத்திமான் பலவான் என்பதும், தர்மம் வெல்லும், அதர்மம் கொல்லும் என்பதும், முயற்சியுடையோர் இகழ்ச்சியடையார் என்பதும், நண்பர் பெருமை, மந்திரி கடமை முதலிய நீதிகளும் விளங்கும்.

எனது அறியாமை, அஜாக்கிரதை காரணமாக இந்நூலிற் காணப்படும் எவ்வகைப் பிழைகளையும், திருத்திக்கொள்ளுமாறும் இந்நூல் சம்பந்தமாக யான் செய்யவேண்டிய சீர்திருத்தங்களை அறிவித்தருளுமாறும் அறிஞர்களை வேண்டுகிறேன். முதற்பதிப்பில் காணப்படாத பல விஷயங்கள் இப்பதிப்பில் சேர்க்கப்பட்டுள்ளன.

இந்நூலுக்குத் தமிழிலும் ஆங்கிலத்திலும் முகவுரை எழுதியும் அபிப்பிராயமளித்தும் இதனைப் பெருமைப்படுத்திய கனவான்களுக்கும், இந்நூல் சம்பந்தமாய் உதவிபுரிந்த நண்பர்களுக்கும் என்றும் நன்றி பாராட்டுகிறேன்.

தமிழுலகம் அரியபெரிய ராஜநீதிகளையும், சிறந்த தருமங்களையும் எளிதில் உணர்ந்துய்யுமாறு இந்நூலை பஹிரங்கப்படுத்தும்படி பிரேரேபித்த பரமேசுவரன் இந்நூல் என்னென்றும் உலகமுழுதும் நிலவுமாறும் கருணைபுரிய வேண்டுகிறேன்.

முடிகொண்டான்,
தஞ்சை ஜில்லா,
15—2—27.

M. M. நாராயணஸ்வாமி அய்யர்.

சிவமயம்

# சாணக்ய தந்திரம்

கடவுள் வணக்கம்

"கொன்றை மலர்சூடும் கொற்றவனைச் சிற்சபையில்
நின்று விளையாடும் நின்மலனை—அன்று
விருத்திரனைக் கொன்றவன்றன் வெங்கலியைத் தீர்த்த
உருத்திரனை உள்ளமே உன்"

## முதல் அத்தியாயம்

### ஸர்வார்த்தஸித்தியின் மக்கட்பேறு

சுமார் இருபத்துமூன்று நூற்றாண்டுகளுக்கு முன்னே மந்தாகினி நதி தீரத்தில் (பாடலீபுரம்) என்றொரு நகரமிருந்தது; அதற்கே ('குஸுமபுரம்)' என்றும் பெயர் உண்டு. அந் நகரத்தார் யாவரும் திரண்ட செல்வம் படைத்தவர்களாயும், மன்மதனைப்போல் அழகு வாய்ந்தவர்களாயும், சகல சாஸ்திர நிபுணர்களாயும், எப்பொழுதும் மகிழ்ச்சி யுடையவர்களாயும் இருந்தனர். அதனால் அவர்கள் இரப்பவர்க்கு இல்லையென்று கூறாமல், பொருளைத் துரும்பாகக் கருதி உவகையுட னுதவுங் கொடையாளர்களாக விளங்கினார்கள். அந் நகரிலுள்ள மாதர் கள் தெய்வப் பெண்கள் போன்று வனப்பை யுடையவர்களா யும் பிற புருஷர்களைச் சகோதரராகக் கருதும் பதிவிரதைகளா

யும் இருந்தனர். பல சொல்வானேன்? அந் நகருக்குச் சமான மான நகர் வேறொன்றுமில்லை யாதலின் அது பூவுலகம் புகழ விளங்கியது. இத்தகைய பெருமை வாய்ந்த அந் நகரைச் சந்திர வமிசத்திற் பிறந்த ஸர்வார்த்தஸித்தி என்ற ஓர் அரசன் நீதி வழுவாது பரிபாலித்து வந்தான். அவன் மன்னுயிரைத் தன்னுயிரே போல் காப்பவன்; அடக்கம், சாந்தம், பொறுமை முதலிய நற்குணங்களெல்லாம் ஒருங்கே அமையப் பெற்றவன்; சகலகலைகளையும் கற்றவன்; படைக் கஞ்சாத வீரன்; ஆறிலொருபங்கு வரிவாங்கிக் குடிகளை ஆதரிப்பவன்; இன்சொற் கூறுபவன்; அவனிடம் வயதிலும் புத்தியிலும் சிறந்த மந்திரிகளிருந்தனர். அவர்களுடைய துணைகொண்டு அவன் ராஜ்ய காரியங்களைச் செவ்வையாய் நடத்திவந்தான். அமைச்சர்களுள் ராக்ஷஸன் என்பவனே பிரதானமாய் விளங்கினன். அரசனுக்கு அதிஸௌந்தரியவதியான ஸுநந்தை என்ற பட்டமஹிஷி யிருந்தாள். அன்றியும் முரை என்னும் பெயர் கொண்ட கணிகையுமிருந்தாள்.

இவ்வாறு குறைவற்ற சௌகரியத்தோடு வாழ்ந்து வந்த போதிலும் மக்கட்பேறில்லாத பெருங்குறை யிருந்தமையினால் அரசன் பெரு வருத்தத்தி லாழ்ந்திருந்தான். நன் மக்களைப் பெறாத வாழ்க்கை என்ன பயனுடையது? மக்களைப் பெறாதவர்க்கு நற்கதி ஏது? இது பற்றியே ஆன்றோர்,

> "பொன்னுடைய ரேனும் புகழுடைய ரேனுமற்
> றென்னுடைய ரேனு முடையரோ—இன்னடிசில்
> புக்களையுந் தாமரைக்கைப் பூநாறுஞ் செய்யவாய்
> மக்களையிங் கில்லா தவர்"

என்று கூறலாயினர். அவ்வரசன் மக்கட் பேற்றை விரும்பி, அநேக ஆலயங்களைக் கட்டி வைத்தான்; சிவலிங்கப்பிரதிஷ்டை செய்வித்தான்; குளங்கள் பல வெட்டி வைத்தான்; வீடுகள்

கட்டியும் தானம் செய்தான்; கோதானம், பூதானம், ஸ்வர்ண தானம் முதலியவற்றையும் செய்தான்; ஆயினும் பலன் ஒன்றும் ஏற்படவில்லை.

ஒருநாள் இரவில் அரசன் மிக்க வெறுப்புடன் தெய்வத்தை நொந்துகொண்டே படுத்துக் கொண்டான். கருணை நிதியாகிய கங்காதரன், முனிவர் வேஷத்துடன் அரசன் கனவிலே தோன்றி "மன்னவ! இனி நீ வருந்த வேண்டாம். நான் இவ்வேஷத்துடன் நாளைக் காலையில் உனது அரண்மனைக்கு வருவேன். என்னை உபசரித்து என் பாத தீர்த்தத்தை உன் மனைவிகளுடைய சிரஸில் தெளிப்பாயாயின், உன் எண்ணம் நிறைவேறும்" என்று திருவாய்மலர்ந்தருளி மறைந்தார்.

அரசன் தூங்கியெழுந்ததும் விடியற்காலமாயிருந்ததால் "நாம் கண்டகனவு பயனளிக்கும். 'இல்லை கனா முந்துறுத வினை' என்பது பழமொழியன்றோ? பழமொழி பொய்க்குமா? ஆதலின், கனவிலே தோன்றிய கடவுள் நேரில்வந்து நிச்சயமாய் அருள்புரிவார்" என்றெண்ணி மகிழ்ந்திருந்தான். காலையில் தான்கண்ட கனவைமாத்திரம் ஒருவரிடமும் சொல்லவில்லை. பத்து நாழிகைக்கெல்லாம் கடவுள் முனிவர் வேஷத்துடன் அரண்மனைக்கு வந்தார். அரசன் அவரை வணங்கி வரவேற்று ஓர் ஆஸனத்தில் அமரச்செய்து செய்யவேண்டிய உபசாரங்களைப் பணிவாய்ச்செய்து மகிழ்வித்து, ஸுநந்தை, முரை என்ற இருவரையும் அங்கே வரவழைத்தான். முரை கணிக மாதாகையால் கொஞ்சதூரத்திலேயே நின்றாள். ஸுநந்தை பட்டமஹிஷியாகையால் அரசனருகே வந்து "இம்முனிவரைப் பூஜிப்பதால் என்ன பயன் ஏற்படப்போகிறது?" என்ற நினைப்புடன் நின்றாள். முனிவர் அரசனுக்குத் தீர்த்தமளித்துப் பின் ஸுநந்தைக்கும் அப்பால் முரைக்கும் அளித்தார்.

பின்பு அரசன் முனிவர் கால்கழுவிய நீரைத் தன் மனைவியர் இருவர் சிரஸிலும் வாரித் தெளித்தான். ஸுநந்தை சமீ

பத்திலிருந்ததால் அவளுடைய தலையில் ஒன்பது துளிகளாக விழுந்து கணப்பொழுதிற்கெல்லாம் மறைந்துவிட்டது. முரை தூரத்திலிருந்ததால் அவளுடைய சிரஸில் ஒரு துளி விழுந்து அசையாமல் நின்றது. அரசன் நீர்த்துளிகள் அவ்வாறு தங்கி மறைந்ததற்குக் காரணம் யாதென்று முனிவரைக் கேட்டான். அதற்கு முனிவர் "மன்னவா! நீ கவலைப்பட வேண்டாம்; உனக்குப் பத்துப் புத்திரர்கள் உண்டாவார்கள்; எல்லாம் உனக்குநன்மையாகவே முடியும்; உங்களுக்கு மங்களமுண்டாகட்டும்" என்று ஆசீர்வாதம் செய்து அரசனிடம் விடை பெற்றுச் சென்றார்.

சிலகாலஞ் சென்றதும் ஸுநந்தை, முரை இருவரும் கர்ப்பவதியானார்கள். முரை கணிகையாய் இருந்த போதிலும், அதிக பக்தியுடன் தீர்த்த மருந்தியதால் கடவுளருள் பெற்றவளானாள். அவள் உலக வழக்கப்படி பத்து மாதங்கள் சென்றதும் அதிஸௌந்தர்யமுள்ள ஒரு புத்திரனைப் பெற்றாள். அரசன் அக் குழந்தைக்கு மௌரியன் என்று நாமகரணம் செய்தான். அவன் நாளுக்கு நாள் பிறைச் சந்திரனைப் போல் வளர்ந்து வந்தான்.

ஸுநந்தை பதினைந்து மாதங் கர்ப்பந் தரித்திருந்து ஒரு மாம்ஸ பிண்டத்தைப் பெற்றாள். உடனே தாதிகள் இச் செய்தியை அரசனிடம் தெரிவித்தனர். இதைக்கேட்ட அரசன் மிக்க வருத்தமுற்றுத் தனக்கு முக்கிய மந்திரியான ராக்ஷஸனை வரவழைத்து, அவனிடம் தான்கண்ட கனவையும் அதன்படி இதுவரையில் நடந்ததையும் இப்பொழுது ஸுநந்தைக்கு மாம்ஸ பிண்டம் பிறந்ததையும் தெரிவித்தான். அதைக்கேட்ட ராக்ஷஸன் தீர்க்காலோசனை செய்து அரசனைப் பார்த்து "மன்னவா! தாங்கள் இதற்காகப் பயப்பட வேண்டாம்; முனிவர்சொல் ஒருநாளும் பொய்க்காது; ஆதலின், இந்த மாம்ஸபிண்டத்தை ஒன்பது கூறுக்கி,

ஒவ்வொன்றையும் தனித்தனியே ஒன்பது தைலக்குடங்களில் போட்டுப் பார்ப்போம்; துரியோதனன் முதலியோரும் இவ் வாறே உண்டானதாகக் கேள்வி" என்று சொன்னான். அது கேட்ட அரசன் "மந்திரீ! எவ்வாறேனும் புத்திரர்கள் பிறந் தால் போதுமானது; நீ சொன்னபடியே செய்!" என்றான். பின்பு ராக்ஷஸன் அம்மாம்ஸ பிண்டத்தை ஒன்பது கூறாக்கி ஒன்பது தைலக்குடங்களில் போட்டுப் பாதுகாத்து வரச்செய் தான். சில நாள் சென்றபின் அக்குடங்களைப் பிளந்துகொண்டு ஏககாலத்தில் ஒன்பது பிள்ளைகள் வெளிக்கிளம்பினார்கள். இச்செய்தியை யறிந்த அரசன் மகிழ்ச்சியுடன் அவர்களுக்கு முறையே நந்தன், ஸுநந்தன், உபநந்தன், ப்ரநந்தன், லோக நந்தன், குருநந்தன், ப்ரியநந்தன், மித்திரநந்தன், விநந்தன் என்று பெயரிட்டு, அன்போடு பரிபாலித்து வந்தான்.

இவ்வாறு மௌரியனும் நவநந்தர்களும் கிரமமாய் வளர்ந்து வந்தார்கள். அரசன் தனித்தனியே பத்து அரண் மனைகள் கட்டி, அவர்களைப் போஷகர்களுடன் அவற்றில் வைத்தான் பின்பு தக்க ஆசிரியர்களைக் கொண்டு, பலவகை நூற்களையும் கசடறக் கற்பித்து, அரசர்களுக்குரிய வில்வித்தை, வாள்வித்தை, யானையேற்றம், குதிரையேற்றம் முதலிய வற்றி லும் தேர்ச்சி பெறச்செய்தான். ஆனால், மௌரியன் மாத்திரம் முனிவரருளால் வித்தைகளை எளிதில் கற்றுக்கொண்டு, தேர்ச்சி அடைந்தான். நவநந்தர்களுக்கோ, ஆசிரியர் போதிப்பது மன தில் ஏறவேயில்லை. அவர்கள் வேடிக்கையிலும், புரளி பேசு வதிலும், காலத்தைக் கழிக்கலாயினர். ஆதலின் உபாத்தியாயர் போதித்தவை யெல்லாம் செவிடன் காதில் சங்கூதியது போலா யின. இவர்களுக் கெல்லாம் சுமார் பதினாறு வயதானதும், அரசன் தக்க ராஜ கன்னிகைகளைத் தேடி விவாகஞ்செய்து வைத்து மகிழ்ந்தான்.

# இரண்டாவது அத்தியாயம்

## மௌரியர் வதம்

நாட்கள் சில சென்றதும் ஸர்வார்த்தஸித்தி, தன் முக்கிய மந்திரியாகிய ராக்ஷஸனையழைத்து "எனக்கோ வயது முதிர்ந்து விட்டது; இனி என்னால் செங்கோல் செலுத்த இயலாது; புத்திரர்களுக்கும் தக்க வயது வந்துவிட்டது; ஆதலின் நான் அவர்களிடம் அரசை ஒப்புவித்துக் கானகஞ்சென்று தவம் புரிய விரும்புகிறேன்" என்றான். அதற்கு மந்திரி "அரசே! தாங்கள் கூறியது தகுதியானதே. நாம் நாளையதினம் நவநந்தர்களை வரவழைத்து, யார் மூத்தவனென்று விசாரித்து, அவனுக்குப் பட்டங் கட்டி வைப்போம்" என்றான். அவ்வாறே சரி என்று அரசனும் சம்மதித்தான்.

மௌரியனால் அங்கே முன்னமேயே நியமிக்கப்பட்டிருந்த ஒற்றனொருவன் இச் செய்தியை அன்றிரவு மௌரியனிடம் வந்து தெரிவித்தான். இதைக் கேட்டதும் அவனுக்கு மிக்க வருத்த முண்டாயிற்று. அவன் "அந்தோ! அரசன் என்னை மட்டும் நீக்கி விட்டு, மந்திராலோசனைக்கு நவநந்தர்களை மாத்திரம் அழைத்திருக்கிறா னல்லவா? நான் கணிகையின் புத்திர னாகையால் எனக்கு ராஜ்யத்தில் சம்பந்த மில்லையென்று எண்ணி விட்டார்கள்போ லிருக்கிறது. நான் என் புத்தியின் வல்லமையால் இவர்களுடைய காரியங்களுக்கு இடையூறு செய்து என் காரியத்தை முடித்துக் கொள்வதே தகுதியாகும்" என்று தீர்மானஞ் செய்துகொண்டு நவநந்தர்களுள் ஒருவனுடைய வீட்டுக்குப் போனான்.

மௌரியன் புத்திசாலி யாகையாலும் மூத்தவனாகையாலும் நவநந்தர்களுக் கெல்லாம் அவனிடம் பிரீதியும் நம்பிக்கையு

முண்டு. அவனைக் கண்டதும் நந்தன் வெகு மரியாதையுடன் ஆசனத்தி லமரச் செய்து " அண்ணா! தீங்கள் இங்கே வந்த காரியம் என்ன ?" என்று கேட்டான். அதற்கு மௌரியன் " அப்பா ! நான் மற்றவர்களைக் காட்டிலும் உன்னிடம் அதிகப் பிரீதியுள்ளவன் என்பது உனக்குத் தெரியுமன்றோ? அதனாலே தான் நான் உன்னிடம் இப்பொழுது ஒரு செய்தி சொல்ல வந்தேன். நீ அதன்படி நடக்கவேண்டும்" என்றான். அவன் "அவ்வாறே செய்வேன்" என்றான். மௌரியன் "தம்பீ! நாளைய தினம் நமது தந்தை நீ யுள்பட ஒன்பது பேர்களையும் அழைத்து, யார் மூத்தவனென்று விசாரித்து, அவனுக்குப் பட்டாபிஷேகம் செய்துவைக்கப்போகிறார்; நீயே மூத்தவனென்று சொன்னால் உனக்கு ராஜ்யம் கிடைக்கும்; உனக்குக் கிடைத்தால் எனக்குக் கிடைத்ததுபோலன்றோ? ஆதலின் உனக்கு முன்னமேயே இவ்விஷயத்தைத் தெரிவிக்கவந்தேன்" என்றான். அதுகேட்ட நந்தன் "அண்ணா! வெகுசந்தோஷம்! நீ சொன்னபடியே செய்கிறேன்" என்றுசொல்லி அனுப்பி விட்டு, அரசன் தன்னை எப்பொழுது அழைக்கப் போகிறானென்று எதிர்பார்த்துக்கொண்டிருந்தான்.

பின் மௌரியன் மற்ற எட்டு நந்தர்களிடமும் தனித் தனியே சென்று, இவ்விஷயத்தைச் சொல்லி, ஒவ்வொருவனிடமும் " இது மிக்க இரகசியமானது; இதை வெளியிடக் கூடாது " என்று கூறிவிட்டுத் தன்வீடு போய்ச் சேர்ந்தான்.

மறுநாட்காலையில் அரசனும் ராக்ஷஸனும் சபைக்கு வந்ததும், நவநந்தர்களை வரவழைத்தார்கள். நவநந்தர் யாவரும் மௌரியன் செய்திருக்கும் சூழ்ச்சியை யறியாமல், " இன்னுஞ் சிறிதுநேரத்தில் நமக்கு ராஜ்யம் கிடைக்கும் " என்றெண்ணிக்கொண்டிருந்தார்கள். அரசன் அவர்களைத் தன்னருகே அமரச்செய்து, " மைந்தர்களே ! எனக்கு வயது முதிர்ந்துவிட்டபடியால் இனி ராஜ்யபாரம் வகிக்க முடியாது ;

ஆதலின், நான் இன்று உங்களுக்குள் மூத்தவனுக்குப் பாடலீ புர ராஜ்யத்தைப் பட்டாபிஷேகஞ் செய்துவைக்கத் தீர்மானித்திருக்கிறேன்; யார் மூத்தவனென்று தெரிவியுங்கள்" என்றுகேட்க, நவநந்தர்களில் ஒவ்வொருவனும் "நான்தான் மூத்தவன்; நான்தான் தமையன்" என்று சொல்லலானான். இதைக்கேட்ட ராக்ஷஸன் வேறுவிதமாய் ஏற்பாடு செய்தாலன்றி ஒற்றுமை ஏற்படாதென்று நினைத்து "இவ்விஷயத்தைப்பற்றி நாளையதினம் தீர்மானிப்போம்; நாளைக்கும் இங்கே வாருங்கள்" என்று சொல்லியனுப்பினான்.

நந்தர்கள் சென்றவுடன் ராக்ஷஸன் அரசனைப் பார்த்து "வேந்தே! பாடலீபுர ராஜ்யத்தை ஒன்பது பாகமாகப் பிரித்து ஆளுக்கொரு பாகமாகக் கொடுத்துவிடுவோம்; இன்றேல், இவர்கள் ஒற்றுமையின்றிச் சச்சரவு செய்துகொண் டிருப்பார்கள்" என்றான். அதற்கு அரசன் "அவ்வாறே செய்வோம்" என்று சொல்லியனுப்பினான்.

இச் சங்கதிகளை யெல்லாம் மௌரியனுடைய தூதன் வழக்கம்போல் அவனிடம் வந்து தெரிவித்தான். உடனே மௌரியன் நந்தர்களில் ஒருவனுடைய அரண்மனைக்கு வந்து சேர்ந்தான். மௌரியனைக் கண்டதும் நந்தன் எழுந்து உபசரித்து "அண்ணா! தங்களுடைய உத்தரவுப்படியே இன்று காலையில் நான் நடந்தேன்" என்றான். அதைக்கேட்ட மௌரியன் "அப்பா! நீ இன்று காலையில் நடந்தது சரிதான்; நாளைய தினம் நீ நடத்தவேண்டிய காரியம் மிக முக்கியமானது; நாளைக் காலையில் அரசன் இராஜ்யத்தை ஒன்பது பாகமாகச் செய்து ஆளுக்கொன்றாகக் கொடுக்கப்போகிறான்; அவற்றுள் குஸுமபுரம் இருக்கும் பாகத்தையே நீ கேள்! அது மிகச் சிறந்தது; அவ்விடத்தில் தான் நல்ல நிதிகளும் நிலங்களும் இருக்கின்றன; மற்றப் பாகங்கள் காடாரம்பமாகும்; அவைகள் உனக்கு வேண்டாம்; நான் சொன்னபடி செய்தால், உனக்கும் எனக்கும்

க்ஷேமமேற்படும்" என்றான். அதற்கு நந்தன் "அண்ணா! நீங்கள் சொன்னபடியே செய்கிறேன்" என்று சொல்லியனுப்பினான். பின் மௌரியன் மற்ற நந்தர்களிடம் இப்படியே சொல்லிவிட்டுத் தன் மாளிகை போய்ச் சேர்ந்தான். நந்தர்கள் யாவரும் மௌரியன் தங்களிடம் அதிகப் பிரீதி வைத்திருக்கிறானென்றெண்ணி மகிழ்ந்திருந்தனர்.

மறுநாள் காலையில் நவநந்தர்கள் இராஜ சபைக்குப் போயினர். அரசன் "மைந்தர்களே! பாடலீபுர ராஜ்யத்தை ஒன்பது பாகமாகப் பிரித்து ஆளுக்கொருபாகம் கொடுப்பதாகத் தீர்மானித்திருக்கிறேன்; உங்களுடைய சம்மதம் எப்படி?" என்று கேட்க, ஒவ்வொருவனும் எழுந்திருந்து "குஸுமபுரமிருக்கும் பாகம் எனக்கே வேண்டும்" என்று தெரிவித்தான். அமாத்ய ராக்ஷஸனுடைய யோசனை பலிக்காமற் போகவே அரசன் "நாளையதினம் தீர்மானம் சொல்லுகிறேன்; நாளைக்கு வாருங்கள்!" என்று கூறி மைந்தர்களை அனுப்பிவிட்டு ராக்ஷஸனைப் பார்த்து "மந்திரீ! இனி என்ன செய்யலாம்?" என்று கேட்டான். அவன் "அரசே! இக்காரியங்களெல்லாம் நந்தர்கள் தங்கள் சுயபுத்தியால் நடத்துவதாக எண்ண வேண்டாம்; இத்தனை சூது அவர்களுக்குத் தெரியாது; இது மௌரியன் செய்யும் வேலை யென்று தோன்றுகிறது; இங்கு நடக்கும் செய்திகளை யாரோ ஒரு தூதன் அவனுக்குத் தெரிவிக்கிறான்; அதனால் அவன் இவ்வாறு மித்திரபேதம் செய்திருக்கிறான்; நாம் அவனைப்பற்றி யோசிக்காததால் இவ்வளவு சங்கடம் ஏற்பட்டது; நாம் அவனுக்கு ஓர் ஏற்பாடு செய்யாவிடில், அவன் நந்தர்களுக்கு எப்பொழுதும் தீங்கு செய்வான்; ஆதலால், நாம் அவனுக்கும் ஓர் ஏற்பாடு செய்ய வேண்டும்; அதனால் நந்தர்களுக்கும் நன்மையுண்டாகும்" என்றான். அதுகேட்ட அரசன் ராக்ஷஸனைப்பார்த்து "மந்திரீ! நீ சொன்னது சரிதான்; அவனும் நம்முடைய புத்திரன்தானே; அன்றியும் அவன்

மகாபுத்திமான்; ஆதலால் அவனுக்கு மந்திரிவேலை கொடுத்தால், நவநந்தர்களை எப்பொழுதும் ரக்ஷித்துவருவான்", என்றான். "ராக்ஷஸனும் அவ்வாறே செய்வோம்" என்று ஒப்புக்கொண்டான்.

மறுநாள் காலையில் அரசன் நவநந்தர்களையும் மௌரியனையும் சபைக்குவரவழைத்து "என்னருமை மக்களே! நீங்கள் இவ்வாறு சண்டைசெய்து கொண்டிருந்தால் அரசாங்கம் கெடும்; ஆதலின் நீங்கள் கலகஞ் செய்யவேண்டாம்; ஒவ்வொருவரும் ஒவ்வொரு வருஷமாகக் குஸுமபுரத்திலிருந்து கொண்டு அரசுபுரியுங்கள்!" என்று சொல்லி, நந்தர்கள் ஒன்பதின்மருக்கும் ஏகமாகப் பட்டாபிஷேகஞ் செய்வித்து மௌரியனை மந்திரியாக்கினான்; பின்பு மன்னவன் தவம்புரிவதற்காக ஸுநந்தையுடன் வனத்திற்குச் சென்றான். ராக்ஷஸன் அந்நகரிலேயே இருந்தான். நவநந்தர்களும் மௌரியனும் இராஜ்ய காரியங்களைக் கவனித்து வந்தனர். மௌரியன் வெகுபுத்தி சாலியாகையால் நந்தர்களைப் பேருக்குமட்டும் வைத்துக்கொண்டு, தானே சகல காரியங்களையும் நடத்திவந்தான். அவன் பல நகரங்களில் நிலங்களின் தீர்வையைக் குறைத்தான்; அநேக இலவச பாடசாலைகளையும், வைத்தியசாலைகளையும், தரும சத்திரங்களையும் ஏற்படுத்தினான்; அநியாயங்களையொழித்துத் தருமத்தை நிலைநாட்டினான்; இவ்வாறு செங்கோல் செலுத்திவந்த அவன் புகழ் எங்கும் பரவியது.

மௌரியனுக்கு அவனுடைய பல மனைவிகளிடம் நூறு குழந்தைகள் பிறந்தனர். மௌரியன் அவர்களைத் தக்கவாறு போஷித்து, தக்கவயது வந்தவுடன் தக்க ஆசிரியர்களைக் கொண்டு, அவர்களுக்குச் சகல சாஸ்திரங்களையும் கற்பித்தான். அவர்கள் நற்குணங்களிலும் நல்லொழுக்கத்திலும் தகப்பனை விடச் சிறந்தவர்களாயினர். அவர்களுள் நூறுமவன் சந்திர குப்தன் என்பவன். அவன் மற்றவர்களைக் காட்டிலும் அதி

சாதுர்ய புத்திசாலியாயும் இராஜ நீதியில் நுண்ணறிவுள்ளவனுயு மிருந்தான்.

புத்திரர்கள் இளமைப் பருவமடைந்ததைக் கண்ட மௌரியன் "நான் எப்பொழுதும் மந்திரி பதவியை வகித்துக் கொண்டிருப்பதால் பயனென்ன? பல புத்திரர்களைப் பெற்றிருந்தும் என்ன பயன்? எனக்கும் இராஜ புத்திரர் என்ற கௌரவப் பெயர் இருக்கின்றது. நான் இராஜ்ய தந்திரங்களையும் அறிந்திருக்கிறேன். ஆயினும் யாதும் பிரயோஜனமில்லை. எவ்விதமேனும் நந்த ராஜ்யத்தில் நமக்கும் பாகம் சம்பாதிக்கவேண்டும். அதற்காக நமது புத்திரர்களை இராஜ்யத்தில் தக்க உத்தியோகங்களில் அமர்த்திவைத்தால், பின்னல் ஏதேனும் அநுகூலம் ஏற்படும். புத்திசாலிகளான புத்திரர்களை ஏன் வீணே வீட்டில் உட்காரவைத்திருக்க வேண்டும்?" என்றெண்ணிக் காரியங்களில் குறைவுள்ள உத்தியோகஸ்தர்களைத் தள்ளி விட்டு, அவ்வேலைகளில் தன் புத்திரர்களை நியமித்தான். அதனுல் ராஜ்ய காரியங்கள் செவ்வனே நடைபெற்றன. சந்திர குப்தனுக்கு பொக்கிஷ அதிகாரி வேலை கொடுக்கப்பட்டது. அவன் அநேக தேசங்களையும் யவன ராஜாக்களையும்வென்று, அவர்களைக் கப்பம் கட்டுமாறு செய்தான். சந்திர குப்தனுடைய பெயரைக் கேட்டாலே யவன ராஜாக்கள் கலங்குவார்கள். இப்படிப்பட்ட பராக்ரமம் பொருந்திய சந்திரகுப்தனும் அவனுடைய சகோதரர்களும் தத்தம் வேலைகளைக் குறைவற நடத்திவந்தனர்.

இதற்கு முன் ராக்ஷஸனுல் உத்தியோகங்களில் நியமிக்கப்பட்டவர்கள் யாவரும் மௌரியனுல் நீக்கப்பட்டபடியால், அவர்கள் ராக்ஷஸனிடம் இவ்விஷயத்தைத் தெரிவித்துவிட்டு வருத்தத்துடன் சென்றனர். இதைக்கேட்ட ராக்ஷஸன் மிகுந்த துயரத்தோடு நவநந்தர்களிடஞ்சென்று "நான் ஓர் இரகசியம் கூறுகிறேன், கேளுங்கள்! இம் மௌரியன் நமக்கு உட்பகைவன்; இவன் என்றைக்கேனும் தன் புத்திரர்களுடன் சேர்ந்து

இந்த ராஜ்யத்தைப் பிடிங்கிக் கொள்வான். நோணப அது தோன்றினவுடனே களையாவிடில் பின்னல் அது முற்றிப் புற்றினவரைக் கொன்றுவிடுமன்றோ? அது போலப் பகைவனையும் கண்டவுடனேயே தொலைக்கவேண்டும்; இன்றேல், அவன் வலுத்துத் தீங்கு செய்வான்; ஆதலின், இம் மௌரியனையும் அவன் புதல்வர்களையும் இப்பொழுதே கொல்வதற்கு வழிதேட வேண்டும்; அதற்காகச் செய்யவேண்டிய தொன்றுண்டு. பகிரங்கமாய் ஆலோசனை செய்தால் பலதீங்குகள் நேரிடுமாகையினல் பூமியின் கீழ் ஒரு சுரங்கமுண்டாக்கி, அதில் ஒரு சபாமண்டபம் கட்டச்செய்து, அதில் நாமெல்லோரும் சிலகாலம் மந்திராலோசனை செய்வதுபோல் அபிநயிக்கவேண்டும்; ஒருநாள் மௌரியனையும் அவனுடைய புதல்வர்களையும் தந்திரமாய் அவ்விடம் வரவழைத்து, கதவை அடைத்துப் பூட்டிவிடவேண்டும்; பின்பு அவர்கள் இறந்துவிடுவார்கள்" என்று கூறினன். அதைக்கேட்ட நந்தர்கள் "மந்திரீ! நாளையதினம் சபையில் இவ்விஷயத்தை வெளியிட்டு முடித்துவிடுவோம்; நீரும் அங்கே வந்து கூறும்" என்று சொல்லி அவனை அனுப்பினர்கள்.

மறுநாள் ராக்ஷஸன் சபைக்குவந்து நந்தர்களையும் மௌரியன் முதலியோரையும் நோக்கி "சபையோர்களே! ஆறு காதேறிய சமாசாரம் வெளிப்பட்டு விடுமென்பது பெரியோர் கொள்கை; ஆதலின், நாம் இவ்வாறு பகிரங்கமாய் எந்த ஆலோசனையை நடத்துவதும் சரியன்று; பூமியின்கீழ ஒரு சுரங்கம் அமைத்து, அதில் ஒரு சபாமண்டபம் கட்டி அந்த மண்டபத்திலிருந்து ஆலோசனை செய்வதே தகுதியானது" என்று சொன்னன். அதுகேட்ட சபையோர் "அப்படிச் செய்வது சௌகரியந்தான்" என்று ஒப்புக்கொண்டனர். சில நாட்களில் பூமிக்குள் சுரங்கம் அமைத்துச் சபாமண்டபம் கட்டி முடிந்து விட்டது. நாலைந்து தடவை அதில் மந்திராலோசனையும் நடந்து வந்தது.

இப்படியிருக்க, ஒருநாள் ராக்ஷஸன் இரகசியமாகச் சில வேலைக்காரர்களை அழைத்துச் சுரங்கத்திலுள்ள மண்டபத்திற்குச் சென்று, நூற்றொரு மனிதர்களுக்குச் சகல பதார்த்தங்களுடன் சமையல் செய்து, நூற்றொரு பாத்திரங்களில் தீர்த்தமெடுத்து வைத்து, ஒவ்வொரு இலைக்கும் எதிரில் ஒவ்வொரு விளக்காக நூற்றொரு விளக்குகளும் ஏற்றிவைத்துத் தனக்குத் தெரிவிக்குமாறு கட்டளையிட்டான். வேலைக்காரர்கள் விரைவில் அவ்வாறே செய்து முடித்து விட்டு ராக்ஷஸனிடம் வந்து தெரிவித்து விடை பெற்றுச் சென்றனர்.

பின்பு ராக்ஷஸன் நந்தர்களுடைய முத்திரை குத்தின காகித மொன்றில் "அன்புள்ள மௌரியரே! இன்று சில முக்கிய காரியங்களைப் பற்றி ஆலோசிக்க வேண்டியதாயிருப்பதால், இது கண்டவுடன் நமது சுரங்கத்திலுள்ள சபாமண்டபத்திற்குத் தாங்கள் புத்திரர்களுடன் வந்து சேருக" என்று எழுதிச் சேவகனிடம் கொடுத்து ஏதோ வாய்ச்செய்தியும் சொல்லியனுப்பினான். உடனே சேவகன் மௌரியனிடஞ் சென்று "ஐயா! ஏதோ அவசரகாரிய நிமித்தம் நந்தர்களும் ராக்ஷஸரும் புதிய சபாமண்டபத்திற்கு வந்திருக்கின்றனர். தங்களிடம் இக்கடிதத்தைக் கொடுத்துத் தங்களைப் புத்திரர்களோடு விரைவில் அங்கே அழைத்துவரச் சொன்னார்கள்" என்றுகூறிக் கடிதத்தைக் கொடுத்து விடைபெற்றுச் சென்றான். அக்கடிதத்தைப் பிரித்துப் பார்த்தவுடன் மௌரியன், "ஓஹோ! ராஜ்யகாரியம் அவசரமாயிருப்பதால் தாமதிக்கக் கூடாது" என்றெண்ணிப் புத்திரர்களையும் அழைத்துக் கொண்டு பரபரப்போடு புதிய சபாமண்டபத்திற்குச் சென்றான். அவர்கள் எல்லோரும் சுரங்கத்தில் நுழைந்தவுடன் சேவகர்கள் ராஜாக்ஞைப்படி வாயிற் கதவை மூடிப் பூட்டிக் கற்களாலும் சுவர்கட்டி விட்டார்கள்.

உள்ளே சென்றவர்கள் நந்தர்களையாவது ராக்ஷஸனை யாவது மற்றெவரையாவது அங்கே காணவில்லை. நூற்றொரு இலைகளில் பலவகைப் பக்ஷணங்களுடன் அன்னம் வைத்திருப் பதையும், நூற்றொரு பாத்திரங்களில் ஜலம் வைத்திருப்பதை யும், நூற்றொரு விளக்குகள் எரிவதையும் கண்டனர். உடனே அவர்கள் திகைத்துப்போய் "ஐயோ! ராக்ஷஸன் நமக்குக் கொலைச்சோறு போட்டுக் கொன்றான்; நாம் நம்பிக்கையால் மாத்திரம் மோசம்போனோமே யன்றிப் புத்திக் குறைவாலல்ல" என் றெண்ணிக்கொண்டே வாசற் கதவைப் போய்ப் பார்த்தனர். அது அடைத்துப்பூட்டி யிருப்பதைக்கண்டு, திரும்பியும் மண் டபத்திற்கு வந்தனர். அப்பொழுது மௌரியன் தன் புத்திரர் களைநோக்கி, "பிள்ளைகளே! ராக்ஷஸனும் நந்தர்களும் இப்பொ ழுது நம்மை ஏமாற்றிவிட்டனர்; சென்றது பற்றி வருந்திப் பயனில்லை; தெய்வ சாஸனத்தைமீற, யாராலும் ஆகாது; இப் பொழுது நாம் எல்லாரும் உட்கார்ந்து உண்ணத் தொடங் கினால், மறுவேளைக்கு உணவின்றி இறக்கவேண்டும்; அவ்வாறு செய்வதைக் காட்டிலும் நமக்குள் தைரியசாலியான ஒருவன் இவ்வளவு ஆகாரமும் ஆகும் வரையில் உயிரோடிருந்து தெய்வ கதியால் வெளிவந்தால், அவனே நமக்குத் தீங்கு செய்தவரை மூலத்துடன் அழிக்கட்டும்; மற்றவர்கள் ஒருவர்மேலொரு வராகப் படுத்துக்கொண்டு உயிரை விடுவோம்! நாம் இன்று இறக்காவிடினும் நாளை இறப்பது திண்ணம்" என்று சொன் னான். உடனே சந்திரகுப்தனைத் தவிர மற்றவரில் ஒருவனும் உயிருடனிருந்து பழிதீர்க்க விரும்பவில்லை. சந்திரகுப்தனே அவ்வாறு செய்யத் துணிந்தான். பிறகு மற்றவர்கள் ஒவ்வொரு வராகப் படுத்துக்கொண்டனர்.

அப்பால் சந்திரகுப்தன் பெருந்துயரத்துடன் மௌரியனை நமஸ்கரித்து, "தந்தையே! உங்களுக்கு இந்தகதி வரலாமா? தெய்வம் இவ்வாறு செய்தது; இனித் தெய்வம் ஒன்று

மட்டும் எனக்கு அநுகூலமா யிருக்குமாயின், நான் ஒருவனே வெளிச்சென்று பகைவரை மூலத்துடன் அழிப்பேன்; பின்பு அவர்களுடைய ராஜ்பத்தையும் ஆள்வேன்; இது சத்தியம்" என்று சொன்னான். உடனே மௌரியன்" குழந்தாய்! நீ எங்களுக்காகச் சிறிதும் வருந்தவேண்டாம்; தெய்வகதியால் இவ்வாறு நேர்ந்தது; ஒவ்வொருவருக்கும் அவரவர் செய்த வினைகளே இன்பதுன்பங்களை அளிக்கின்றன. மனிதன் தீவினைப் பயன் நேரிட்டபோதும் நல்வினைப்பயன் ஏற்பட்டபோதும் அவற்றைத் தடுக்க சக்தியற்றவன். இப்பொழுது நாம் வீணே வருந்திப் பயனென்ன? நீ இவ்வுணவுகளைச் சேர்த்து வைத்துச் சிறுகச்சிறுகப் புசித்துக்கொண்டு வெளிவந்து, பகைவரைப் பழிக்குப்பழி வாங்கிவிடு; அதுவே மறுவுலகத்திலும் எங்களுக்குத் திருப்தியைத் தரும்" என்று கூறிவிட்டுத் தானும் படுத்துக் கொண்டான்.

அப்பால் சந்திரகுப்தன் நூறு இலைகளிலுள்ள உணவையும் ஓரிடம் எடுத்துக் குவித்துவிட்டு, நூறு பாத்திரங்களிலுள்ள நீரையும் ஒரு பாத்திரத்தில் கொட்டிவைத்து, நூறு விளக்குகளையும் அணைத்துவிட்டு, ஓர் இலை, ஒரு பாத்திரம், ஒரு விளக்குமட்டும் வைத்துக் கொண்டான். ஒரு விளக்கு அணையும்போது மற்றொரு விளக்கை ஏற்றிவைத்துக் கொண்டு பசிக்கும்பொழுது கொஞ்சங் கொஞ்சமாக உணவுண்டு காலங் கழித்தான். அவன் தன் கண்ணுக் கெதிரில் தன் சகோதரர்களும் தன் தகப்பனும் பசியால் கைகால்களை உதைத்துக் கொண்டு இறப்பதையும் பார்த்துப் பொறுத்துக்கொண் டிருந்தான். வீரர்கள் தங்கள் லக்ஷியத்திற் கண்ணு யிருப்பார்களே ஒழிய எதையும் பொருட் படுத்தமாட்டார்கள்.

# மூன்றாம் அத்தியாயம்

## பர்வதேசுவரனின் பரீக்ஷை

இதுநிற்க, ராக்ஷஸன் மௌரியனையும் அவனுடைய புத்திரர்களையும் சுரங்கத்திலடைத்து விட்ட பிறகு, சந்திரகுப்தன் முதலியோர் இருந்த உத்தியோகங்களில், தன்னைச் சேர்ந்தவர்களை நியமித்துத் தான் மந்திரியாயிருந்து ராஜ்ய காரியங்களைக் கவனித்து வந்தான். மௌரியர் முதலியோரைப் பற்றி நினைக்கவேயில்லை. இவ்வாறு சிலகாலஞ் சென்றது. அப்பொழுது அயல் தேயத்து அரசனாகிய பர்வதேசுவரன், சந்திரகுப்தன் முதலியோர் குகையிலடைபட்டு இறந்ததைக் கேள்விப்பட்டுத் தான் செலுத்தவேண்டிய கப்பத்தை நிறுத்தி விட்டான். அப்பொழுது ஒருகிழ மந்திரி "அரசே! சந்திரகுப்தன் இறந்திருக்க மாட்டான்; நம்போன்றவரைப் பரிசோதிக்கவே இவ்வாறு பொய்யுரை பரவவைத்திருக்கின்றான்; கப்பத்தை அனுப்பாவிடில், உடனே சந்திரகுப்தன் சேனைவந்துவிடும்; ஆதலால் கப்பத்தை அனுப்பிவிடுங்கள்" என்று கூறினான். அதைக்கேட்ட பர்வதேசுவரன், சந்திரகுப்தன் பிழைத்திருக்கிறானா, இல்லையா என்பதைப் பரிசோதிப்பதற்காக ஓர் உபாயம் செய்தான். தகுந்த சிற்பிகளைக்கொண்டு அரக்கிலும் மெழுகிலும் நனைத்த துணியில் சிங்கத்தின் உரோமங்களை ஒட்டி, உருக்குக் கம்பிகளையும் பிணைத்து, ஒரு சிங்கம் செய்யச்சொல்லி, அதை ஒரு கூட்டில்வைத்து, நாலாபக்கமும் இரும்புக் கம்பிகளால் வாயிலின்றி அடைக்குமாறு செய்தான். பின்பு அவன் அச் சிங்கத்தைக் கூட்டோடு தூக்கிக்கொண்டு பாடலீபுரஞ் செல்லும்படி சில வீரர்களுக்குக் கட்டளையிட்டு அவர்களிடம் "இக் கூண்டைப் பிரிக்காமல் உள்ளேயிருக்கும் சிங்கத்தை வெளியாக்

கின லொழியக் கப்பம் கொடுக்கப்பட மாட்டாது; வெளிப் படுத்தினல் நின்ற கப்பம் வட்டியுடன் அனுப்பப்படும்'' என்று நவநந்தர்களிடம் தெரிவிக்கும்படி சொல்லி யனுப்பினன். பிறகு அவர்கள் அக் கூட்டைத் தூக்கிக்கொண்டு குஸுமபுரஞ் சென்று அரண்மனைவாயிலில் இறக்கிவைத்துத் தங்கள் அரசன் கட்டளையை நந்தர்களிடம் தெரிவித்தனர். அந்தப் பொய்ச் சிங்கத்தைக் கண்ட நந்தர்கள் கதிகலங்கி ராக்ஷஸன் முதலிய மந்திரிகளை வரவழைத்து அதைக்காட்டி அதன் விவரத்தைக் கூறினர். ராக்ஷஸன் முதலியோர் கூண்டைச் சுற்றிப்பார்த்தனர்; ஒரு புலமும் தெரியாமையினல் " அரண் மனைக்கு வந்திருக்கும் விசித்திரக் கூண்டைப் பரிசோதித்துச் சிங்கத்தை வெளிப்படுத்தவேண்டும்'' என்று நகரத்திலுள்ள வித்வான்களுக்குப் பறை சாற்றி அறிவித்தார்கள். அவர் களும் எல்லோரும் வந்து பார்த்தனர். சிங்கத்தை வெளி யாக்கும் வழி தெரியவில்லை. அப்பொழுது ஒரு கிழமந்திரி, 'மௌரிய புத்திரனகிய **சந்திரகுப்தன்** இப்பொழுது இருந் தால், இச்சிங்கத்தின் உண்மையைக் கண்டறிந்து வெற்றி பெறுவான்; அவன்மட்டும் இங்கே இருந்தால் இந்தப் பர் **வதேசுவரன்** இவ்வளவு துணிந்து கூட்டையனுப்பிப் பரீக்ஷை செய்வான? இனி ஒவ்வொரு அரசனும் இவ்வாறுதான் சோதனை செய்யப்போகிறன்'' என்று சொன்னன். இதைக் கேட்ட ராக்ஷஸன் " இச் சிங்கத்தை வெளிப்படுத்துகிற வழியை அறிந்திருப்பவன் தான் பிழைத்திருக்கவும் உபாயம் தேடியிருப்பான்; அவனல் நமது காரியமும் ஒருவேளை நிறைவேறக் கூடும்'' என்று நினைத்துச் சுரங்கத்தின் திறவு கோல்களை எடுத்துக் கொண்டு சுரங்கவாயிலுக்குச் சென்று, கட்டியிருந்த கல்சுவரை இடித்துப் பூட்டைத் திறந்து உள்ளே

சென்றான். அங்கே சந்திரகுப்தன் இருக்கக்கண்டு விரைந்தோடி அவன்முன் கீழேவிழுந்து புரண்டு, "ஐயோ! என்ன அநியாயம் இது? இவ்வாறு உங்களை இங்கே யார் அடைத்தார்கள்? எனக்கு இவ்விஷயம் இப்பொழுதுதான் தெரிந்தது; உடனே ஓடிவந்தேன்; தெய்வாதீனமாய் நீயாவது பிழைத்திருந்தாயே! இன்றேல், எங்களுடைய கதி அதோ கதியாகும்; நடந்ததைப்பற்றி வருந்திப்பயனில்லை; எழுந்திரு; அரண்மனைக்குப்போவோம்; இன்று முதல் உனக்குப் பழைய படி, பொக்கிஷ அதிகாரிவேலை தருகிறோம் வா;" என்று வருத்தத்துடன் கூறினான்.

அதைக்கேட்ட சந்திரகுப்தன் ராக்ஷஸனைப்பார்த்து "ஐயா! இந்தக் குகையில் என் தந்தையும் சகோதரர்களும் பசியால் கை கால்களை உதைத்துக்கொண்டு உயிரை விட்டார்கள்; அதைப் பார்த்துக்கொண்டிருந்த என் உயிர் இன்னும் போகவில்லையே! ஆத்மஹத்தி செய்வது மகாபாபமென்றெண்ணி, இந்த இலைகளிலுள்ள உணவைப் புசித்து வருகிறேன்; நானும் சில நாளில் அவர்களைப் பின்பற்றப் போகிறேன்; நான் இங்கே நூறு பேர்களோடு வந்து, இப்பொழுது ஒருவனாக எவ்வாறு வெளிவருவேன்? எனக்கு இந்த ராஜ்யத்தில் என்ன வேலை?" என்று சொல்லி யழுதான். உடனே ராக்ஷஸன் "அப்பா! சந்திரகுப்தா! நீ வருந்தாதே! எல்லாம் விதியின் செயல். அதை வெல்வதற்கு யாராலாகும்? இது பற்றியே ஆன்றோர்

"ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான் முந்துறும்" என்று கூறினர்.

மனிதனுக்கு நன்மை தீமைகளைக் கொடுப்பது, முற்பிறப்பில் செய்த இருவினையுமேயன்றி வேறல்ல. எவனும் வினைப்பயனை

அநுபவித்தே தீரவேண்டும். இன்றேல், அது பிறவிகள்தோறும் தொடர்ந்து வரும். உன்னுடைய கஷ்டகாலம் இன்றோடு நீங்கி விட்டது ; நீயாவது வெளியே வராவிடில், எங்களுக்குச் சமாதானம் ஏற்படாது ; நீ இப்பொழுதே உன் அரண்மனைக்கு வந்து உன் பழைய வேலையை ஏற்றுக்கொள் !" என்று பல வாறு நயம்படக் கூறியழைத்தான். அதுகேட்ட சந்திர குப்தன் " எப்பொழுது வெளியே போகப்போகிறோம் ?" என்று எண்ணியவனா யிருந்தபோதிலும், ராக்ஷஸனுடைய நிர்ப்பந்தத்தின்பேரில் வெளியே வருபவன்போல் அபிநயித்து, அவனோடு கூட அரண்மனைக்கு வந்தான்.

சந்திரகுப்தனைக் கண்டதும் நந்தர்கள் எழுந்து, அவனைக் கட்டிக்கொண்டு அழுது, பல உபசாரங்கள் கூறிச் சமாதானம் செய்தார்கள். பின்பு ராக்ஷஸன் சந்திரகுப்தனுக்கு அந்தச் சிங்கக் கூட்டைக் காட்டி, அதன் வரலாற்றைக் கூறி அச்சிங்கத்தை வெளியேற்றும்படி சொன்னான். உடனே சந்திரகுப்தன் கூட்டினருகே சென்று உற்றுப்பார்த்து, "இக் கூண்டு திறப்புக்குரிய மார்க்கமில்லா திருக்கும்பொழுது, இதனுள் சிங்கம் எவ்வாறு நுழைய முடியும்? இப்பஞ்சராக்ஷகன் இதைச் சுற்றி வரும்பொழுது, இச் சிங்கமும் சுற்றுகின்றது. ஆயினும் இது உண்மையான சிங்கமன்று ; அரக்கிலும் மெழுகிலும் நனைத்த துணியில் சிங்கத்தின் உரோமங்களை ஒட்டி, உருக்குக் கம்பிகளையும்பிணைத்து, சிற்பியின் சாதுரியத்தால் செய்யப்பட்ட கபட சிங்கமேயாகும் ; இன்னும் இதனைச் சோதித்தறிவோம்" என்று நிச்சயித்துப் பழுக்கக் காய்ச்சிய இருப்புத் துண்டுகளை வரவழைத்து, அவைகளைக் கூண்டிற்குள் நீட்டினான். உடனே நெருப்பின் வெப்பந் தாக்கிச் சிங்கத்தின்மேல் பூசப்பட்டிருந்த அரக்கும் மெழுகும் உருகிப்

போய் இரும்பின் சலாகைகள் மட்டும் எஞ்சி நின்றன. இதைக் கண்ட சபையோர் ஆச்சரியமடைந்தனர்.

சிங்கக் கூண்டைத் தூக்கிவந்த சேவகர்கள் தாங்கள் தோல்வியுற்றதைக் கண்டு, நந்தர்களால் தங்களுக்கு என்ன தண்டனை ஏற்படுமோவென்று பயந்து, ஜனக் கூட்டத்திற்குள் நுழைந்து மறைந்து சென்று, பர்வதேசுவரனிடம் நடந்த வரலாற்றைக் கூறினர். உடனே அவ்வரசன் சந்திரகுப்தன் பிழைத்திருக்கிறானென்றறிந்து நின்ற கப்பத்தை வட்டியுடன் அனுப்பினான்.

சந்திரகுப்தன் தங்களுக்கு அவமானம் நேராமல் காத்ததுபற்றி நந்தர்கள் மகிழ்ச்சி யடைந்தனர். பின்பு அவர்கள் சந்திரகுப்தனுக்குக் கொஞ்ச காலம் பொக்கிஷத்தில் வேலை கொடுத்து உற்சாகப்படுத்தினார்கள். அவனும் தன் வேலையைச் செவ்வையாக நடத்தி வந்தான். பின்பு ராக்ஷஸன் "சந்திரகுப்தன் அதி புத்திசாலி; இவனைச் சமீபத்தில் வைத்திருந்தால் நமக்குத் தீங்கு செய்வான்; ஆதலின் இவனைத் தந்திரமாகக் கொல்ல வேண்டும்" என்று யோசித்து, அவனைத் தரும சாலையில் அக்ர போஜனம் தக்ஷிணை போஜனம் இவைகளுக்குச் சீட்டுக் கொடுக்கும் அதிகாரத்தில் நியமித்தான்.

முற்காலத்தில் அரசர் புசிக்குமிடங்களில், அவர்களோடு கூடச் சாப்பிட ஒரு பிராமணனும், அதற்குச் சற்று தூரத்தில் நூறுபேரும் உட்காருவது வழக்கம். அரசனோடு சேர்ந்து சாப்பிடும் பிராமணனுக்கு அக்ரபோஜி என்று பெயர். அந்தச் சாப்பாட்டுக்கு அக்ர போஜனம் என்று பெயர். அதற்கு அழகும் பரிசுத்தமும் ஞானமும் இளவயதும் பொருந்திய வாலிபர்களை நியமிப்பது வழக்கம். அதற்குத் தக்ஷிணை மூன்று பொன் நாணயம். அரசனுக்குச் சற்று தூரத்தில் தக்ஷிணை

போஜனம் என்று ஒரு ஸமாராதனை பிரதி தினமும் நடக்கும். அதில் நூறு பிராமணர்கள் உட்காரவேண்டும். அதற்கு தக்ஷிணை ஒரு பொன் நாணயம். அதில் ஒருவன் மாதத்திற்கு ஒரே தடவைதான் சாப்பிடலாம். ஏழைகள் பிழைப்பதற்காகவே இவ்வாறு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்தச் சாப்பாட்டுக்குச் சீட்டுக் கொடுப்பவன் தினந்தோறும் வாயிலில் நின்றுகொண்டு நேற்றுவந்தவன் இன்று வராமல் பார்த்துச் சீட்டுக் கொடுக்கவேண்டும். அவன் சில சமயம் பிராமணர்களுடைய வாயால் திட்டுக் கேட்கும்படி நேரிடும். அவ்வாறே சந்திரகுப்தனும் பிராமண சாபத்தால் இறக்கட்டுமென்று நினைத்து, ராக்ஷஸன் அவனை அவ்வேலையில் நியமித்தான்; அவனுக்குப் பொக்கிஷ அதிகாரிக்குள்ள சம்பளத்தையும் முன்போலவே கொடுத்து வந்தான்.

சந்திரகுப்தனுக்கு ராக்ஷஸன் கருத்து எவ்வாறோ தெரிந்து விட்டது. அதனால் அவன் யார் வந்து கேட்டாலும் இல்லையென்று கூறாமல் சீட்டைக் கொடுத்து, அவ்வேலையைச் செவ்வையாக நடத்தி வந்தான். அதனால் எல்லாப் பிராமணர்களும் அவனை வாழ்த்திச் சென்றனர்.

ஒருநாள் தக்ஷிணை போஜனத்திற்கு எல்லோரும் உட்கார்ந்து விட்டனர். அக்ரபோஜனத்திற்குத் தகுந்த பிராமணன் கிடைக்காததால், அந்தச் சீட்டைக் கையில் வைத்துக்கொண்டு சந்திரகுப்தன் சத்திரத்து வாயிலில் நின்று, கிழக்கே பார்த்துக்கொண் டிருந்தான். அப்பொழுது ஒரு பிராமணன் கையில் ஒரு பழைய மடிஸஞ்சியும் ஸ்தாலியும் எடுத்துக்கொண்டு சந்திரகுப்தனை நோக்கி வந்தான். அவன் வரும்போது ஓர் அறுகங்கட்டை அவன் காலில் தடுக்கிற்று. அதனால் அவன் கீழே விழுந்தான். விழுந்ததில் கைகால்களில்

அடி பலமாகப்பட்டது. உடனே அவன் கீழே உட்கார்ந்து, ஸ்தாலியிலுள்ள நீரைவிட்டு, அறுகங்கட்டையை ஆட்டி, ஒரு குச்சியால் தோண்டி வேருடன் பிடுங்கி, நெருப்பில் போட்டுச் சாம்பலாக்கி, சாம்பலை நீரில் கரைத்துக் குடித்தான். பின்பு அவன் எழுந்து சந்திரகுப்தனிடம் வந்து, "ஐயா! தக்ஷிணை போஜனத்திற்குச் சீட்டுக்கொடுப்பவர் யார்?" என்று கேட்டான். அதுகேட்ட சந்திரகுப்தன் "ஐயா! நான்தான் சீட்டுக்கொடுப்பவன்; தாங்கள் சற்றுமுன் வழியிலிருந்த ஓர் அறுகங்கட்டையைப் பொடிசெய்து நீருக்கிக் குடித்தீரே! அதன் காரணம் யாது? தங்களுடைய இருப்பிடம் எது? தங்கள் பெயரென்ன? தங்களுக்கு நான் என்ன உதவி செய்யவேண்டும்? தயவுசெய்து தெரிவிக்கக் கோருகிறேன்" என்முன். அதற்குப் பிராமணன் அவனைப் பார்த்து "அப்பா, எனதிருப்பிடம் தென்தேசம்; நான் காட்டில் தவஞ்செய்துகொண் டிருப்பவன்; என் பெயர் சாணக்யன். நான் ஒருவருக்கும் தீங்கு செய்வதில்லை; எனக்கு யார் தீங்கு செய்தாலும் கோபாக்கினி கிளம்பி எரியும்; கேடு செய்தவனை வேருடன் தொலைத்தாலொழிய, என் கோபத்தீ தணியாமல் என்னையே எரிக்கும்; வழியிலிருந்த அறுகங் கட்டை தடுக்கி என்னைக் கீழே தள்ளிக் காயப்படுத்திற்று. அதனால் என் கோபத்தீ ஜ்வலித்தது; அதைத் தணிப்பதற்காக அவ்விடம் உட்கார்ந்து, அதை வேருடன் கல்லியெடுத்து நீருக்கிச் சாப்பிட்டேன்" என்முன்.

அதுகேட்ட சந்திரகுப்தன் "ஐயா! பலவானுகிய அரசன் உமக்குத் தீங்கு செய்தால் நீர் என்ன செய்வீர்?" என்று கேட்க, சாணக்யன், "அப்பா! என் புத்திவல்லமையை நீ அறிய மாட்டாய்; நான் அறிவின் பலத்தால் ஆயிரம் அரசர்களையும் வெல்லுவேன்; இஃதிருக்கட்டும், நீ எனக்கொரு சீட்டுக்கொடு

எனக்குப் பசியாயிருக்கிறது ; சாப்பிட்டபின் ஏதேனும் தக்ஷிணைகிடைத்தால், புதிதாய் மடிஸஞ்சியும் சொம்பும் வேஷ்டியும் வாங்கிக்கொண்டு சாயந்திரமே இருப்பிடஞ் செல்லவேண்டும்" என்றான்.

அதைக்கேட்டு வியப்புற்ற சந்திரகுப்தன் அவனைப் பார்த்து, "ஐயா' நமஸ்காரம்! அடியேனைக் காத்தருளல் வேண்டும்; நந்தர்கள் சொற்படி, ராக்ஷஸன், என்னையும் என் சகோதரர் தொண்ணூற்றொன்பது பேர்களையும் என் தகப்பனையும் கொல்லுவதற்காக ஒரு சுரங்கத்தில் தந்திரமாய் அடைத்துவிட்டான் ; என்னைத் தவிர மற்றவர் யாவரும் இறந்து விட்டனர்; நான் மட்டும் தெய்வாதீனமாகத் தப்பிப் பிழைத்தேன்; நந்தர்களுக்கு நாங்கள் யாதொரு தீங்கும் செய்யவில்லை. ஆயினும் நந்தர்கள் பிந்தி எங்களால் ஏதேனும் தீங்கு நேரிடுமோ வென்றெண்ணி, என்னையும் என்சகோதரர்களையும் சுரங்கத்திலடைத்துக் கொன்றனர்; அவர்கள் மகா கொடிய சுபாவமுள்ளவர்கள் ; ஆதலின் தங்களுக்கும் தீங்கு செய்வார்கள் ; தங்கள் கோபாக்கினியால் நந்தர்களைக் கொன்று. எனக்கு உதவி செய்து என்னைக் காத்தருள வேண்டும்" என்றான். அதுகேட்ட சாணக்யன் "அப்பா ! அப்படியே செய்கிறேன்; எனக்குப் போஜனத்திற்குச் சீட்டுக் கொடு !" என்று கேட்டான். உடனே சந்திரகுப்தன் அக்ரபோஜனத்திற் குரிய சீட்டைச் சாணக்யனிடம் கொடுத்து, "ஐயா ! உள்ளே சென்றதும் நூறு இலைகள் போட்டுப் பக்ஷணங்களோடு பரிமாறி யிருக்கும்; நீங்கள் அவைகளில் உட்கார வேண்டாம் ; இன்னும் கொஞ்ச தூரம் தாண்டி உள்ளே சென்றால், பத்து இலைகள் போட்டுத் தங்கக் கிண்ணிகள் வைத்துப் பரிமாறியிருக்கும் ; அவ்விடஞ் சென்று ஓர்,

ஓரத்திலேயில் உட்கார்ந்து சாப்பிட்டு வாருங்கள் !'' என்று சொல்லி உள்ளே கூட்டியனுப்பினன். சாணக்யனும் சீட்டைப் பெற்றுக்கொண்டு உள்ளே சென்றான்.

---

## நான்காவது அத்தியாயம்

---

### சாணக்யனின் சபதமும் முயற்சியும்

சாணக்யன் உள்ளேசென்றதும் ஒரு பக்கத்தில் நூறுஇலைகள் போட்டுப் பரிமாறி யிருப்பதையும், அதைத் தாண்டிச் சிறிது தூரத்தில் பத்து இலைகள் போட்டு அவற்றில் பத்துத் தங்கக் கிண்ணிகளும் வைத்திருப்பதையும் கண்டான். அதைக் கண்ட சாணக்யன் அங்கே யிருப்பவர்களைப் பார்த்து, “ஐயா! இந்த இலைகளும் கிண்ணிகளும் யாருக்காக வைக்கப்பட்டிருக்கின்றன ?'' என்று கேட்டான். அதற்கு அவர்கள் “ஐயா ! இவைகளுள் ஒன்பது கிண்ணிகள் நவநந்தர்களுக்காகவும், மற்றொன்று சகல நூல்களையும் உணர்ந்து தேர்ந்த வித்துவானன பிராமணனுக்காகவும் இங்கே வைக்கப்பட்டுள்ளன'' என்று சொன்னார்கள். உடனே சாணக்யன் ஓர் ஓரத்தில் வித்துவானுக்குரிய ஆசனத்தில் உட்கார்ந்தான். அதைக் கண்டு அங்குள்ளவர்கள் ஆச்சரிய மடைந்தனர்.

போஜன காலம் நெருங்கவே நவநந்தர்களும் அவ்விடம் வந்து சேர்ந்தார்கள். அவர்கள் அங்கே அக்ரபோஜனத்திற்காக குரூபியான வாலிபனொருவன் சமமாகப் பீடத்தின் மீது உட்கார்ந்திருப்பதைக் கண்டு, கோபங் கொண்டு, “அடே! நீ யார் ? மகாவித்துவானுக்குரிய ஆசனத்தில் சிறிதும் சங்கையின்றி உட்கார்ந்திருக்கிறாயே ! இவ்விடம் விட்டு எழுந்திரு !''

என்று கூறினர். அதைக்கேட்ட சாணக்யன் "அரசர்களே! நான் யாராயிருந்தாலென்ன? வித்தையில் எனக்குச் சமான மானவன் ஒருவனிருந்தால், அவன் என்னெதிரே வந்து பரீக்ஷிக்கட்டும்; இன்றேல், உங்களுக்காகப் பயந்து இவ்வாசனத்தை விட்டு விலகமாட்டேன்; இதோ சந்திரகுப்தன் கொடுத்த சீட்டு கையில் இருக்கிறது" என்று சொன்னான். உடனே நந்தர்கள் "அடே! சேவகர்களே! இவன் அகம்பாவமுள்ள பிரம்மசாரி; மரியாதையின்றிப் பேசுகின்றான்; இவன் கையைப் பிடித்திழுத்து வெளியே தள்ளுங்கள்!" என்றனர். அந்தப் பிராமணனுடைய தேஜஸைக் கண்டு ஒருவரும் சமீபத்தில் நெருங்கவில்லை. உடனே நந்தர்கள் கோபங் கொண்டு சாணக்யனுடைய கையைப் பிடித்திழுத்துத் தள்ளிவிட்டு, தக்ஷிணை போஜனத்திலிருந்த நூறு பேர்களில் ஒருவரை அழைத்துத் தங்களுடைய சமீபத்தில் உட்கார வைத்துக் கொண்டு, போஜனம் செய்யத் தொடங்கினர்

சாணக்யனோ பசியுடன் சிறிது நேரம் மறைந்திருந்து, நந்தர்கள் சாப்பிடத் தொடங்கியவுடன் காலஸர்ப்பம் போல் சீறிக்கொண்டு எதிரேவந்து அவர்களைப்பார்த்து "ஏ பாவிகளே! நான் யார்? என்று விசாரித்தீர்களா? நான் ஒரு தவசியல்லவா? என்னுடன் பந்திபோஜனம் உங்களைப் போன்ற பாவிகளுக்குக் கிடைக்குமா? உங்களுடைய நன்மையைக் கோரிவந்த என்னை வலியவந்த ஸ்ரீதேவியை யுதைத்துத் தள்ளுவதுபோல், அடித்துத் துரத்தினீர்கள்; நான் குரூபியாயிருப்பதால், உங்களோடு போசனம் பண்ணத் தகுதியற்றவனா யிருந்தாலும், என் பசிக்கு ஏதேனும் ஆகாரம் கொடுக்க ஏற்பாடு செய்யக்கூடாதா? இவைகளின் பயனைச் சீக்கிரம் அடைவீர்கள்! பெரிய மலைச்சிகரத்திலிருந்து சிங்கம் கொழுத்த யானையை இழுத்துத் தள்ளுவது

போல், உங்களைச் சிங்காசனத்திலிருந்து தள்ளி, வெட்டி யெறிந்து வாசலில் நிற்கும் சந்திரகுப்தனுக்குப் பட்டாபிஷே கஞ்செய்து வைக்கிறேன்! அதுவரையில் என் உச்சிக் குடுமி யைக் கட்டுவதில்லை'' என்று சபதம் செய்து, சிகையை அவிழ்த்து விட்டு வெளியே கிளம்பினன். அதைக் கேட்ட நந்தர்கள் "பசியால் பிராமணன் என்னவோ பிதற்றுகிறான்; இவன் நமக்கு என்ன தீங்கு செய்யமுடியும்?'' என்று பரி காசஞ் செய்து கொண்டே புசித்தனர்.

சாணக்யன் வெளியே வரும்பொழுது ஓர் அண்டாவில் நிறப்பப்பட்டிருந்த ஜலத்தைத் தன் பாத்திரத்தி லெடுத்துக் கொண்டு சந்திரகுப்தனிடம் வந்து "அடே! உன்னைக் குஸுமபுரத்துக்கு அரசனுக இப்பொழுதே செய்து விட்டேன்; இது தான் பட்டாபிஷேகம்'' என்று சொல்லி, அவன் தலையில் தன் கையிலிருந்த நீரால் அபிஷேகஞ் செய்து, நேராகச் சந்திரகுப் தன் வீட்டுக்குச் சென்று புசித்து விட்டு, நடந்த விவரத்தைச் சொல்லி "அப்பா! நீ கொஞ்ச காலம் இங்கே இரு! நான் வேற்றரசரின் உதவியால் நந்தர்களைத் தொலைக்க வழி தேடு கிறேன்,'' என்று கூறிவிட்டு, வெளியே புறப்பட்டான்.

பின் சாணக்யன் தன்னோடுசேர்ந்து படித்தவனும், சாஸ் திரங்களில் மகாவல்லமை யுள்ளவனும், ஆத்மமித்திரனுமான இந்துசர்மா என்பவனை வரவழைத்து "நண்ப! பாடலீபுரத்தில் நவநந்தர்கள் சந்திரகுப்தனுடைய தகப்பனையும் அவனுடைய தொண்ணூற்றென்பது சகோதரர்களையும் தந்திரமாய் ஒரு சுரங்கத்தி லடைத்துக் கொன்றுவிட்டு, அவனையும் கொல்வ தற்காக ஓர் அன்ன சத்திரத்தில் அதிகாரியாக நியமித்திருந் தனர்; நான் ஒரு நாள் பசியுடன் அங்கேபோய், சந்திரகுப்தனி டம் சீட்டுப் பெற்று, தருமசாலைக்குள் சென்று, புசிப்பதற்காக

ஓர் ஆசனத்தில் உட்கார்ந்தேன்; அச்சமயம் நவநந்தர்கள் அவ்விடம் வந்து, என்னைக்கண்டு கோபங்கொண்டு, வாயில் வந்தபடி கொடுஞ் சொற்களைப் பேசிக் கையைப் பிடித்துக் கரகர வென்று இழுத்துத் தள்ளினார்கள். அப்பொழுது நான் என் சிகையை அவிழ்த்துவிட்டு, "நந்தர்களைக் கொன்று சந்திர குப்தனுக்கு முடிசூட்டிய பின்னரே இச்சிகையைக் கட்டுவேன்" என்று சபதங்கூறி வந்திருக்கிறேன்! நீ எனக்கு முக்கிய சிநேகிதனானதால், இக்காரியத்தில் மிக்க உதவி செய்ய வேண்டும்! 'நீ இப்பொழுதே பௌத்த சந்நியாசி வேஷம் பூண்டு, ஜீவஸித்தி என்ற பெயருடன் அமாத்ய ராக்ஷஸன் முதலிய அதிகாரிகளிடஞ் சென்று, உனக்குச் சாஸ்திரங்களிலுள்ள வல்லமையைக் காட்டி, அவர்களுக்கு நண்பன்போலிருந்து, பாடலீபுரத்தில் நடக்கும் ராஜ்யகாரியங்களை வேஷதாரிகளான உனது சிஷ்யர்கள் மூலமாய் அவ்வப்போது தெரிவிக்கவேண்டும்" என்று பொறுப்பாகக் கூறினான்.

அதுகேட்ட இந்து சர்மா, "மித்திரா! நீ சொன்னபடியே செய்கிறேன்" என்று சொல்லிப் பூணூலையும் குடுமியையும் அறுத்தெறிந்து, சந்நியாசி வேஷத்துடன் விடைபெற்றுச் சென்றான். சாணக்யனுக்கு அறுபத்து நான்கு சிஷ்யர்கள்; முப்பத்திரண்டு நண்பர்கள். ஒவ்வொருவனும் சாணக்யனை விடப் புத்திசாலி; எஜமான பக்தி யுள்ளவன்; ஆனால் ஒருவரை யொருவர் அறியமாட்டார்கள். அவர்களுள் இந்து சர்மாவும் ஒருவன்.

பின்பு சாணக்யன் வேற்றரசருடைய உதவியைச் சம்பாதிப்பதற்காகச் சந்திரகுப்தனையும் அழைத்துக்கொண்டு பாடலீபுரத்திற்கு வடக்கேயுள்ள யவன ராஜ்யத்திற்குச் சென்றான். அவ்விடம் பர்வதேசுவரன் என்ற யவன ராஜன் செங்

கோல் செலுத்தி வந்தான். அவனுக்கு மலயகேது என்ற புத்திரனும் வைரோதகன் என்ற தம்பியும் இருந்தார்கள். சாணக்யன் அரண்மனைக்குச் சென்று, தூதர் மூலமாய்த் தங்களுடைய வரவைத் தெரிவித்தான். தூதர்கள் உட்சென்று அரசனுக்குத் தெரிவித்தனர். அரசன் அவர்களை உள்ளே அழைத்து வருமாறு கட்டளையிட்டான். உடனே தூதர்கள் அவர்களை உள்ளே அழைத்துக்கொண்டு போய்விட்டுத் திரும்பினர். அரசன் அவர்களை ஆசனத்திலமரச் செய்து "வந்த காரியம் யாது?" என்று கேட்டான். உடனே சாணக்யன் "அரசே! உமக்கு மங்களமுண்டாகக் கடவது! நான் கானகத்தில் தவஞ் செய்யும் ஒரு பிராமணன்; நான் பாடலீபுரஞ் சென்று தர்ம சாலையில் சாப்பிட உட்கார்ந்ததும், நவநந்தர்கள் என்னைக் கையைப்பிடித்து வெளியே தள்ளிவிட்டார்கள். இந்தச் சந்திர குப்தனோ தன்னைக் காக்குமாறு என்னைச் சரணமடைந்திருக்கிறான்; நவநந்தர்கள் சந்திரகுப்தனுடைய தகப்பனையும் அவன் சகோதரர்கள் தொண்ணூற்றொன்பது பேர்களையும் சுரங்கத்திலடைத்து அநியாயமாகக் கொன்று விட்டார்கள்; சந்திரகுப்தன் மாத்திரம் தெய்வாதீனமாகத் தப்பிப் பிழைத்தான்; நான் "நந்தர்களைக் கொன்று சந்திரகுப்தனுக்குக் குஸுமபுரத்தில் பட்டாபிஷேகஞ் செய்து வைக்கிறேன்," என்று பிரதிஞ்ஞை செய்திருக்கிறேன்! இவ்விஷயத்தில் தாங்கள் எங்களுக்குச் சகாயமாகச் சேனைகளோடு புறப்பட்டு வந்து, குஸுமபுரத்தை முற்றுகையிட்டு, நந்தர்களைக் கொல்லவேண்டும்! அவ்வாறு செய்தால், நந்த ராஜ்யத்தில் பாதியைத் தங்களுக்குக் கொடுத்து விடுகிறோம்; மற்றொரு பாதி சந்திரகுப்தனுக்குப் போதுமானது" என்று சொன்னான்.

இதைக்கேட்ட பர்வதேசுவரன் "இந்தப் பிராமணன்

சிறந்த அறிவாளிபோலும்! சந்திர குப்தனும் ராஜநீதியில் மகாநிபுணன்; இவ்விருவரும் நந்தர்களுடைய மர்மங்களை நன்றாய் அறிந்தவர்கள்; இவர்களின் உதவியைக் கொண்டு நாம் நந்தராஜ்யம் முழுவதையுமே பிடித்துக் கொள்ளலாம்" என்று எண்ணிச் சாணக்யனைப் பார்த்து, "ஐயா! தாங்கள் தருமத்தை நிலைநிறுத்துவதற்காக எங்களுடைய உதவியை வேண்டுவதால், தங்களுடைய விருப்பம்போலவே கூடியசீக்கிரம் நான் சேனைகளுடன் புறப்பட்டு குஸுமபுரத்தை முற்றுகையிட்டு, நந்தர்களைக் கொன்று விடுகிறேன்; நீங்கள் பிறகு பாதிராஜ்யத்தை எனக்குக் கொடுங்கள்! சேனைகள் யுத்தத்திற்குத் தயாராகும் வரையில் நீங்கள் இருவரும் இங்கேயே இருங்கள்!" என்று சொல்லி அனுப்பி விட்டுத் தன் சேனைகளை யுத்தத்திற்கு ஆயத்தப்படுத்தும்படி சேனாபதிகளுக்குக் கட்டளை யிட்டான். பின்பு சாணக்யன் தன் சிஷனிடம் "நான் பர்வதேசுவரனுடைய உதவியைச் சம்பாதித்து விட்டேன்; நீ அவ்விடம் உன் காரியங்களை முடித்துத் தெரிவித்தால், உடனே சேனைகளோடு யுத்தத்திற்குப் புறப்பட்டு வருகிறோம்" என்று சொல்லி யனுப்பினான்.

இது நிற்க, இந்துசர்மா சந்நியாசி வேஷம் பூண்டு ஜீவஸித்தி என்ற பெயருடன் பாடலீபுரஞ் சென்று, அவ்விடமுள்ள ஜனங்களிடம் தனக்கு நீதிசாஸ்திரம், மந்திரம், ஜோதிடம், வைத்தியம் முதலியவற்றில் ஏற்பட்டிருக்கும் வல்லமையைக் காண்பித்து, எல்லாருடைய பிரீதியையும் அடைந்தான். முக்கியமாய் ராக்ஷஸனிடஞ் சென்று தனக்குள்ளமந்திர சக்தியைக் காட்டி, அவனிடம் சிநேகம் பெற்று, அவனருகிலேயே வசித்து வந்தான். ராக்ஷஸனும் நந்தர்கள் சாணக்யனைப் பிடித்துத் தள்ளியதைக் கேள்விப்பட்டு அவனால் என்ன கேடு விளை

யுமோவென்று வருத்தப்பட்டான். பின்பு தானே ஒருவாறு சமாதானப் படுத்திக்கொண்டு ராஜ்யகாரியங்களைக் கவனித்து வந்தான். அச்சமயம் அவன் ஜீவஸித்தியைக் கண்டு " ஒரு சமயம் சாணக்யன், விரோதத்தால் நம்மீது மந்திரப் பிரயோகம் செய்யக்கூடும்; இந்த ஜீவஸித்தி நம்மிடமிருந்தால், அந்தத் தீங்கை நீக்கிவைப்பார் " என்றெண்ணி, அவனைத் தன் சமீபத்திலேயே வைத்துக் கொண்டான். ஜீவஸித்தி, முக்கிய மந்திரியின் சிநேகத்தினால் அங்கேயுள்ள சகல சேனாதிபதிகளையும் வசியஞ் செய்து கொண்டான். ஜீவஸித்தி ஒவ்வொரு நாளும் அந்த நகரிலுள்ள ஜனங்களின் மீது தலைவலி, வயிற்று வலி முதலிய கொடிய வியாதிகளை மந்திரத்தினால் ஏவிவிட்டு, அவர்கள் துடிதுடித்து வருந்திச் சாகப்போகுந் தருணத்தில், அவர்கள் மீது விபூதியைத் தடவித் தீர்த்தம் தெளித்து அநுகூலப் படுத்தினான். இவ்வாறு அவன் தன் சாமர்த்தியத்தை நேரில் காட்டி, அரசன் முதல் சேவகன் வரையில் எல்லாருடைய விசுவாசத்தையும் சம்பாதித்தான். பின்பு அவன் ஒவ்வொருவருக்கும் தனித்தனியே சோதிடம் சொல்லத் தொடங்கினான்.

ஒருநாள் அவன் நந்தர்களின் சேனாபதியின் மாளிகைக்குச் சென்று " ஐயா! நவக்கிரகங்களின் கதி விபரீதமாயிருக்கின்றது; வரப்போகிற வைசாக பௌர்ணமி தினம் சூரியன் அஸ்தமித்துச் சந்திரன் உதிக்கும்பொழுது, கன்யா லக்னத்தில் கேது ஏழாமிடத்தி லிருப்பதால், யாரோ ஒரு பகைவன் இவ்விடம் வந்து, குஸுமபுரத்தை வளைத்துக் கொள்வான்; அன்று மிகவும் கெட்ட காலம்; அன்று நீங்கள் யுத்தத்திற்குச் சென்றால் நிச்சயம் இறந்துவிடுவீர்கள். ஆகையால் ஏதேனும் சாக்குச் சொல்லி, வீட்டிலேயே இருந்துவிடுங்கள்! இவ்விஷயம் மிக்க

இரகசியமாகவே இருக்கட்டும். உங்களுடைய நன்மையின் பொருட்டே நான் இவ்விஷயத்தைத் தெரிவித்தேன்" என்று சொன்னான். அதைக்கேட்ட சேனாபதியும் அவ்வாறே செய்வதாகக் கூறி விடை கொடுத்தனுப்பினான். பின்பு ஜீவஸித்தி ஒவ்வொரு சேனாபதியிடமும் சென்று, இவ்வாறே சொல்லி, அவர்களுக்கு அதைரியத்தை உண்டாக்கி விட்டுத் தன்னிருப்பிடஞ் சென்றான். பிறகு அவன் தன் சீடனிடம், "நான் குஸுமபுரத்தில் தக்க ஏற்பாடு செய்து விட்டேன்; ஆதலால் வரப்போகிற பௌர்ணமி தினம் நீங்கள் கட்டாயம் சேனைகளுடன் வந்து குஸுமபுரத்தை முற்றுகை யிடவேண்டும்; இன்றேல், என் சோதிடம் பொய்யாய்விடும்" என்று சொல்லியனுப்பினான்.

---

## ஐந்தாவது அத்தியாயம்

---

### நந்த ஸம்ஹாரம்

நாட்கள் சில சென்றதும் வைசாக பௌர்ணமி யன்று பர்வதேசுவரனும் சாணக்யனும் அளவிறந்த சேனைகளோடு யுத்தத்திற்குப் புறப்பட்டுவந்து பாடலீபுரத்தை முற்றுகை யிட்டார்கள். கிழக்கு வாசலில் சந்திரகுப்தனும், மேற்கு வாசலில் பர்வதேசுவரனும், தெற்கு வாசலில் மலயகேதுவும், வடக்கு வாசலில் வைரோதகனுமாகச் சேனைகளைப் பிரித்துக்கொண்டு அந் நகரத்தைச் சூழ்ந்து கொண்டனர். சாணக்யன் சதா எச்சரித்துக்கொண்டு சேனைகளைச் சூழ்ந்துகொண் டிருந்தான். பகைவர் கோட்டையைச் சூழ்ந்து கொண்டார்களென்று தெரிந்தவுடன் நந்தர்கள் தங்களுடைய சேனாபதிகளுக்கெல்

லாம் உடனே சேனைகளோடு யுத்தத்திற்குச் செல்லும்படி உத்தரவு அனுப்பினார்கள். அதைக் கண்ட ஒவ்வொரு சேனாபதியும் "இன்று என் தாயாருக்கு சிராத்தம்; என் தகப்பனுக்கு சிராத்தம்; எனக்குத் தலைவலி; எனக்கு வயிற்றுவலி" என்று கடிதங்களெழுதித் தனித்தனியே அனுப்பிவிட்டு, வீட்டிலேயே இருந்தார்கள். ராக்ஷஸன் மாத்திரம் சில சேனைகளுடன் நந்தர்களிடம் வந்தான். அவனைப் பார்த்த நந்தர்கள் "மந்திரீ! நமது சேனாபதிகள் ஒருவரும் இந்த ஆபத்துக் காலத்தில் வராமல் உண்ட வீட்டுக்கு இரண்டு நினைத்துவிட்டார்களே! என்ன செய்வது?" என்று புலம்பினார்கள். அதுகேட்ட ராக்ஷஸன் "நானிருக்கும் பொழுது, உங்களுக்கு ஏன் அச்சம்? இதோ நான் கிழக்கு வாசலுக்குச் சென்று பகைவர் சேனைகளை அழித்துவிடுகிறேன்" என்று சொல்லிவிட்டுக் கத்தியை உருவிக்கொண்டு கிழக்கு வாசலுக்குப் போய் பகைவர் சேனைகளோடு போர் புரிந்தான்.

அப்பொழுது சாணக்யன் "கிழக்கு வாசலிலுள்ள சேனாபதி ராக்ஷஸனைக் கொன்றான்" என்று பறைசாற்றச் சொன்னான். உடனே அவ்வாறே பறைசாற்றப்பட்டது. அச்சத்தம் நகரமெங்கும் பரவி நந்தர்களுக்கும் ராக்ஷஸனுக்கும் எட்டிற்று. உடனே ராக்ஷஸன் "பகைவர்கள் நந்தர்களை வஞ்சித்து விட்டார்களே!" என்று வருந்தினான். நந்தர்கள் "நமக்குப் பக்கபலமாயிருந்த ராக்ஷஸன் இறந்து விட்டான்; இனிச் சும்மாவிருப்பது கூடாது; நாம் கிழக்கு வாசலுக்குச் சென்றால், ராக்ஷஸனைக் கொன்ற சேனாபதி நம்மையும் கொன்று விடுவான்; ஆதலால், மேற்கு வாசலுக்குப் போவோம்" என்றெண்ணிக் குதிரைகளிலேறிப் புறப்பட்டுப் பர்வதேசுவரன் இருக்கும் வாசலுக்குச் சென்றனர். அவன் இவர்கள் வரும்போதே விசாரித்து நவநந்தர்களென்று தெரிந்து கொண்டு,

தன் கத்தியை ஓரே வீச்சாக வீசி, ஒன்பது நந்தர்களையும் வெட்டிக் கொன்றான் சாணக்யன் "கிழக்கு வாசலிலிருக்கும் சேனாதிபதி ராக்ஷஸனைக் கொன்றது பொய்; மேற்கு வாசலிலிருக்கும் பர்வதேசுவரன் நந்தர்களைக் கொன்றதுமெய்" என்று பறைசாற்றச் செய்தான். இச்சத்தம் ராக்ஷஸனுடைய செவியில் விழுந்தது. உடனே ராக்ஷஸன் "ஐயோ! பகைவர் நந்தர்களை ஏமாற்றிக் கொன்று விட்டனரே! இனி யான் போர் செய்து என்ன பயன்? என்னைத் தந்தைபோல் பரிபாலித்தவர்களும், அண்டினவரிடம் அன்புள்ளவர்களுமான என் தலைவர் ஒன்பது பேர்களும் ஏக காலத்தில் விதிவசத்தினால் இறந்து விட்டனர்; அவர்களைப் பின்பற்றுவதற்காக நானும் தற்கொலை செய்து கொண்டால், அது நகைப்பிற் கிடமாகும்; பகைவர் உயிரோடிருக்கும் பொழுது, பழிக்குப்பழி வாங்காமலிருப்பது தகுதியன்று; ஒருவனான நான், வெகு பேர்களான பகைவர்களைக் கொல்லுவதும் இயலாது; ஆதலால் புத்தி பலத்தால் அவர்களைக் கிரமமாக வெல்ல வேண்டும்; நான் இனிப் பகைவரை வென்று, என் தலைவரின் குலகூடஸ்தரும் வயது முதிர்ந்தவருமான ஸர்வார்த்தஸித்தியையே ராஜ்யத்திற் கரசனாக ஸ்தாபித்து, வெகுகாலமாய்ப் புசித்து வந்த சோற்றுக் கடனைத் தீர்ப்பேன்" என்று தீர்மானித்து, அதற்காகச் சந்திரகுப்தன், சாணக்யன், பர்வதேசுவரன் இவர்கள் இறங்கியிருக்கும் கூடாரத்திற்கு வந்து, சமாதானஞ் செய்து கொள்ள முயற்சி செய்தான்.

பின்பு ராக்ஷஸன் சந்திரகுப்தனை வணங்கி, அவனைப் பார்த்து "மன்னவா! தெய்வாதீனமாகத் தாங்களே நமது நாட்டுக்கு அரசனாய் விட்டீர்கள்; எனக்குத் தாங்களும் நந்தர்களும் சமமானவர்களே; இதுவரையில் நந்தர்கள் என்னைப்

போஷித்ததுபோலத் தாங்களும் இனிமேல் காக்கவேண்டும்" என்று சொன்னான். அதைக்கேட்ட சந்திரகுப்தன் சாணக்ய னுடைய உத்தரவுப்படி அதற்கு இசைந்தான். அப்பொழுது பர்வதேசுவரனுடைய சேனைகள், சாணக்யன் சொற்படி, யுத் தத்தை நிறுத்தி விட்டுக் கூடாரங்களில் தங்கியிருந்தன.

ஒருநாள் ராக்ஷஸன் பர்வதேசுவரனிடம் தனியாகச் சென்று, "அரசே! இந்தச் சந்திரகுப்தன் கணிகைமாதுக் குப் பிறந்தவன்; இவன் ராஜ்யத்திற்கு அருகனன்று; ஆத லால், இவனை வஞ்சகமாய்க் கொன்று 'பாடலீபுரம்' முழுவ தையும் உமக்கே கொடுக்கிறேன்; பிராமணனை சாணக்யனைத் தாங்கள் துரத்தி விட்டால், அவன் எங்கேயாவது ஓடிப்போ வான்" என்று சொன்னான். அதற்குப் பர்வதேசுவரன் "மந் திரீ! நீர் சொன்னபடியே செய்யும்; நானும் உமக்கு வேண்டிய உதவி செய்கிறேன்" என்று கூறினான். அதுமுதல் பர்வதே சுவரனுக்கும் ராக்ஷஸனுக்கும் சிநேகம் வளர்ந்து வந்தது. சாணக்யனும் ராக்ஷஸனுடைய கருத்தை எவ்வாறோ அறிந்து கொண்டான். அதனால் சாணக்யன் "வெற்றி நமக்கே கிடைத் திருந்தாலும், நாம் சோதனை செய்யாமல் குஸுமபுரத்தில் பிர வேசிக்கக் கூடாது; ஒரு சமயம் ராக்ஷஸன் நம்மைக் கொல் வதற்காகக் கபடமாய் ஏதேனும் முயற்சி செய்திருக்கக் கூடும்; ஆதலின், நகரெங்கும் சோதனை செய்த பிறகே உள்ளே பிர வேசிக்க வேண்டும். முன்பு நான் பர்வதேசுவரனிடம் போர் செய்து உதவி செய்வதற்காகப் பாதிராஜ்யம் கொடுப்பதாகக் கூறியுள்ளேன்; அவனையும் தந்திரமாகக் கொன்று விடவேண் டும்; இன்றேல், சந்திரகுப்தனுக்கு நந்தராஜ்யம் முழுவதையும் பட்டாபிஷேகஞ் செய்விப்பதாக வாக்களித்திருப்பது வீணாய் விடும்" என்று ஆலோசித்துச் சந்திரகுப்தன், பர்வதேசுவரன்

இவர்களுடன், நகரத்திற்கு வெளியில் கூடாரத்தில் தங்கி யிருந்து, நகர விருத்தாந்தங்களை ஒற்றர்கள் மூலமாகச் சோதித் துக் கொண்டிருந்தான்.

---

## ஆறுவது அத்தியாயம்

---

### ராக்ஷஸனுடைய சூழ்ச்சிகள்.

பின்பு ஒருநாள் ராக்ஷஸன், ஜீவஸித்தியைக் கண்டு, "ஐயா! நமது தலைவர் ஒன்பது பேர்களையும் பகைவர் கொன்று விட்டார்கள்; ஆயினும், சாணக்யனும் சந்திரகுப்தனும் இந்நகரில் ஜய கோலத்துடன் புகவொட்டாமல், அவர் களைக் கொல்லவேண்டும்; உமக்கோ மந்திரஸித்தி அதிகமா யிருக்கின்றது; ஆதலால் நீர் பகைவரைக் கொல்லத் தக்க ஒரு விஷ கன்னிகையைப் படைத்துக் கொடும்!" என்று கேட்டான். அதுகேட்ட ஜீவஸித்தி "ஐயா! தங்களுடைய விருப்பம்போலவே ஒரு விஷ கன்னிகையைப் படைத் துத் தருகிறேன்; அவள் தன் உடலைத் தொட்டவரைக் கொன்று விட்டு, மறைந்து விடுவாள்" என்று சொல்லித் தன் மந்திர பலத்தால் ஒரு விஷ கன்னிகையைப் படைத்துக் கொடுத்தான். ராக்ஷஸன் "இக்கன்னிகையைக் கொண்டு சந் திரகுப்தனைக் கொன்றுவிடலாம்" என்று மகிழ்ந்து, அப் பெண்ணை அழைத்துக்கொண்டு சந்திரகுப்தனிடஞ் சென்றான். அங்கே சாணக்யனும் பர்வதேசுவரனும் உட்கார்ந்திருந்தனர். உடனே ராக்ஷஸன் சந்திரகுப்தனருகே சென்று "அரசே! சர்வாங்க சுந்தரியான பெண்ணொருத்தி என்னிடம் வெகு கால மாய் வளர்ந்து வந்தாள்; அவள், தங்களுக்குத் தக்கவள் என்று

நினைத்து, இங்கே அழைத்து வந்திருக்கிறேன்; தாங்கள் அவளை ஏற்றுக்கொள்ள வேண்டும்" என்று சொல்லி, விஷ கன்னிகையை அங்கேயே இருக்கும்படி ஆக்ஞாபித்து விட்டுச் சந்திர குப்தனிடம் விடைபெற்றுச் சென்றான்.

அப்பெண்ணின் அழகைக் கண்டு யாவரும் அவளை மணக்க ஆசை கொண்டனர். சாணக்யன் ஜீவஸித்தியிடமிருந்து விஷ கன்னிகையின் விருத்தாந்தத்தைத் தூதர் மூலமாக முன்னமே அறிந்திருந்தான். அதனால் அவன் "இக்கன்னிகையைக் கொண்டு பாதிராஜ்யத்திற்குப் பங்காளியான பர்வதேசுவரனைக் கொன்று விடலாம்" என்று தீர்மானித்துச் சந்திரகுப்தனைப் பார்த்து, "அப்பா! சந்திரகுப்தா! இந்த ஸ்திரீ ரத்னம் அரசனுக் குரியவள்; ஆதலால், நீ இவளை இச்சிக்காதே; நமக்கு மிக்க உபகாரியான பர்வதேசுவரனே இவளை அடையட்டும்" என்று சொன்னான். அதற்குச் சந்திர குப்தன் "ஆர்ய! அவ்வாறே யாகட்டும்" என்று கூறி, அக் கன்னிகையைப் பார்த்து "குழந்தாய்! நீ பர்வதேசுவரனிடஞ் செல்!" என்றான். பர்வதேசுவரன் அக் கன்னிகையைச் சந்தோஷத்தோடு தன் அறைக்கு அழைத்துச் சென்று அவள் கையைப் பிடித்தான். உடனே அவள் அவனைக் கொன்று விட்டு மறைந்து விட்டாள்.

அப்பால் ராக்ஷஸன் பர்வதேசுவரன் இறந்ததைக் கேள்விப்பட்டான். அதனால் அவன் மனம் நொந்து "ஐயோ! பிள்ளையார் பண்ணக் குரங்காய் முடிந்தது" போல, என் முயற்சி, என் எண்ணத்திற்கு மாறாகவே முடிந்தது; என்ன அநியாயம்! நான் காரியத்தின்மேல் கொண்ட முயற்சியினாலும், ஞாபகக் குறைவினாலும் பர்வதேசுவரனிடம் விஷ கன்னிகையைப் பற்றி முன்னமேயே தெரிவிக்க மறந்தேன். என் முயற்சி எனக்குப்

பிரதி கூலமாவதுடன் போகாமல், சந்திரகுப்தனுக்கு அநுகூல மாகவும் முடிந்ததே. இனி நான் இந்நகரத்தி லிருந்தால் நான் செய்த காரியம் வெளிப்பட்டு, ஜனங்கள் என்னை அவமானஞ் செய்வார்கள் ; ஆதலின், இப்பொழுதே வேண்டிய ஏற்பாடு களைச் செய்துவிட்டு, வெளிக்கிளம்புவது நல்லது " என்று தீர் மானித்து, அரண்மனைக்குச் சென்று, ஸர்வார்த்தஸித்தியைத் தவசிவேஷத்துடன் கானகத்திற் கனுப்பிவிட்டு, தாருவர்மன் முதலிய தன் நண்பர்களிடம் சந்திரகுப்தனைக் கபடமாகக் கொல்லுமாறு அநேக உபாயங்களைக்கூறி, ஏராளமான பொரு ளையும், கொடுத்தான். பின்னும் அவன், தனக்கு முக்கிய நண்ப னான சகடதாஸ னென்னும் கணக்கனிடம் மிகுந்த பொருள் கொடுத்து, தாருவர்மன் முதலியோர் காரியங்களைச் சரிவர நடத்துமாறு கவனிக்கச் செய்தான். பின்பு அவன் தனக்கு ஆப்த நண்பனும்,பெரிய இரத்னவியாபாரியாயு மிருந்த சந்தன தாஸனிடம் சென்று "நண்ப! உன்னுடையவீட்டில் என் மனைவி மக்களைவைத்துவிட்டுக் காரிய நிமித்தம் வெளியே போகிறேன். நீ அரசனுக்குத் தெரியாமல் அவர்களைக் காக்கவேண்டும்" என்று கூறித் தன் மனைவிமக்களை அவனிடம் அடைக்கலமாக ஒப்புவித்து விட்டுச் சுரங்கத்தின் வழியாகப் பாடலீபுரத்தி லிருந்து வெளியே கிளம்பினான்.

மறுநாள் காலையில் பர்வதேசுவரன் எழுந்து வராததால், சாணக்யன் அவன் படுக்கை அறைக்குச் சென்று, கதவைத் திறந்து பார்த்தான். அங்கே பர்வதேசுவரன் இறந்து கிடப்ப தைக் கண்டான். விஷ கன்னிகையைக் காணவில்லை. உடனே சாணக்யன்வெளியேவந்து, அதிகவருத்தமுள்ளவன்போல் அபி நயித்து, சேவகர்களை நோக்கி, "அடே சேவகர்களே ! அமாத்ய ராக்ஷஸன், பொறுமையினால்நமக்கு மிக்க உபகாரியும், சிநேகித

னுமான பர்வதேசுவரனிடம் விஷ கன்னிகையைத் தந்திரமா யனுப்பிக் கொன்றுவிட்டான்; அந்த துராத்மா எங்கே யிருந் தாலும், கைப்பிடியாகப் பிடித்துக்கொண்டு வாருங்கள்" என்று கட்டளை யிட்டான். உடனே சேவகர்கள் இராக்ஷஸனுடைய மாளிகைக்குச் சென்று பார்க்கவே, அங்கே ஒருவரையும் காண வில்லை. பின்பு அவர்கள் இவ் விஷயத்தை நகர மெங்கும் பறை சாற்றச் செய்து, எங்கும் தேடிப் பாரத்தார்கள். ஓரிடமும் ராக்ஷஸனைக் காணவில்லை. பின்பு சேவகர்கள் சாணக்யனிடம் ஓடி வந்து "ஐயா! ராக்ஷஸன் நேற்றிரவே தன் மனைவி மக்க ளோடு எங்கேயோ ஓடிப்போய் விட்டான்; நகரெங்கும் தேடிப் பார்த்தும் அவன் அகப்படவில்லை" என்று தெரிவித்தனர். இத ளுல் ராக்ஷஸனே பர்வதேசுவரனைக் கொன்றுனென்று எல்லோ ரும் அறிந்துகொண்டனர்.

அப்பொழுது சாணக்யன் தனக்குள்ளே "நான் சந்திர குப்தனுக்குக் குஸுமபுரத்தில் பட்டாபிஷேகம் செய்து வைப்ப தாகப் பிரதிஞ்ஞை செய்தேன்; பின்பு சத்துருவைக் கொல்லு வதற்காக பாதிராஜ்யம் கொடுப்பதாய்ப் பர்வதேசுவரனிடம் சொன்னேன்: அதனுல் அவன் பாதி ராஜ்யத்திற்குப் பங்காளி யானுன்; தெய்வாதீனமாக ராக்ஷஸன் அனுப்பிய விஷ கன்னிகையைக் கொண்டு, பர்வதேசுவரனைக் கொன்றாய் விட்டது; 'உள்ளிப் பூண்டைப் பூசித்தும் நோய் நீங்காதது' போல, பர்வதேசுவரன் தொலைந்தும், ராஜ்யத் திற்குப் பங்காளியாக அவனுடைய புத்திரன் மலய கேதுவும், அவனுடைய சகோதரன் வைரோதகனும் இருக்கின்றனர். நான் முன்பு வாக்களித்தபடி, பாதி ராஜ் யத்தை அவர்களுக்குக் கொடுக்க வேண்டியதா யிருக்கிறது; ஆதலால், எவ்வாறேனும் அவர்களையும் தொலைக்க முயற்சி

செய்யவேண்டும்; முதலில் மலயகேதுவோடு கபட ஸ்நேகம் வைத்துக்கொண்டிருக்கும் பாகுராயணனைக் கொண்டு, ஏதேனும் போதித்து, மலயகேதுவை அவனுடைய தேசத்திற்கு அனுப்ப வேண்டும்; வைரோதகனை இங்கேயே யிருக்கச் செய்து, அவனைக் கொல்வதற்குப் பிறகு முயற்சிசெய்ய வேண்டும்'' என்று ஆலோசித்து, பாகுராயணனை வரவழைத்து "அப்பா, நீ மலயகேதுவிடஞ் சென்று, தந்திரமாகப் போதித்து, அவனை இவ்விடம் விட்டுத் துரத்தி விட்டு, நீயும் அவனோடு சென்று, நமது காரியத்தைச் சாதிக்க வேண்டும்'' என்று சொன்னான்.

அவனும் அவ்வாறே செய்கிறேனென்று கூறி விடைபெற்று, மலயகேதுவிடஞ் சென்றான். அப்பொழுது மலயகேது தன் தந்தை இறந்த துக்கத்தால் புலம்பிக்கொண் டிருந்தான். உடனே பாகுராயணன் அவனெதிரில் விழுந்து புலம்பி, அவனைப் பார்த்து "மகாப்பிரபுவே! என்ன அநியாயம்! தங்களுடைய தந்தையைக் கொன்றது யார் என்று அறிந்தீரா? இச்சாணக்யன் மிக்க நன்றி மறந்தவன்; நன்றியை மறப்பது நியாயமாகுமா?

"எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.''

என்ற ஆன்றோர் மொழியை இவன் அறியவில்லை.

இவன் முன்பு தங்களுடைய தந்தையிடம் வந்து, தனக்கு உதவியாகக் குஸுமபுரம் வந்து போர் புரிந்து, நந்தர்களைக் கொன்றால், பாதிராஜ்யம் தருகிறேனென்று வாக்களித்தான்; பிறகு பர்வதேசுவரன் அவன் வார்த்தையில் நம்பிக்கை வைத்துச் சேனைகளோடு வந்து, போர்செய்து, நந்தர்களைக் கொன்றான். சாணக்யன், தான் வாக்களித்தபடி, பர்வதேசுவரனுக்

குப் பாதிராஜ்யம் கொடுக்க வேண்டுமே என்று நினைத்து, விஷ கன்னிகையைக் கொண்டு அவனை வஞ்சகமாகக் கொன்று விட்டான்; அவன் மித்திரத் துரோகி; அவன் சகவாஸம் பொல்லாது. இனி நீ இங்கே யிருந்தால், உமக்குந்தீங்குநேரிடுமென்று நினைக்கிறேன். நீர் உமது தந்தையின் மரணக்கிரியைகளுக்காகக் கூடத்தாமதிக்கக் கூடாது. ஆதலால், நீர் படைகளுடன் இப்பொழுதே யவன தேசத்திற்குச் செல்லவேண்டும். அங்கே போனபிறகு சாணக்யனைத் தொலைப்பதற்கு முயற்சி செய்யலாம்" என்று போதித்தான்.

அதைக்கேட்ட மலயகேது "ஐயா! நீர் சொன்னது உண்மைதான்; நான் இப்பொழுதே படைகளுடன் என் தேசத்திற்குச் செல்கிறேன்; நீரும் என்னுடன் வந்து அங்கே சுகமாயிரும்; இங்கே யிருந்தால் ஒரு வேளை உமக்கும் ஆபத்து ஏற்படும்" என்று சொல்லிவிட்டுத் தன் படைகளுடன் புறப்பட்டுத் தன் தேசத்திற்குச் சென்றான். பாகுராயணனும் மலயகேதுவைப் பின் தொடர்ந்து போனான். மலயகேது தன் தேசத்திற்குச் சென்றபின், பாகுராயணனுக்குச் சேனாபதி வேலை கொடுத்துத் தன்னருகே வைத்துக் கொண்டான். வைரோதகனோ சாணக்யனால் வசியஞ் செய்யப்பட்டுப் பாதி ராஜ்யத்தைத் தானே பெற்றுக்கொள்ள வேண்டுமென்ற ஆசையினால், அங்கேயே வசித்து வந்தான்.

இதுநிற்க, குஸுமபுரத்திலிருந்து சுரங்க வழியாக வெளியேசென்ற ராக்ஷஸன் செய்தியைச்சிறிது விசாரிப்போம். அவன் குஸும புரத்திலிருந்து வெளியே போனபிறகு, மலயகேது தன் தேசத்திற்குச் சேனைகளோடு திரும்பிப்போனதைக் கேள்விப்பட்டு, தானும் யவன தேசஞ் சென்றான். பின்பு

ராக்ஷஸன் தனியாய் மலயகேதுவிடஞ் சென்று "அரசே! மகாபாவியாகிய, சாணக்யன், எனது ஸ்வாமி குலத்தையே நாசஞ் செய்துவிட்டான்; அதுதான் போகட்டு மென்றாலும், எனக்குப் பரம மித்திரனான பர்வதேசுவரனையும் கபடமாகக் கொன்றுவிட்டான்; ஆதலால், சாணக்யனையும் சந்திரகுப்தனை யும் வதஞ் செய்துவிட்டு, அந்த ராஜ்யத்தை உமக்கே அபிஷேகஞ் செய்து வைப்பதற்கு விரும்புகிறேன்; இப் பொழுதே நீர் அதற்கு வேண்டிய படைக் கோப்புகளைக் கூட்ட வேண்டும்" என்று சொன்னான். அதுகேட்ட மலய கேது, ராக்ஷஸனுடைய மகிமையை யறிந்தவனாகையால், சரி யென்று ஒப்புக்கொண்டு, ராக்ஷஸனைத் தனக்கு முதல் மந்திரி யாக ஏற்படுத்திக் கொண்டான். "என் தகப்பனைக் கொன்ற விப்பிரனைக் கொன்ற பிறகே, தகப்பனுக்கு மரணக்கிரியைகளை நடத்துவேன்" என்று சபதமுஞ் செய்தான்.

கௌலூதன், சித்திரவர்மன், மலயாதிபன், ஸிம்மநாதன், புஷ்கராக்ஷன் என்னும் சிற்றரசர் ஐவரும், மலயகேதுவுக்குச் சுவாதீனர்களாயிருந்தனர். ஒருநாள், மலயகேதுவும் ராக்ஷஸ னும் அவ்வரசர்களைப் பார்த்து, "நண்பர்களே! உங்களுடைய சகாயத்தினால் சந்திரகுப்தனை வெல்லவேண்டும்; அவனை ஜெயித்த பிறகு, குஸுமபுரத்திலுள்ள யானைகளையும் குதிரை களையும் உங்களுக்குத் தருகிறோம்" என்று சொன்னார்கள். அதுகேட்ட அவ்வரசர்கள் சரியென்று ஒப்புக்கொண்டு, அப் பொழுதே சேனைகளைச் சேர்க்கத் தொடங்கினார்கள்; அன்றியும், அவ்வரசர் ராக்ஷஸனுடைய குணாதிசயங்களைக் கண்டு அவ னிடம் மிக்க அன்புடையவர்களா யிருந்தனர். ராக்ஷஸன் அங்கேயே யிருந்துகொண்டு ஒற்றர்கள் மூலமாகச் சந்திரகுப் தனைக் கொல்வதற்காகத் தனது நண்பர்களை அடிக்கடி தூண்

டிக் கொண்டிருந்தான். அப்பொழுது ராக்ஷஸனுடைய தூத ஞன விராதகுப்த‘னென்பவன், மாறுவேஷத்துடன் குஸுமபுரஞ் சென்று, சமாசாரம் முழுவதும் அறிந்துவந்து ராக்ஷஸ ணிடம் தெரிவித்தான்.

---

## ஏழாவது அத்தியாயம்

---

### சந்திரகுப்தனின் பட்டாபிஷேகம்

அப்பால், சாணக்யன், சந்திரகுப்தன், வைரோதகன் ஆகிய மூவரும், நல்ல முகூர்த்தத்தில் அரண்மனையில் பிரவேசிக்கலா மென்றெண்ணிக் கூடாரத்திலேயே தங்கி யிருந்தனர். சாணக் யன் ஜோதிஷர்களை வரவழைத்து “சந்திரகுப்தன் அரண்மனை யில் எப்பொழுது பிரவேசிக்கலாம் ?” என்று கேட்க, அவர் கள் ‘பிரபுவே! இன்றிரவு நடுநிசியில் பட்டணப் பிரவேசம் செய்து அரண்மனைக்குப் போகலாம்” என்று தெரிவித்தனர். சாணக்யன் குஸுமபுரத்திலிருக்கும் சகல சிற்பிகளையும் வர வழைத்து “சிற்பிகளே! ஜோதிஷர்கள் சந்திரகுப்தன் நகரப் பிரவேசம் செய்வதற்கு இன்று நடுநிசியில் நன்முகூர்த்தம் பார்த்திருக்கின்றனர்; ஆதலால், நீங்கள் முதற் கோட்டை வாசல் முதற்கொண்டு நகரமெங்கும் அலங்கரிக்க வேண்டும்; கூப தடாகங்களைச் சுத்தி செய்யவேண்டும்; கோபுரங்கள், மாளிகைகள் முதலியவற்றைப் புதுப்பித்து, வீதிகளில் நீர் தெளித்துத் தோரணங்களும் கொடிகளும் கட்டவேண்டும்” என்று கட்டளையிட்டான். அதைக்கேட்ட அவர்கள் சாணக்யனைப் பார்த்து “ஸ்வாமீ! சிற்பியாகிய தாருவர்மன், சந்திரகுப்த சக்ரவர்த்தி இன்றிரவே பட்டணப் பிரவேசம்

செய்யப் போவதாக அறிந்து, தங்கத் தோரணங்களால் அரண்மனையின் முதல்வாசலை அலங்கரித்துவிட்டான்; மற்ற விடங்களில் உத்தரவுப்படி கூடிய சீக்கிரம் அலங்கரித்து விடுகிறோம்'' என்று தெரிவித்தனர்.

இதைக்கேட்ட சாணக்யன் ஆச்சரியமடைந்து "நான் சொல்வதற்கு முன்பே தாருவர்மன் கோட்டை வாசலை அலங்கரித்திருப்பதால், ஏதேனும் தீங்கு நேரிடுமென்று தோன்றுகிறது; இதுவும் ராக்ஷஸனுடைய சூழ்ச்சியென்பதில் யாதொரு சந்தேகமுமில்லை; ஆதலால், இந்த அலங்கார ஏற்பாடுகளால், சந்திரகுப்தனுக்கு ஏதேனும் ஆபத்து நேராமல் காத்துக்கொள்ள வேண்டும்'' என்று தீர்மானித்து, அவர்களை நோக்கி, "சிற்பிகளே! தாருவர்மன் நல்ல வேளையாய் முன்னமேயே இவ்விஷயத்தை யறிந்து தன் காரியத்தைச் செய்தான்; அவன் அவ்வாறு செய்தது எங்களுக்கு மிக்கத் திருப்தியாயிருக்கிறது; அவன் முன்னமேயே அறிந்து செய்த காரியத்தின் பலனைக் கூடிய சீக்கிரம் பெறுவான்; அவனைப் போலவே மற்றவர்களும் இனித் தாமதமின்றி அலங்கரிக்க வேண்டும்'' என்று சொல்லியனுப்பினான்.

பின்பு சாணக்யன் "இன்று நடுநிசியில் சுப முகூர்த்தத்தில் சந்திரகுப்தன் நந்தர்களின் அரண்மனையில் பிரவேசிக்கப் போகின்றான்; அப்பொழுது யாவரும் வந்து சேரவேண்டும்'' என்று நகரமெங்கும் பறைசாற்றச் செய்தான். பிறகு நடுநிசியில் அவன், முதலில் வைரோதகனுக்குப் பட்டாபிஷேகஞ் செய்து, பனித்துளிபோல் நிர்மலமான முத்துக் கவசத்தை வைரோதகன் மீது போட்டு, விலையுயர்ந்த இரத்னங்களால் நெருக்கமா யிழைக்கப்பட்ட கிரீடமொன்றை அவன் தலையில் வைத்து, வாசனை மலர்களால் கட்டப்பட்ட மாலைகளை மார்பில்

போட்டுச் சந்திரகுப்தன் ஏறுவதற்காக வந்திருந்த 'சந்திர லேகை' யென்னும் யானையின் பேரில் அவனை ஏற்றிவைத்து, சந்திரகுப்தனுடைய சேனைகள் பின்தொடர, மேளவாத்தியங்கள் கோஷிக்கப் பட்டணப் பிரவேசஞ் செய்துவைத்து, அரண்மனை வாயிலை நோக்கி வந்தான்.

வைரோதகன் பட்டணப் பிரவேசம் வரும்போது, அதே யானையில் பர்ப்பரகன் என்ற மாவுத்தன் ஈட்டிகளைத் தங்கக் குழாய்களுக்குள் மறைத்து வைத்துக் கொண்டிருந்தான். சந்திரகுப்தன் யானைமீது ஆரோகணித்துக் கோட்டை வாயிலில் நுழையும் பொழுது, தாருவர்மன் உச்சியில் பெரும்பாறை யொன்றைக் கயிற்றில் கட்டி வைத்து, யானை அடிபோடும் கணக்குப்படி பார்த்துச் சந்திரகுப்தன் தலையில் கல்விழும் படியாய் ஏற்பாடு செய்துகொண்டிருந்தான். அப்பொழுது பர்ப்பரகன் தங்கக் குழாயை மெதுவாய்த் திறந்து, ஈட்டியை யெடுத்தான். அதனாலேற்பட்ட சத்தத்தைக் கேட்ட யானை, பயந்து வேகமாய் நடந்தது. தாருவர்மன் பழைய நடைப் பிரகாரம் கணக்குப் பார்த்துக் கல்லை வெட்டி விடவே, அது சந்திரகுப்தன் என்று ஜனங்கள் நினைத்திருக்கும் வைரோதகன் தலையை விட்டு, அவனுக்குச் சத்துருவாய் அவன் பின்னே ஈட்டியுடன் உட்கார்ந்திருந்த பர்ப்பரகன் தலையில் விழுந்து, அவனைக் கொன்றது. அதைக் கண்ட தாருவர்மன் "ஓஹோ! இனி நமக்கு ஆபத்து என்பதில் ஐயமில்லை; நான் ஒப்புக்கொண்ட காரியத்தை முடித்து விடுவதே மேன்மை; வீணே நான் உயிர் விடுவதால் பயனென்ன?"—என்றெண்ணி, ஓர் இரும்புக் கோடரியைச் சுழற்றி வைரோதகன் தலையில் ஓங்கி யடித்து, அவனைக் கொன்றான். இதைக் கண்ட வைரோதகனது மெய்க் காவலர்கள், தமது ஈட்டியால் தாருவர்மனைக் குத்தி வீழ்த்தினர்.

இவ்வாறு வருமென்றெண்ணியே சாணக்யன் முதலில் சந்திரகுப்தனை யனுப்பாமல்; வைரோதகனை யனுப்பினான். பின்பு சாணக்யன் மறுபடியும் சந்திரகுப்தனை யானைமீதேற்றி வைத்து, தக்க காவலுடன் பட்டணப் பிரவேசம் செய்வித்து, அரண்மனைக்குள் சென்று, நந்தர்களின் சயன கிருகத்தில் தூங்குவதற்காகச் சந்திரகுப்தனை யனுப்பினான். உடனே சாணக்யன் சந்திரகுப்தன் படுக்கவேண்டிய மாளிகைக்குள் சென்று எங்கும் பரிசோதித்துப் பார்த்தான். அப்பொழுது ஓர் பொந்திலிருந்து எறும்புகள் வரிசையாகத் தின்பண்டத் தூள்களைக் கௌவிக்கொண்டு வந்தன. அதைக்கண்ட சாணக்யன் "அரசர் சயனிக்குமிடத்தில், தின்பண்டத்தூள் எங்கிருந்து வந்தது? இங்கே மனிதர்கள் தின்பண்டத்துடன் மறைந்திருக்கவேண்டும்" என்று தீர்மானித்து, அம் மாளிகையை நெருப்பை மூட்டிக் கொளுத்தச் செய்தான். அதனால், அவ்விடம் ராக்ஷஸன் சொற்படி, முன்னமேயே சுரங்கம் வைத்து மறைந்திருந்த 'பீபத்ஸகன்' முதலிய நூறு பேர்களும் மிகுந்த புகையால் திரும்பிவரும் வழி தெரியாமல் திண்டாடி மாண்டனர். பின்பு சாணக்யன் எல்லோரையும் அனுப்பிவிட்டு வேறொரு மாளிகையைச் சோதித்துப் பார்த்து, அதில் சந்திரகுபதனுடன் சயனித்துக் கொண்டான்.

மறுநாள் சாணக்யனும் சந்திரகுப்தனும் சபையில் வீற்றிருக்கும்பொழுது, 'சுபேதன்' என்ற ராஜவைத்தியன் சந்திரகுப்தனிடம் வந்து நமஸ்கரித்து, ஓர் விஷங்கலந்த குளிகையைக் கொடுத்து, "அரசே! இந்த ரஸாயனம் அரசர்களுக்கேற்றது ; இதனைச் சாப்பிட்டால், மூப்பும் இறப்பும் உண்டாகா; ஆதலின் இதைத் தாங்கள் சாப்பிட வேண்டும்" என்று சொன்னான். உடனே சந்திரகுப்தன் அதை வாங்கி, ஒரு தங்கத்

தட்டில் வைத்தான். அப்பொழுது அதில் கறுப்புக்கோடு உண்டாயிற்று. அதனால் சாணக்யன் சந்தேகங்கொண்டு அந்த வைத்தியனைப்பார்த்து, "ஐயா! ராஜவைத்தியரே! நீர் இம்மருந்தில் கொஞ்சம் முதலில் சாப்பிடும்! பிறகு அரசர் உட்கொள்ளுவார்" என்று சொன்னான். அதைக்கேட்ட வைத்தியன் அரசன் ஆணைக்குப் பயந்து, தன் மருந்து விஷங் கலந்ததென்று தெரிந்திருந்தும், மறுக்க விதியில்லாமல் அதைச் சாப்பிட்டு இறந்தான். பின்பு சாணக்யன் "இவைகளெல்லாம் ராக்ஷஸனுடைய சூழ்ச்சிகள்" என்று தீர்மானித்து, முன்னினும் பன்மடங்கு சாவதானத்துடன் காரியங்களைக் கவனித்து வந்தான்.

ராக்ஷஸன் சந்திரகுப்தனைக் கொல்வதற்காக எங்கெந்த இடங்களில், எங்கெந்த சகாயங்களுடன் எவரெவர்களை நியமித்தானோ, அந்தந்த சாதனங்களாலே அவரவர்களே கொல்லப்பட்டார்கள். ஆகவே, ராக்ஷஸனுடைய முயற்சிகள் சந்திரகுப்தனுக்கே மிகுந்த நன்மையைக் கொடுப்பவைகளாக முடிந்தன. பின்பு சாணக்யன் சுபமுகூர்த்தத்தில் மந்திரி பிரதானிகளோடு நந்த ராஜ்யத்தில் சந்திரகுப்தனுக்குப் பட்டாபிஷேகஞ் செய்து வைத்தான். புது அரசனும் குடிகளை நீதிவழுவாமல் பரிபாலித்து வந்தான். இவ்விஷயங்களை ராக்ஷஸன் ஒற்றர்கள் மூலமாகவறிந்து, தன் முயற்சிகள் வீணானது பற்றி மனமிடிந்து வருந்தினான்.

## எட்டாவது அத்தியாயம்

### சாணக்யனின் யோசனையும் முயற்சியும்

அப்பால் சாணக்யன் தனக்குள்ளே பின்வருமாறு ஆலோசித்தான்:—"நான் இப்பொழுது பிரதிஞ்ஞை செய்ததை

நிறைவேற்றி விட்டேன்; ஆயினும் நான் வீட்டுக்குப்போனால், ராக்ஷஸன் இங்கேவந்து போர்செய்து, சந்திரகுப்தனுடைய ராஜ்யத்தைப் பிடுங்கிக் கொள்வான்; அவனே ராஜ நீதியிலும் தந்திரத்திலும் மகாநிபுணன்; அவனுக்கு எஜமான பக்தி உண்மையாயிருக்கிறது; நான் இங்கேயேயிருந்தால், என் தவமெல்லாம் வீணாய்விடும்; ஆதலால் எவ்விதமேனும் ராக்ஷஸனைக் கொண்டுவந்து மந்திரியாக்க வேண்டும்; நந்தவம்சத்தின் மூலபுருஷனான ஸர்வார்த்தஸித்தி உயிரோடிருக்கும் வரையில், ராக்ஷஸன் சந்திரகுப்தனுக்கு மந்திரியாகச் சம்மதிக்க மாட்டான் என்றெண்ணி, மாறு வேடத்துடன் சென்று அவனைக் கொல்லும்படி ஏற்பாடும் செய்தாய்விட்டது. ஆயினும் ராக்ஷஸன் நம்மோடு சமாதானத்திற்கு இசையமாட்டான். அவனை உபாயங்களாலேயே வசியஞ் செய்யவேண்டும். நான் இருக்கும் பொழுது சந்திரகுப்தனை யார் மோந்து பார்க்கக்கூடும்? கொழுத்த யானையின் மண்டையிலறைந்து, அதன் இரத்தத்தைக் குடித்துக் கொட்டாவி விட்டுத் தூங்கும் சிங்கத்தின் பல்லைப் பிடுங்குவது போலல்லவா என் கோபத்தை எதிர்ப்பது? என் குடுமியானது நந்தகுலத்திற்கு ஒரு கால ஸர்ப்பம் போலவும் என் கோபமாகிற நெருப்புக்கு ஒரு புகை போக்கி போலவும் இருக்கிறதன்றோ? ராக்ஷஸனோ நந்தகுல அரசரிடம் கோபமடைந்து, தன்னைப்போல் தகப்பனுடைய நாசத்தால் கோபமடைந்திருக்கும் மலயகேதுவிடஞ் சென்று, சமாதானஞ் செய்துகொண்டு, அவனுக்குக் குஸுமபுரத்தைப் பிடித்துக் கொடுக்கத் தீர்மானித்திருக்கிறான்; அவனுடைய காரியத்திற்குத் தடைசெய்ய என்னால் முடியாதா? பூமிக்கு ஒன்பது வியாதிகள் போலிருந்த நந்தர்களைப் பிடுங்கி யெறிந்து விட்டேன்; ஓடையில் தாமரைக் கொடிபோல் சந்திரகுப்தனிடம்

லக்ஷ்மியை நாட்டியாய் விட்டது; என் சபதம் நிறைவேறி விட்டபோதிலும், சந்திரகுப்தனை உத்தேசித்துக் கையில் கத்தி பிடித்திருக்கிறேன். அடே! அமாத்ய ராக்ஷஸா! உன் குணத்தை என்னவென்று கூறுவேன்? ஜனங்கள், நமக்கு ஏதாவது சகாயம் செய்ய மாட்டாராவென்றுச் செல்வமுள்ள எஜமானைச் சேவிப்பது வழக்கம்; எஜமானுக்குக் கை சளைத்த காலத்தில், 'இவர் நல்ல நிலைமைக்கு வரும்போது நமக்கு உதவி செய்வார்' என்றெண்ணி உழைப்பது வழக்கம்; தலைவர்கள் இறந்த பின்பும், அவர்களைச் சேர்ந்தவர்களைக் குறித்து உழைப்பது பழைய நன்றியை மட்டும் எண்ணிச் செய்வதேயாகும். உன்னைப்போல் பக்தியால் மட்டும் உழைப்பவர்களை நான் கண்டதில்லை; கேட்டதுமில்லை. புத்தியற்ற பயங்காளியான ஒரு சேவகனிருந்தால், அவன் எவ்வளவு எஜமான பக்தியுள்ளவனா யிருந்தாலும் பயனில்லை; நல்லபுத்தியும் சக்தியும் ஒருவனுக்கிருந்தும், அவனுக்குத் தலைவனிடம் விசுவாசமில்லாதிருந்தால், அதிலும் பயனில்லை; எஜமானனுடைய நன்மைக்காகவே புத்தி சக்திகளைப் பெற்றிருப்பவனே உண்மையான சேவகன். மற்றவர்களால் பயனில்லை. ஏ ராக்ஷஸா! உத்தமஸேவகனாகிய உன்னை வசியஞ் செய்வதற்காக நகரெங்கும் பல தூதர்களை நியமித்திருக்கிறேன்" என்று சாணக்யன் யோசித்துக்கொண் டிருக்கும்பொழுது, ஒரு பிச்சைக்காரன், கையில் யமலோகத்துப் படங்களை வைத்துக்கொண்டு, "எமனுடைய திருவடிகளை வணங்குங்கள்! மற்றைய தெய்வங்களைக் கொண்டாடுவதில் பயனில்லை; படபடவென்று துடிக்கும் உயிரைக் கொண்டுபோகிறவர் எமன்தானே. வேறு தெய்வங்களைப் பகைத்துக்கொண்டால், சிலகாலம் வாழலாம். எமனைப் பகைத்துக்கொண்டு வாழ்வதுண்டோ? எல்லோரையும் கொல்லு

கிறவன் அவனே! நாம் பிழைத்திருப்பதும் அவனாலே!'' என்ற கருத்துள்ள இரண்டு பாட்டுகளைப் பாடிக்கொண்டு வாசலுக்கு வந்தான்.

அப்பொழுது வாசலில் காவலிருந்த ஒரு சிஷ்யன் "அடே! உள்ளே போகாதே!'' என்றான். அதற்கு அவன் "ஐயா, நான் உள்ளேயிருக்கும் உமது எஜமானனுக்குக் கொஞ்சம் தருமோபதேசம் செய்யக் கூடாதா?'' என்றான். அது கேட்ட சிஷ்யன் "சீ! முட்டாளே! எங்களுடைய எஜமானை விட நீ தருமம் தெரிந்தவனோ?'' என, அவன் 'ஐயா! கோபிக்க வேண்டாம்; எல்லா மறிந்தவர் ஒருவருமில்லை; எனக்குச் சில தருமங்கள் தெரியும்; உன் எஜமானுக்குச் சில தருமங்கள் தெரியும்'' என்றான். இதைக் கேட்ட சிஷ்யன் கோபித்து "அடா! முட்டாள்! எங்களுடைய எஜமானுக்கு எல்லாம் தெரியாது என்று வாதாடுகிறாயா?'' என்று கேட்க, அவன் "உன் எஜமான் எல்லாவற்றையும் அறிந்திருந்தால், 'சந்திரனுக்கு யார் சத்துரு?' என்று கேட்டுச் சொல்!'' என்றான். அதற்குச் சிஷ்யன் "அடே! சந்திரன் யாருக்குப் பகைவன் என்று அறிந்தாக வேண்டிய தென்ன?'' என்று கேட்க, அவன் "ஐயா! தாமரைகள் சந்திரனுக்குச் சத்துரு அல்லவா?'' என்றான்.

இதை உள்ளே யிருந்து கேட்ட சாணக்யன் அவனை உள்ளே வரவழைத்து "அப்பா! நான் உன்னை இந்நகரில் சந்திரகுப்தனுடைய பகைவரை அறிந்து வருமாறு அனுப்பினேனல்லவா? நீ என்ன அறிந்து வந்தாய்?'' என்று கேட்க, அவன் "ஜீவஸித்தி யென்ற சந்நியாசியும் சகடதாஸன் என்ற கணக்கனும் சந்தனதாஸன் என்ற இரத்தின வியாபாரியும் சந்திரகுப்தனுக்குப் பகைவர்கள்'' என்றான். இதைக் கேட்ட

சாணக்யன் "ஜீவஸித்தி நம்முடைய ஆள் என்பதை இவன் அறியவில்லை; சகடதாஸனிடமும் முன்னமேயே ஸித்தார்த்தக னென்ற நமது ஆளை வைத்திருக்கிறேன்" என்று எண்ணிக் கொண்டிருக்கும் பொழுது, அந்தப் பிச்சைக்காரன் "இது ராக்ஷஸனுடைய மோதிரம்" என்று கூறி, ஒரு மோதிரத் தைக் கொடுத்தான். சாணக்யன் அதை வாங்கிக் கொண்டு "இம்மோதிரம் உனக்கு எப்படிக் கிடைத்தது?" என்று கேட்டான். அதற்கு அவன் "ஸ்வாமீ! தாங்கள் என்னை நகர சோதனைக்காக அனுப்பிய பிறகு நான் ஆண்டி வேஷத்துடன் யமலோகத்துப்படங்களை யெடுத்துக் கொண்டு, வீடு வீடாகச் சென்று பாடிப் பிச்சை வாங்கி வந்தேன்; சந்தனதாஸனுடைய வீட்டிற் பாடிக் கொண்டிருக்கும் பொழுது, உள்ளேயிருந்த ஆறு வயதுள்ள ஒரு குழந்தை சிரித்த முகத்துடன் வெளியே வந்து, வாசற்படியிலுட்கார்ந்து, வேடிக்கை பார்த்துக்கொண் டிருந்தது. அப்பொழுது, "குழந்தைவெளியேபோய்விட்டதே! என்ன செய்வேன்? குழந்தையைப் பிடி!" என்று உள்ளே இரைச்சலுண்டாயிற்று. உடனே உள்ளேயிருந்து ஒரு பெண் ஓடிவந்து, கதவு மூலையில் முகத்தை மறைத்துக் கொண்டு, கையை நீட்டிக் குழந்தையை எடுக்கும்பொழுது, அவளுடைய விரலிலிருந்து ஒரு மோதிரம் நழுவி, என் காலடி வரையில் உருண்டு வந்து நின்றது. பரபரப்பாயிருந்த அம் மாது தன் கைவிரலிலிருந்து மோதிரம் நழுவி விழுந்ததை அறியவில்லை. நான் அம்மோதிரத்தை யெடுத்து, அதில் வெட்டியிருக்கும் எழுத்துக்களைப் பார்த்து, 'இது ராக்ஷஸனுடைய முத்திரை மோதிரம்; வந்த பெண் ராக்ஷஸனுடைய மனைவி; அச்சிறு வனும் ராக்ஷஸனுடைய குமாரனே; ராக்ஷஸன் சந்தன தாஸ னுடைய வீட்டில் தன் மனைவி மக்களை வைத்திருக்கிறான்

என்றறிந்து மோதிரத்துடன் தங்களிடம் வந்தேன்" என்றான். அதைக்கேட்ட சாணக்யன் சந்தோஷமடைந்து "அப்பா! நீ போய்வா; பிறகு தக்க வெகுமானம் செய்கிறேன்" என்று சொல்லி, அவனுக்கு விடை கொடுத் தனுப்பினான்.

பின்பு ஒரு தூதன் சாணக்யனிடம் வந்து "ஸ்வாமீ, பர்வ தேசுவரன் அணிந்திருந்த விலையுயர்ந்த நகைகள் மூன்றையும் யாருக்காவது தானம் செய்யலாமா? என்று சந்திரகுப்த ராஜா கேட்கிறார்" என்று தெரிவிக்க, சாணக்யன் "அடே! சேவகா! சந்திரகுப்தன் விருப்பம் போலவே அந்நகைகளைத் தானம் செய்யட்டும்; பர்வதேசுவரனுடைய நகைகள் விலையற்ற வைகள்; ஆகையால் அவைகளைச் சாதாரணப் பிராமணர் களுக்குக் கொடுக்கக்கூடாது; நான் பரீக்ஷித்து அனுப்புகிற பிராமணர்களுக்குக் கொடுக்கும்படி சொல்!" என்று சொல்லி யனுப்பினான். பிறகு சாணக்யன் 'விசுவாவஸு' முதலிய மூன்று பிராமணர்களை வரவழைத்து, "விப்பிரர்களே! நீங்கள் சந்திரகுப்தனிடஞ் சென்று மூன்று நகைகளையும் தானமாகப் பெற்றுக்கொண்டு, யவன தேசஞ் சென்று, இராக்ஷஸனிடம் அவைகளை என்ன விலைக்குக் கேட்டாலும் விற்றுவிடுங்கள்!" என்று சொல்லி யனுப்பினான். அவர்களும் சரி யென்று சொல்லி, சந்திரகுப்தனிடஞ் சென்று, நகைகளைப் பெற்றுக் கொண்டு, யவன தேசஞ் சென்று ராக்ஷஸனிடம் காட்டினார் கள். ராக்ஷஸன் அவைகளைக் கண்டு "அந்தணர்களே! இந் நகைகளை எனக்கு விலைக்குக் கொடுங்கள்! ஏராளமான பொருள் தருகிறேன்" என்று கேட்க, பிராமணர்களும் அதற் குச் சம்மதித்தனர். ராக்ஷஸன் மிகுந்த பொருள் கொடுத்து, அந்நகைகளை வாங்கித் தன் பெட்டியில் வைத்தான்.

அப்பால் சாணக்யன் மொட்டையான கடித மொன்றை எழுதி, சகடதாஸனிடம் சிநேகிதன்போல் நடித்துவரும் தன்

சீடனாகிய ஸித்தார்த்தகனை வரவழைத்து, அக்கடிதத்தை அவனிடம் கொடுத்து, "அன்ப! என் எழுத்து நன்றாயில்லை; ஆதலால் நீ சகடதாஸனிடஞ் சென்று, இக்கடிதம்போல் ஒரு கடிதம் எழுதி வாங்கி வா! நான் எழுதி வாங்கி வரச் சொன்னேன் என்ற விவரம் அவனுக்குத் தெரியவேண்டாம்" என்று சொல்லி யனுப்பினான். உடனே ஸித்தார்த்தகன் சகடதாஸனிடஞ் சென்று, அதே மாதிரி கடிதமெழுதி வாங்கிக்கொண்டு வந்து, சாணக்யனிடம் கொடுத்தான். அவன் அக்கடிதத்தை வாங்கி, அதில் ராக்ஷஸன் முத்திரை மோதிரத்தால் முத்திரை வைத்து, மோதிரத்தையும் கடிதத்தையும் ஸித்தார்த்தகனிடம் கொடுத்தான்.

பின்பு சாணக்யன் அவனைப்பார்த்து, "அப்பா! இப்பொழுது நானே செய்யவேண்டிய காரியத்திற்காக உன்னை அனுப்புகிறேன்; நீ அக்காரியத்தை நிறைவேற்றி வரவேண்டும்; இன்னுஞ் சிறிது நேரத்திற்கெல்லாம் நான் சகடதாஸனைத் தூக்குப்போடுமாறு உத்தரவு செய்யப் போகிறேன்; கொலையாளிகளிடம் கடைக் கண்ணைச் சிமிட்டி, ஜாடைகாட்டுவோனைக் கண்டால், ஓடிப்போகும்படி சொல்லியிருக்கிறேன்; சகடதாசன் கொலைக் களத்திற்குப் போகும்பொழுது, நீ அவனைத் தொடர்ந்து சென்று யாரவன் என் எஜமானனைக் கொலை செய்கிறவன்?" என்று கோபத்துடன் அதட்டி, கண் ஜாடைகாட்டி, கொலையாளிகளைத் துரத்திவிட்டுச், சகடதாஸனை அழைத்துக்கொண்டு யவனதேசஞ் செல்லவேண்டும்; பின்பு அங்கே ராக்ஷஸனைக்கண்டு, அவன் நண்பனான சகடதாஸனுடைய உயிரைக் காத்ததற்காக ராக்ஷஸனிடம் பரிசுபெற்று, அதை அவனிடமே கொடுத்து வைத்துவிட்டுச் சிலகாலம் அங்கேயே வசித்துக்கொண்டிரு! பிறகு நமது சேனாதிபதிகளான

பத்ரபடன் முதலியோர் அவ்விடம் வந்து சேர்ந்த பின், ராக்ஷஸன் கொடுத்த நகையையும் இக் கடிதத்தையும் எடுத்துக் கொண்டு, சுங்கச்சாவடியில் வந்து காட்டி, ராக்ஷஸனுக்கும், மலயகேதுவுக்கும் மித்திரபேதஞ் செய்யவேண்டும்" என்று கூறி, இன்னுஞ் சில சமாசாரமுஞ் சொன்னான். ஸித்தார்த்தகனும் சரியென்று கூறி விடைபெற்றுச் சென்றான்.

பிறகு சாணக்யன் பௌத்தசந்நியாசியாகிய ஜீவஸித்தியை வரவழைத்து, "அவன் நீ ராக்ஷஸனால் ஏவப்பட்டு, நமக்கு மிக்க உபகாரஞ்செய்த பர்வதேசுவரனிடம் விஷகன்னிகையை அனுப்பிக் கொன்றுவிட்டாய்; ஆதலால், நீ இனி இந்நகரத்திலிருக்கக் கூடாது; இங்கே யிருந்தால் உன்னைக் கசையால் அடிப்பேன்; இப்பொழுதே எங்கேயாவது ஓடிப் போ!" என்று சொன்னான். உடனே ஜீவஸித்தி "ஹா! கடவுளே! என்னையும் இப்படிச் சோதிக்கலாமா?" என்று வருத்தப்படுவதுபோல் அபிநயித்து, அங்கிருந்து கிளம்பி, ராக்ஷஸனிடஞ் சென்று, நடந்த விவரத்தைக் கூறி, அங்கேயே வசித்து வந்தான். பிறகு சாணக்யன் சகடதாஸனை வரவழைத்து "அடே! நீ ராக்ஷஸனுடைய தூண்டுதலின் பேரில் நமக்குப் பல தீங்குகளைச் செய்து வருகிறாய்; அக்குற்றத்திற்காக உன்னைக் கழுவிலேற்றிவிடத் தீர்மானித்திருக்கிறோம்" என்று கூறி, அவனைக் கொலையாளிகளிடம் ஒப்புவித்து, அவனைக் கொன்று விடும்படி கட்டளை யிட்டான். உடனே அவர்கள் அவனைக் கொலைக்களத்திற்கு அழைத்துச் சென்றனர். அப்பொழுது ஸித்தார்த்தகன் அங்கே வந்து, கண் ஜாடைகாட்டிக் கொலையாளிகளைத் துரத்திவிட்டுச், சகடதாஸனை அழைத்துக் கொண்டு ராக்ஷஸனிடஞ் சென்றான். இவ்விஷய முணர்ந்த சாணக்யன் சகடதாஸனுடைய உறவினர்களைக் காராகிருகத்திலடைக்கும்படி உத்தரவிட்டான்.

பின்னர் சாணக்யன் சந்தனதாஸனை அழைத்து வருமாறு சேவகர்களை யனுப்பினான். சேவகர்களைக் கண்டதும் சந்தன தாஸன் திடுக்கிட்டுப்போனான்; பிறகு அவன்சேவகனை அனுப்பி விட்டுத் தனது நண்பனான தனஸேனன் முதலியோரிடம் சாணக்யன் என்ன ஹிம்ஸை செய்தாலும், ராக்ஷஸனுடைய மனைவி மக்களைக் காட்டிக் கொடுக்கா திருக்குமாறு ஏற்பாடு செய்து விட்டுச் சாணக்யனிடம் வந்தான். சந்தனதாஸனைக் கண்டதும் சாணக்யன் "ஐயா! உம்மிடம் ராக்ஷஸன் ஒப்பு வித்திருக்கும் மனைவி மக்களை எம்மிடம் ஒப்புவிக்கவேண் டும்; இன்றேல், இராஜத்ரோகத்திற்காகத் தண்டனை பெறுவீர்" என்று சொன்னான். அதுகேட்ட சந்தனதாஸன் "ஸ்வாமீ! அவர்கள் அப்பொழுது என் வீட்டி லிருந்தார்கள்; இப் பொழுது இல்லையே! இப்பொழுது இருந்தாலும் நான் அவர் களைக் காட்டிக் கொடுக்க மாட்டேன்! இல்லாமலிருக்கும் பொழுது, அவர்களை எப்படிக்கொடுக்கக் கூடும்?" என்று கூறி னான். இதுகேட்ட சாணக்யன் கோபங் கொண்டு அவனைச் சேவகர்களிடம் ஒப்புவித்து, "ராக்ஷஸனுடைய மனைவிமக்களை இவன் நம்மிடம் ஒப்புவிக்கும் வரையில், இவனைச் சிறையில் வையுங்கள்! சந்திரகுப்தன் இவனுக்கு மரண தண்டனை விதிப் பான்" என்று கட்டளை யிட்டான். உடனே சேவகர்கள் சந் தனதாஸனைச் சிறைச்சாலைக்குஅழைத்துச் சென்றனர். சந்தன தாஸனோ தன் நண்பனுடைய காரியத்தை நிறைவேற்றத் தன் உயிரையும் கொடுக்கத் துணிந்திருந்தான். இதையறிந்த சாண க்யன் "இதுவும் ராக்ஷஸனை வசப்படுத்துவதற்கு ஓர் உபா யமே" என்று எண்ணினான்.

பின்பு சாணக்யன் கொலைக்களத்திலிருந்து தப்பியோடிய சகடதாஸனைப் பிடித்து வருமாறு பத்ரபடன், புருஷதத்தன், டிங்கிராதன், டலகுப்தன், ராஜஸேனன், ரோகிதாக்ஷன்

விஜயவர்மன் என்ற சேனாபதிகளையும் அனுப்பி, அவர்களிடம் தந்திரமாய் ஏதோ சமாசாரமும் சொன்னான்.

உடனே பத்ரபடன் முதலியோர் குஸுமபுரத்திலிருந்து யவன தேசஞ் சென்று, மலயகேதுவின் சேனாபதியான சிகரகனை முன்னிட்டுக்கொண்டு, மலயகேதுவைக் கண்டு கும்பிட்டுக் காணிக்கைகளை வைத்துக் கைகட்டி நின்றார்கள். மலயகேது அவர்களை உட்காரச் சொல்லி "— நீங்கள் இங்கே வந்த காரணம் யாது?" என்று கேட்டான். அதற்கு அவர்கள் "ஸ்வாமீ! நாங்கள் நந்த ஸேனாபதிகளான பத்ரபடன் முதலியோர். பாடலீபுரம் சந்திரகுப்தன் வசப்பட்டதும், சாணக்யன் எங்களிடம் சந்தேகங்கொண்டு, எங்களை வரவழைத்து, இப்பொழுதே பாடலீபுரம் விட்டுச் செல்லவேண்டுமென்றும், இன்றேல், கொடிய தண்டனை விதிக்கப்படுமென்றும் கடுமையாகக்கூறினான். அதனால் நாங்கள் அவ்விடம் விட்டுப்புறப்பட்டு இங்கே வந்தோம்; தாங்கள் எங்களுக்குத் தகுதியான வேலை கொடுத்தால், இங்கே இருக்கிறோம்; தங்களுக்குத் தேவை யில்லாவிட்டால், வேறிடம் போகிறோம்" என்று பதிலுரைத்தனர். இதைக்கேட்ட மலயகேது "சேனாபதிகளே! சாணக்யனிடம் வெறுப்புற்று இங்கே வந்திருப்பதால், உங்களுக்கு என் தேசத்தில் தக்கவேலை தருகின்றோம், நீங்கள் இங்கேயே இருங்கள்!" என்று கூறி, அவர்களுக்குத் தக்கவாறு சேனாபதி முதலிய வேலைகளைக் கொடுத்துத் தன்னிடமே வைத்துக் கொண்டான். இதைக் கேள்வியுற்ற சாணக்யன் வெளிக்குக் கோப முள்ளவன்போல் அபிநயித்து, உள்ளுக்குள் "இனி ராக்ஷஸன் அகப்பட்டு விடுவான்" என்று தீர்மானித்தான்.

# ஒன்பதாவது அத்தியாயம்

## சகடதாஸனும் ஸித்தார்த்தகனும்.

இனி, யவன தேசத்திலுள்ள ராக்ஷஸனுடைய செய்தியைச் சிறிது ஆராய்வோம் ராக்ஷஸன் ஒருநாள் சந்திரகுப்தனை யொழிப்பதற்குத் தான் செய்த உபாயங்கள் பயன்படாமல் போவதை யெண்ணி வருத்தப்பட்டு, "ஐயோ! என்ன கஷ்டம்! நற்குண நற்செய்கைகளோடு கூடிய நந்த வம்சம் அடியோடு அழிந்து போனதை யெண்ணி யெண்ணி, என் ஆவி அற்றுப்போகிறது. நந்தர்கள் பரலோகத்தை அடைந்திருந்த போதிலும் சத்துருவின் நாசத்தால் அவர்களுக்குத் திருப்தி யுண்டாகுமென் றெண்ணியே நான் சிரமப்பட்டு முயற்சி செய்கிறேன்; எனக்குத் தெய்வ சகாயம் இல்லையே! நான் என்ன செய்வேன்?" என்று யோசித்துக் கொண்டிருக்கும் பொழுது, ஒரு தூதன் வந்து, "மலயகேது இந்த முத்தாரத்தைக் கழுத்தில் அணிந்து கொள்ளச் சொன்னார்" என்று கூறிக் கொடுத்துச் சென்றான்.

பின்பு, பாம்பாட்டி வேஷம் பூண்டு குஸுமபுரம் சென்ற விராதகுப்தனென்ற ஒற்றன் ராக்ஷஸனிடம் வந்து, சந்திரகுப்தன் பட்டணப் பிரவேசம் செய்தது முதல் சகடதாஸனைக் கழுவிலேற்றக் கொலைக் களத்திற்கு அழைத்துச் சென்றது வரையில், ஆதியோடந்தமாகச் சொன்னான். சகடதாஸன் கழுவிலேற்றப்பட்டா னென்பதைக்கேட்டதும், ராக்ஷஸன் தாரை தாரையாகக் கண்ணீர் விட்டுக்கொண்டு "நான் என்ன செய்தாலும்சத்துருபக்ஷமே வலுக்கிறதே!" என்றுபுலம்பினான். அப்பொழுது அந்த தூதன் "எஜமானே இந்த இடையூறு

களைக்கண்டு தாங்களே அஞ்சினால், தங்களுக்கும் மற்றவர்களுக்கும் என்ன வித்தியாசம்? அற்பபுத்தியுள்ளவர்கள் இடையூறுகளுக்கஞ்சி, எக்காரியத்தையும் ஆரம்பிப்பதில்லை; மத்திமபுத்தியுள்ளவர்கள் ஒருகாரியத்தைத் தொடங்கி, இடையில் ஏதேனும் இடையூறு வந்தால், அதனாலேங்கிப் போய், தொடங்கிய காரியத்தை நடுவில் விட்டு விடுகிறார்கள். தங்களைப் போல் விடாமுயற்சியுள்ள உத்தம புத்திசாலிகள், இடைவிடாது இடையூறுகள் வரினும் அவற்றைப் பொருட்படுத்தாமல், ஆரம்பித்த காரியத்தை முடிப்பார்கள். இதுபற்றியே ஆன்றோர்,

'மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்டுஞ்சார்
எவ்வெவர் தீமையு மேற்கொள்ளார்—செவ்வி
அருமையும் பாரா ரவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணாயி னார்'

என்று கூறியுள்ளனர். ஆதலால், தொடங்கிய காரியத்தை எவ்வாறேனும் முடிப்பதே தங்களைப் போன்றவர்களுக்குத் தகுதியானது" என்றான். இதைக்கேட்ட ராக்ஷஸன் "அப்பா! நீ சொல்வது சரிதான்; அதனால்தான் நானும் தொட்ட காரியத்தை விடக்கூடாதென்று முயற்சித்து வருகிறேன்" என்று கூறிவிட்டு, "சகடதாஸனைக் கொலைக்களத்திற்கு அழைத்துச் சென்ற பிறகு என்ன நடந்தது?" என்று கேட்க, அவன், "சந்தனதாஸன் தங்களுடைய மனைவிமக்களை ஒப்புவிக்காததற்காகச் சிறையிலடைக்கப்பட்டான்" என்றான். ராக்ஷஸன் அதைக்கேட்டு திடுக்கிட்டு மனம் பதைத்தான்.

அப்பொழுது சகடதாஸன் ஸித்தார்த்தகனோடுகூட ராக்ஷஸனிடம் வந்து அவனை நமஸ்கரித்தான். ராக்ஷஸன் எமனுடைய வாயிலிருந்து நழுவி வந்தவனைப்போ லிருக்கும் சகடதாஸனைக்கண்டு, வெகு ஆவலுடன் எழுந்து, அவனைத்

தழுவிக்கொண்டு "அப்பா! நீ எமன் வாயிலிருந்து எப்படித் தப்பிவந்தாய்? உன்னைக் கழுவிலிருந்து விடுவித்தவன் யார்?" என்று கேட்டான். அதற்குச் சகடதாஸன் "நண்ப! இந்த மகாநுபாவனுகிய ஸித்தார்த்தகனுல் கொலையிலிருந்து விடுவிக்கப்பட்டேன்; இவன்செய்த உதவியால் இவனைத் தகப்பனென்று கூறவேண்டும்" என்று ஸித்தார்த்தகனைக் காண்பித்து, நடந்த விவரத்தையும் கூறினுன்.

அவற்றைக்கேட்ட ராக்ஷஸன் ஸித்தார்த்தகனிடம் மிகுந்த பிரியமடைந்து, சற்று முன் மலயகேதுராஜனக்குக் கொடுத்தனுப்பிய முத்துமாலையைக் கழற்றி, ஸித்தார்த்தகனைப் பார்த்து, "அப்பா! நீ செய்த பரம உபகாரத்திற்கு இது ஈடற்றதா யிருந்தபோதிலும், இதைப் பெற்றுக்கொள்!" என்று கூறி, அதை அவனுடைய கழுத்தில் போட்டான். ஸித்தார்த்தகன் அதை வணக்கத்துடன் பெற்றுக்கொண்டு "ஐயா, சாணக்யனுக்குத் தண்டனை விதித்த பிறகே குஸுமபுரஞ் செல்ல வேண்டும்; ஆதலால், தங்களிடமே ஊழியஞ் செய்துகொண்டிருக்க விரும்புகிறேன்; அதற்குத் தாங்கள் உத்தரவு கொடுக்க வேண்டும்; நான் இங்கே புதிதாய் வந்தவன்; இந்நகையை வைப்பதற்கு எனக்கு ஒரு பெட்டி கொடுக்க வேண்டும்; இந்நகையை அப்பெட்டிக்குள் வைத்து, எனது முத்திரையும் வைத்துத் தங்களிடம் தருகிறேன்; அது தங்களுடைய பொக்கிஷத்திலேயே இருக்கட்டும்; அதை வேண்டும்போது வாங்கிக்கொள்ளுகிறேன்" என்று கூறினுன். உடனே ராக்ஷஸன் சரி யென்று கூறி, ஒரு பெட்டி கொடுக்க, ஸித்தார்த்தகன் அப்பேழைக்குள் நகையை வைத்து, தன்னிடமிருந்த முத்திரை மோதிரத்தால் முத்திரை வைத்துக் கொடுத்தான். அப்பொழுது ராக்ஷஸன் அம்மோதிரத்தில் தன் பெயர் செதுக்கியிருப்பதைக் கண்டு, திகிலுற்று, "நான் குஸுமபுரத்திலிருந்து

புறப்படும்பொழுது, பொழுது போக்கிற்தாக என் மனைவியிடம் கொடுத்த மோதிரம் இவனிடம் எவ்வாறு வந்தது?" என்று யோசித்தான்; பிறகு அவன் ஒருவாறு தைரியமடைந்து, "அப்பா! உனக்கு இம்மோதிரம் எப்படிக் கிடைத்தது?" என்று கேட்க, அவன், "குஸுமபுரத்தில் சந்தனதாஸன் என்றொரு இரத்ன வியாபாரி இருக்கிறான். அவனுடைய வீட்டு வழியாகப் போகும்பொழுது, வாசலிலிருந்து இம்மோதிரம் அகப்பட்டது" என்றான். அதுகேட்ட ராக்ஷஸன் உண்மையென்று நினைத்து, ஸித்தார்த்தகனிடம் ஏராளமாகப் பொருள் கொடுத்து அம்மோதிரத்தை வாங்கிச் சகடதாஸனிடம் கொடுத்து "நண்ப! நீ நாளை முதல் இம்மோதிர முத்திரையைக் கொண்டு கச்சேரிக் காரியங்களை நடத்தவேண்டும்" என்று கட்டளை யிட்டான். சகடதாஸன் சரியென்று மோதிரத்தைப் பெற்றுக்கொண்டு, முன்போலவே ராக்ஷஸனுக்கு எழுத்து வேலைக்காரனாக இருந்து வந்தான்.

அப்பொழுது ராக்ஷஸன், சாணக்யனுக்கும் சந்திரகுப்தனுக்கும் சண்டை மூட்டுவதற்கு முயற்சித்துக் கொண்டிருந்தான்.

---

## பத்தாவது அத்தியாயம்

---

### போலி மனஸ்தாபங்கள்.

இது நிற்க, ஒரு சமயம் சாணக்யன் சந்திரகுப்தனைப் பார்த்து, "அப்பா! என்னோடு சண்டை யிட்டுக்கொண்டு சில காலம் பிரிந்திருக்க வேண்டும்; அதனால் அநேக காரியங்கள் ஆகவேண்டியவைகளாய் இருக்கின்றன; நான் நந்தர்களால்

அவமானஞ் செய்யப்பட்டு, வெளியிற் சென்று, நந்தர்களைக் கொன்று, உன்னைப் பட்டத்தில் வைத்ததுபோல, ராக்ஷஸ னும் உன்னைக் கொன்று, மலயகேதுவுக்குக் குஸுமபுரத்தில் பட்டங்கட்டுவதாக நினைத்துக் கொண்டு முயற்சி செய்து வரு கின்றான்; அது ஒருநாளும் நிறைவேறாது; நான், மலயகேது விடம் என்னுடைய தூதர்களை மாறுவேஷத்துடன் வைத்தி ருக்கிறேன்; இப்பொழுது நீ என்னோடு கபடமாகச் சண்டை போட்டுக் கொள்!'' என்று சொன்னான். அதுகேட்ட சந் திரகுப்தன் முதலில் நடுங்கினான். பின்பு அவன் "குருவின் சொல்லை மீறி நடந்தால் ஆபத்துண்டாகும்'' என்று நினைத் துச் சண்டை செய்வதாக ஒப்புக் கொண்டான்.

பின்பு ஒருசமயம் சரத்ருதுப் பருவம் வந்தது. அப்பொ ழுது முன்பு நாலாபக்கமும் நீரால் சூழப்பட்டிருந்த மணல் திட்டுகள், நீர் வற்றியதால் மேலே தெரியலாயின. அவற்றில் அன்னப் பறவைகள் அமர்ந்து விளையாடிக்கொண் டிருந்தன. நீர் தெளிந்தோடியதால் ஆறுகளுக்குள்ளும் நக்ஷத்திரங்கள் பூத்திருப்பதுபோல், தோன்றிற்று. சந்திரிகை யெங்கும் பரவி யிருந்த தோற்றமானது, ஆகாயமென்னும் மலையிலிருந்து ஆறு கள் பெருகி வருவதுபோ லிருந்தது. முன்பு கரைகளைப் பிளந்து கொண்டு ஓடிய நதிகள், பெட்டியில் பாம்புபோல் அடங்கி மெதுவாய் ஓடலாயின. நெற்கதிர்கள் நன்றாய் முற்றியிருந்த போதிலும், தங்களுக்கு வந்த பாக்யத்தைக் கண்டு நிமிர்ந்து நிற்காமல் வணங்கி விட்டன. ஆகவே சரத் காலம் உலகத்திற்கு வணக்கத்தைப் போதிக்கவந்த குருவைப் போல் விளங்கிற்று.

அப்பொழுது சாணக்யன் சந்திரகுப்தனைப் பார்த்து, "அப்பா! இது 'கௌமுதீமஹோத்ஸவ' த்திற்கு ஏற்றகாலம்; இப்பொழுதுதான் நல்ல நிலாவில் புருஷர்கள் தங்களுக்கிஷ்ட

மான இராகங்களைப் பாடிக்கொண்டு தெருவில் செல்லவேண்டும்; வீடுகளைச் சுண்ணும்பு அடித்துத் தோரணங்களால் அலங்கரிக்கவேண்டும்; அவ்வாறு செய்யுமாறு நீ எனக்கு உத்தரவு செய் ; நான் அதைச் செய்யாமலிருந்து விடுகிறேன்; அப்பொழுது நீ என்னை வரவழைத்துச் சண்டையிட்டுத் துரத்திஞல் வெகு காரியம் நிறைவேறும்'' என்று சொன்ஞன். அப்படியே கௌமுதீமஹோத்ஸவம் கொண்டாடும்படி சந்திரகுப்தன் உத்தரவு செய்தான். ஒருவரும் உற்சவம் கொண்டாடவில்லை. உடனே அவன் சாணக்யனை வரவழைத்து, "ஐயா! தாங்கள் ஏன் உற்சவத்தை நடத்தாமல் நிறுத்திவிட்டீர்கள்? தாங்கள் பயனமற்ற காரியத்தைச் செய்வதில்லையே !'' என்று கேட்க, அவன் "அரசே! தனக்குள் அடங்கிய அரசாட்சி, மந்திரிக்குள் அடங்கிய அரசாட்சி, அரசன் மந்திரி ஆகிய இருவருடைய யோசனையும் கலந்து நடைபெறும் அரசாட்சி என அரசாட்சியானது மூன்று வகைப்படும். இவற்றுள் அமைச்சனுடைய உதவிகொண்டு செங்கோல் செலுத்திவரும் தாங்கள் எக்காரியத்திற்கும் பயனை எதிர்பார்ப்பது சரியல்ல'' என்ருன். இதைக் கேட்டுச் சந்திரகுப்தன் கோபித்து முகத்தைத் திருப்பிக் கொண்டான்.

அப்பொழுது ராக்ஷஸனுல் அனுப்பப்பட்ட ஒரு தூதன் சந்திரகுப்தனிடம் வந்து "அரசே! தங்களைப் போன்ற மன்னவர்கள் கொழுத்த அரசர்களை அடக்குவதற்காகச் சிங்கங்களைப்போல் படைக்கப்பட்டிருக்கிருர்கள் ; அப்படிப்பட்ட தங்களை யாராவது அவமானஞ் செய்தால் பொறுக்க முடியுமா ? உண்பதஞலும் உடுப்பதஞலும் ஒருவன் பிரபுவாக மாட்டான். எவனுடைய கட்டளை எல்லோராலும் நடத்தப்படுகின்றதோ, அவனே பிரபுவாவான்'' என்று பொடிவைத்துப் பேசிஞன். சாணக்யன் இதைக்கேட்டு "இதுவும்

ராக்ஷஸனுடைய சூழ்ச்சிதான்" என்று தீர்மானித்தான். சந்திரகுப்தனே அந்த தூதனுக்கு ஆயிரம் ரூபாய் பரிசளிக்கும்படி கட்டளையிட்டான். உடனே சாணக்யன் "இவனுக்கு இவ்வளவு பரிசு கொடுக்கக்கூடாது; நீர் ஏன் பொருளை வீணுக்குகிறீர்? நான் சொல்வதைக் கேட்காவிட்டால், நீங்களே ராஜ்ய காரியங்களை நேரில் கவனித்துக் கொள்ளுங்கள்!" என்றான். அதற்கு அரசன், "அமாத்யரே! இனி நானே நேரில் ராஜ்ய காரியங்களைப் பார்த்துக்கொள்ளுகிறேன்; தாங்கள் உற்சவத்தை நிறுத்திய காரணத்தைக் கூறுங்கள்!" என்று கேட்க, சாணக்யன் "அரசே! உமது கட்டளை செல்லாமல் தடுத்தது முதலாவது பயன். இரண்டாவது பயனையும் கூறுகிறேன், கேளும். இங்கிருந்து ஓடிப்போன பத்ரபடன் முதலியோர் மலயகேதுவிடஞ் சென்று, நமது, இரகசியத்தை யெல்லாம் சொல்லிவிட்டனர். மலயகேது தந்தையைக் கொன்றதாலும் ராக்ஷஸனுடைய ஏவுதலாலும் கோபங்கொண்டு, ஏராளமான சேனைகளோடு கிளம்பி நம்மோடு போர் புரியத் தயாராயிருக்கிறான்; இப்பொழுது யுத்தத்திற்கு முயற்சி செய்யவேண்டியதாயிருக்க, உற்சவம் கொண்டாடுவது தகுதியன்று என்று நினைத்து, உற்சவத்தை நிறுத்தினேன்" என்றான்.

பின்பு சந்திரகுப்தன் "ஐயா! இவ்வாறு சகலமான தீங்குகளுக்கும் காரணமாயிருக்கும் மலயகேது இவ்விடமிருந்து போகும்பொழுது, ஏன் விட்டு விட்டீர்?" என்று கேட்க, சாணக்யன், "அரசே! மலயகேதுவைத் தடுத்து இங்கே நிறுத்தினால், ஒன்று அவனைக் கொல்லவேண்டும்; அல்லது முன்பு வாக்களித்தபடி, பாதிராஜ்யத்தைக் கொடுக்கவேண்டும்; அவனைக் கொன்றுவிட்டால் பர்வதேசுவரனை நாமே கொன்றோமென்பது வெளிப்படையாகும்; அவனுக்குப் பாதி ராஜ்யத்தைக் கொடுத்தால், பர்வதேசுவரனைக் கொன்றது வீணேயாகும்; இக்காரணங்களால் மலயகேதுவை விட்டுவிட்டேன்" என்றான்.

அதைக்கேட்ட சந்திரகுப்தன் "ஐயா! ராக்ஷஸன் இந்நகரிலிருந்து ஒளிந்திருந்து ஓடிப்போனதை ஏன் கவனிக்கவில்லை?" என்று கேட்டான். சாணக்யன் "வேந்தே! நந்தர்களிடம் அன்புள்ள குடிகள் ராக்ஷஸனிடமும் விசுவாசம் வைத்திருக்கின்றனர்; அவனும் புத்தி, பௌருஷம், எஜமான பக்தி, பொக்கிஷம், பலம் இவற்றோடு கூடியவன்; ஆதலால், அவன் இந்நகரத்திலேயே யிருந்தால், நமது குடிகளுக்குள் உட்கலகத்தையுண்டாக்குவான்; வெளியே துரத்திவிட்டால், அவ்வாறு செய்ய இயலாதென்று நினைத்து அவனையும் கவனிக்கவில்லை" என்று பதிலுரைத்தான்.

இதைக்கேட்ட சந்திரகுப்தன் "ஐயா! நான் பேசுவதில் தங்களைப்போல் திறமையுள்ளவனன்று; அமாத்ய ராக்ஷஸரே எவ்விதத்திலும் கொண்டாடத் தக்கவர்" என்று கூற, சாணக்யன் "மன்னவ! தங்களுடைய வார்த்தையால் நான் ராக்ஷஸனைப்போல் புத்திசாலியல்லவென்பது வெளியாகிறது. ராக்ஷஸன் தங்களுக்கு என்னநன்மை செய்தான்? நான் உமது பகைவரான நந்தர்களை வேருடன் களைந்து, இவ்விராஜ்யத்தை உமக்கு அளித்தேனே!" என்றான். அதற்குச் சந்திரகுப்தன் "ஐயா! ஆத்திரப்படவேண்டாம். இக்காரியத்தை நந்தர்களிடம் கோபங்கொண்ட விதியே முடித்துவைத்தது; இதையறியாமல் நீர் ஏன் குதிக்கிறீர்?" எனச் சாணக்யன் "மன்னவ! விதிவசம் தலைவிதி தெய்வம் என்று கையாலாகாதவர்களே கூறுவர். தான் நினைத்தவாறும் கூறியவாறும் முடிக்க வல்லவனே ஆண்மையுள்ளவன்" எனச் சந்திரகுப்தன் "ஐயா! கற்றறிவார் கண்டதடக்கம்; நீங்கள் தற்புகழ்ச்சியே செய்துகொள்ளுகிறீர்கள். ஆத்மஸ்துதிசெய்வது ஆன்றோர்க்கழகன்று. நீர் செய்த காரியம் ஒன்றாவது சரியாயில்லை. எல்லோரும் நமது கக்ஷியைவிட்டு உம்மாலேயே பகைவரிடம் போய்ச்

சேர்ந்தனர் ; இராஜ்ய காரியங்களை நடத்துவதற்கு உமக்குத் திறமையில்லை ; மூக்கைப் பிடித்துக்கொண்டு முப்பது நாழிகை உட்கார்ந்திருக்கத்தான் உமக்குத் தெரியும் ; வாயால் திறமையாகப் பேசுவீர்! ராக்ஷஸன்மட்டும் இங்கே யிருந்தால் இந்த உற்சவம் இப்படியா இருக்கும்?'' என்றான். அதைக் கேட்ட சாணக்யன் கோபித்து "அரசே! இனிப் பதிலுக்குப் பதில் சொல்ல வேண்டாம்; என்னைக்காட்டிலும் ராக்ஷஸனிடம் தங்களுக்கு மதிப்பிருந்தால், அவனையே மந்திரியாக வைத்துக் கொள்ளும்!'' என்று கூறித் தன் ஆயுதத்தைக் கீழே எறிந்துவிட்டுத் தன் வீட்டுக்குச் சென்றான். சந்திரகுப்தனும் சேவகர்களிடம் "இனிச் சந்திரகுப்த மகாராஜா மந்திரி சாணக்யனுடைய உதவி யின்றித் தானாகவே நேரில் இராஜ்ய காரியங்களைக் கவனித்து வருவார்" என்று நகரெங்கும் பறை சாற்றுமாறு கட்டளையிட்டு அந்தப்புரத்திற்குச்சென்றான். ராக்ஷஸன் இவ்விஷயத்தைக் கரபகன் என்ற தூதன் மூலமாக அறிந்து மகிழ்ந்திருந்தான்.

---

## பதினோராவது அத்தியாயம்

---

### ஸித்தார்த்தகனின் சேஷ்டை.

இது நிற்க, ஒருசமயம் மலயகேது பாகுராயணனைப் பார்த்து, "நண்ப! துஷ்ட மந்திரிகளால் சூழப்பட்ட சந்திரகுப்தனிடம் வெறுப்புற்று இங்கே வந்தவர்களான பத்ரபடன் முதலியோர், நமக்கு முக்கிய மந்திரியான ராக்ஷஸனை விட்டு, நமது சேனாபதியான சிகரகனை முன்னிட்டுக்கொண்டு, நம்மிடம் வந்த காரணம் யாதென்று எனக்கு விளங்கவில்லையே." என்று கேட்டான். அதற்குப் பாகுராயணன் "குமாரா!

ராக்ஷஸனுக்குச் சாணக்யனிடம் த்வேஷமே யொழியச் சந்திரகுப்தனிடம் த்வேஷமில்லை; ஒரு சமயம் சந்திரகுப்தன் கர்வமுள்ள சாணக்யனைத் தள்ளி விட்டால், பிறகு ராக்ஷஸன் நந்தகுலத்திற் பிறந்தவ னென்ற பக்தியினால் சந்திரகுப்தனோடு சமாதானஞ் செய்து கொள்வான்; அப்பொழுது நீங்கள் அவர்களிடம் நம்பிக்கை வைக்க மாட்டீர்கள்; இதுவே அவர்களுடைய கருத்து" என்று தெரிவித்தான். அதைக் கேட்ட மலயகேது அவன் கூறியதே உண்மை யென்று நம்பினான். பின்பு "சந்திரகுப்தன் ராக்ஷஸனுடைய ஒற்றர்களால் போதிக்கப்பட்டுச் சாணக்யனைத் துரத்திவிட்டான்" என்ற செய்தியும் மலயகேதுவுக்கு எட்டிற்று. இதனால் மலயகேதுவின் மனதில் ராக்ஷஸனைப் பற்றிக் கெட்ட அபிப்பிராயம் வேரூன்றியது.

ஒருநாள் ராக்ஷஸன் தலைவலியால் வருந்திக் கொண்டிருந்தான். மலயகேது அவனைப் பார்ப்பதற்காகப் பாகுராயணனோடு புறப்பட்டு, அவனுடைய மாளிகைக்குச் சென்றான். அப்பொழுது ஒரு தூதன் குஸுமபுரத்தில் சந்திரகுப்தன் சாணக்யனைத் தள்ளிவிட்டானென்றும் ராக்ஷஸனைக் கொண்டாடினானென்றும் சொல்லிக் கொண்டிருந்தான். இதைக் கேட்ட மலயகேது ராக்ஷஸனிடம் அதிகச் சந்தேகங் கொண்டான். பேச்சு ஓய்ந்ததும் மலயகேது உள்ளே சென்று, ராக்ஷஸனைப் பார்த்துவிட்டு, மனதில் வெறுப்புடன் அரண்மனைக்குச் சென்றான். அப்பொழுது மலயகேது பாகுராயணனைப் பார்த்து, "நண்பா! இனி இங்கே நீ ஒரு சுங்கச்சாவடி ஏற்பாடு செய்து, இங்கேயிருந்து வெளியே போகிறவனும் வருகிறவனும் அவ்விடம் மூட்டைகளைக் காண்பித்து, சீட்டுப் பெற்றுப் போகவேண்டும் என்று ஏற்பாடு செய்" என்றான்.

அதுகேட்ட பாகுராயணனும் அப்படியே ஏற்பாடு செய்து, அந்தச் சாவடியில் தானே சீட்டுக் கொடுப்பதற்கு உட்கார்ந்திருந்தான்.

ஒருநாள் ஜீவஸித்தி யென்ற சந்நியாசி, பாகுராயணனிருக்கும் சாவடிக்கு வந்து, வெளியூருக்குப் போகச் சீட்டுக் கொடுக்குமாறு கேட்டான். அதுகேட்ட பாகுராயணன் "ஐயா! இவ்வளவு சீக்கிரத்தில் நீர் சிநேகிதரான ராக்ஷஸனை விட்டு வெளியே போகக் காரணம் யாது?" என்று கேட்க, அவன், "ஐயா! ராக்ஷஸன் சகவாசம் பொல்லாது; முன்பு அவன் விஷகன்னிகையைப் படைத்துக் கொடுக்கச் சொல்லிப் பர்வதேசுவரனைக் கொன்றான்; இன்னும் என்ன செய்யச் சொல்லுவானோ? இங்கே இருக்கக் கூடாது" என்றான். உடனே பாகுராயணன் அவனுக்குச் சீட்டுக் கொடுத்து, மலயகேதுவுக்கும் இவ்விஷயத்தைத் தெரிவித்துச் செல்லுமாறு கூறியனுப்பினான். ஜீவஸித்தியும் அங்கே வந்திருந்த மலயகேதுவிடம் இவ்விஷயத்தைத் தெரிவித்துச் செல்லவே, அவன் "ராக்ஷஸனே பர்வதேசுவரனைக் கொன்றான்" என்று நிச்சயித்து, அவனைக் கொல்வதற்குத் தீர்மானித்தான். அப்பொழுது பாகுராயணன் "ராக்ஷஸனை உயிருடன் பிடித்துக் கொடுக்கவேண்டும்" என்று சாணக்யன் கூறியிருப்பதை நினைத்துக்கொண்டு, மலயகேதுவைப் பார்த்து, "அரசே! ராக்ஷஸன் முன்பு ஸர்வார்த்தஸித்தி உயிரோடிருந்ததால், அவனை நந்த ராஜ்யத்தில் ஸ்தாபிக்க விரும்பிச் சந்திரகுப்தனைப்போல் பாதி ராஜ்யத்திற்குப் பங்காளியான பர்வதேசுவரனைக் கொன்றான். இப்பொழுது ஸர்வார்த்தஸித்தி இறந்து விட்டதால், முன்போல் எண்ணுவதற்கு இடமில்லை. நந்த ராஜ்யத்தைப் பிடிக்கிறவரையில் ராக்ஷஸனை அநுஸரித்திருப்போம். பின்பு அவ

னுக்குத் தக்க தண்டனை விதிக்கலாம்'' என்று கூறினான். அதைக்கேட்ட மலையகேதுவும் சரியென்று அங்கீகரித்தான்.

அப்பொழுது திவ்யசக்ஷுஸ் என்ற சேவகன் சீட்டுப் பெறுமல் கடிதமும் பெட்டியும் எடுத்துக்கொண்டு வெளியே போகும் ஸித்தார்த்தகனைக் கண்டு பிடித்து, சபையில் அழைத்துக்கொண்டுவந்து விட்டான். உடனே பாகுராயணன் அவனைப் பார்த்து "அடே நீ யார்? ஏன் சீட்டுக்கூட வாங்காமல் வெளியே போகிறாய்?" என்று கேட்க, அவன் "ஐயா! நான் ராக்ஷஸனுடைய சேவகன். அவர் வெகு அவசரமாகக் குஸுமபுரத்திற்குப் போய்வருமாறு கடிதம் கொடுத்தார். அதற்காக நான் போனேன். அவசர காரியமானதால் சீட்டு வாங்க முடியவில்லை'' என்றான். அதைக்கேட்ட பாகுராயணன் "அடே! அரசன் கட்டளையையும் மீறிச் செல்லும்படி உனக்கு ஏற்பட்ட காரியம் என்ன?'' என்று அதட்டி ஸித்தார்த்தகன் கையிலிருந்த கடிதத்தைப்பிடுங்கி, முத்திரையை முறித்து விடாமல் அதைப் பிரித்துப் பின்வருமாறு படித்தான். அதில், "க்ஷேமம். எங்கேயோ இருந்துகொண்டு யாரோ ஒருவர் எவருக்கோ தெரிவிப்பதாவது:—

ஸத்ய ஸந்தராகிய தாங்கள் எமது பகைவரை விலக்கி விட்டமையால் ஸத்தியத்தைக் காப்பாற்றி விட்டீர்கள். இப்பொழுது நமதுநண்பர்களிடம் ஒப்பந்தம் பேசியபடி, பொருள்களைக் கொடுத்துப் பிரீதியை உண்டாக்க வேண்டும். இவ்வைவரும் தாங்கள் அண்டியிருக்கும் இடத்தை நாசம் பண்ணுவதால் நமக்கு உதவி செய்வதாக வாக்களித்திருக்கிறார்கள். அதற்குப் பிரதி பிரயோஜனமாக இந்த நண்பர்களில் சிலர்பகைவரின் பொக்கிஷத்தையும் யானைகளையும் இச்சிக்கிறார்கள். மற்றுஞ் சிலர், ராஜ்யத்தை விரும்புகின்றனர். தாங்கள் அனுப்பிய நகை

கள் மூன்றையும் பெற்றுக்கொண்டேன். கடிதத்தின் சந்தேக நிவிர்த்திக்காக நானும் தங்களுக்கு ஏற்ற நகையொன்றை அனுப்பியிருக்கிறேன். மெய்ந் நண்பனான ஸித்தார்த்தகனிடம் பாக்கி விஷயத்தைக் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டுகிறேன்'' என்று எழுதியிருந்தது.

பின்பு பாகுராயணன் ஸித்தார்த்தகனைப் பார்த்து "அடே! சேவகா! நீ இக்கடிதத்தை யாருக்காகக் கொண்டு போகிறாய்? வாய்ச் செய்தியை யாரிடம் தெரிவிக்கவேண்டும்? உண்மையைச் சொல்'' என்று கேட்க, அவன் "நான் யாதும் அறியேன்'' என்றான். உடனே சேவகர்கள் "உண்மையைச் சொல்'' என்று அவனை நையப் புடைத்தனர். அப்பொழுது அவன் கையிலிருந்து ராக்ஷஸன் முத்திரையினால் அடையாளமிடப்பட்ட பெட்டியொன்று கீழே விழுந்தது. பின்பு மலயகேது "சந்தேக நிவிர்த்தியின் பொருட்டு அனுப்பியநகை இப்பெட்டியில் இருக்கும்'' என்று நினைத்து, அப்பெட்டியை உடைத்துப் பார்க்கவே, அதில் தன் கழுத்திலிருந்து ராக்ஷஸனுக்குக் கொடுத்தனுப்பிய முத்தாரத்தைக் கண்டான். உடனே அவன் இக்கடிதம் சந்திரகுப்தனுக்கு ராக்ஷஸன் அனுப்பியதேயாகும்'' என்று தீர்மானித்து, மீண்டும் ஸித்தார்த்தகனைப் பார்த்து "அடே! ராக்ஷஸன் உன்னிடம் கூறிய சமாசாரத்தைச் சொல். இன்றேல், உன் முதுகை உரித்துவிடுவேன்'' என்று அதட்டிக்கேட்டான். உடனே அவன் மலயகேதுவின் பாதங்களில் வீழ்ந்து நமஸ்கரித்து "ஐயா! என்னைக் காத்தருளவேண்டும்'' என்று வேண்டிக் கொண்டான். அதற்கு மலயகேது "அடமுட்டாள்! நீ ஒருவனிடம் கையாளாயிருப்பதால், உன் பேரில் குற்றமில்லை; பயப்படாமல் உண்மையைச் சொல்!'' என்றான். அதைக்கேட்ட ஸித்தார்த்தகன்

"அரசே! அமாத்ய ராக்ஷஸர் இக்கடிதத்தையும் பெட்டியையும், சந்திரகுப்தனிடம் கொடுத்துவருமாறு என்னை அனுப்பினர்; 'குலூத தேசாதிபதி சித்திரவர்மன், மலயதேசத்தரசன் ஸிம்மநாதன், காஷ்மீரதேசராஜன் புஷ்கராக்ஷன், ஸிந்துதேசாதிபன் ஸிந்து சேனன், பாரஸீகதேசாதிபதி மேகாக்ஷன் ஆகிய ஐவரும் எனது நண்பர்களாவர். இவர்களுள் முந்திய மூவரும் மலயகேதுவின்தேசத்தையும், பிந்திய இருவரும் பொக்கிஷத்தையும் யானைப்படையையும் விரும்புகின்றனர். சாணக்யனை விலக்கி எனக்குப் பிரீதியை உண்டாக்கியதுபோல், இவ்வரசர்களுக்கும் முன்பு வாக்களித்திருப்பதை நிறைவேற்றுவீர்களென்று நம்புகிறேன்' என்று வாய்ச் செய்தியைச் சந்திரகுப்தனிடம் சொல்லும்படி ராக்ஷஸர் என்னிடம் சொன்னார்" என்றான்.

இதைக் கேட்டதும் மலயகேது திடுக்கிட்டுப்போய், ராக்ஷஸனிடம் பக்தியுள்ள சித்திரவர்மன் முதலியோரும் தன்னையே த்வேஷிக்கின்றனர் என்று தீர்மானித்து, ராக்ஷஸனை உடனே அழைத்து வருமாறு சேவகனை அனுப்பினான். அப்பொழுது ராக்ஷஸன் குஸுமபுரத்திற்குப் புறப்படவேண்டிய ஏற்பாடுகளை யெல்லாம் செய்து, சித்திரவர்மன் முதலிய ஐந்து அரசர்களையும் மலயகேதுவைச் சுற்றியிருந்து காக்குமாறு நியமனம் செய்துவிட்டு, மலயகேதுவைப் பார்க்கத் தயாராயிருந்தான். சேவகன் ராக்ஷஸனிடம் வந்து, மலயகேது அழைத்துவரும்படி சொன்னதாகத் தெரிவித்தான். உடனே ராக்ஷஸன் முன்பு மலயகேது தனக்குக் கொடுத்த நகையை ஸித்தார்த்தகனுக்கு வெகுமதியாகக் கொடுத்துவிட்டதால், தான் விசுவாவஸு முதலியோரிடம் இரகஸ்யமாய் விலைக்கு வாங்கிய நகைகளை அணிந்துகொண்டு மலயகேதுவிடம் வந்தான். அவனிடம் ராக்ஷஸன் குஸுமபுரம் போகுமாறு

சேனைகளுக்குத் தான் கட்டளை யிட்டிருப்பதைத் தெரிவித்தான்.

உடனே மலயகேது "என்னைக் கொன்று சந்திரகுப்தனைத் திருப்தி செய்வதில் முயற்சியுள்ளவர்களே என்னைச் சூழ்ந்துகொண் டிருக்கின்றனர். யாவற்றையும் விசாரித்தறிவோம்" என்று நிச்சயித்து ராக்ஷஸனைப் பார்த்து, "ஆர்ய இப்பொழுது குஸுமபுரத்திற்கு எவனேனும் போய்வருகின்றானா?" என்று வினவ, அவன் "அரசே! தற்சமயம் போய்வருவதனால் பயனில்லை; சொற்பநாட்களில் நாமே அங்கே போவோம்" என்று சொன்னான். பின்பு மலயகேது "மந்திரீ, இவ்வாறாயின், தாங்கள், ஸித்தார்த்தகன் கையில் கடிதத்தைக் கொடுத்துக் குஸுமபுரத்திற்கு அனுப்பிய காரணம் யாது?" என்றான். உடனே ராக்ஷஸன் "அடே! ஸித்தார்த்தகா! இஃதென்ன?" என்று கேட்க, அவன் "அடி பொறுக்க மாட்டாமல் இரகஸ்யத்தைச் சொல்லி விட்டேன்; என்ன செய்வேன்?" என்று கூறினான். ராக்ஷஸன் "இரகஸ்ய மென்ன?" என்று மீண்டும் அவனைக் கேட்க, அவன் யாதும் பதிலுரைக்காமல் கீழே தலை குனிந்து நின்றான். உடனே பாகுராயணன் "இவன் எஜமானுக்கு எதிரில் உண்மையைச் சொல்லப் பயப்படுகிறான். அமாத்ய ராக்ஷஸர் இக்கடிதத்தைக் கொடுத்துச் சமாசாரமும் சொல்லிச் சந்திரகுப்தனிடம் அனுப்பினாரென்று ஸித்தார்த்தகன் சற்று முன் கூறினான். இவ்விதம் தாங்கள் செய்யலாமா?" என்று ராக்ஷஸனைக் கேட்டான். அதற்கு ராக்ஷஸன் "முத்திரையும் கடிதமும் கபடமாகவும் ஏற்படுத்தக் கூடும்" என்றான். உடனே மலயகேது "அமாத்யா! இவ்வாறாயின், சந்தேக நிவிர்த்திக்காக இந்நகையை அனுப்பியிருக்கிறீர்களே! அதுவும் கபடமோ?" என்று கேட்க, ராக்ஷஸன் "மன்னவா

நான் இந்நகையைச் சந்திரகுப்தனுக்கு அனுப்பவில்லை; ஆனால், ஒரு சமயம் ஸித்தார்த்தனுக்கு இம்முத்து மாலையை வெகுமதியாகக் கொடுத்தேன்" என்று பதிற் சொன்னான்.

அப்பொழுது பாகுராயணன் "அமாத்ய! இராஜகுமாரன் தன் சரீரத்திலிருந்து கழற்றிக் கொடுத்த முத்தாரத்தை வேலைக்காரனுக்கு வெகுமதியாகக் கொடுத்தேனென்றால், யாரேனும் நம்புவார்களா?" என்று கூறிவிட்டு, ஸித்தார்த்தகனைப் பார்த்து "அடே! இக்கடிதம் எழுதியது யார்?" என்று கேட்க, அவன் ராக்ஷஸன் முகத்தைப் பார்த்துவிட்டு மௌனமாயிருந்தான். உடனே சேவகர்கள் "உண்மையைச் சொல்" என்று அடிக்கவே, அவன் "இக்கடிதம் சகடதாஸன் எழுதினான்" என்று கூறினான். அதைக்கேட்ட ராக்ஷஸன் "சகடதாஸன் எழுதியதானால், நானே எழுதியதாகும்" என்றான்.

பின்னர் பாகுராயணன் "சகடதாஸன் ராக்ஷஸன் முன்னிலையில் இக் கடிதத்தைத் தான் எழுதியதாக ஒப்புக் கொள்ள மாட்டான்; மேலும் அவனை இவ்விடம் வரவழைத்தால் வேறு விதமாகவும் எழுதிக்காட்டுவான்; ஆதலால், சகடதாஸன் எழுதிய வேறொரு கடிதத்தையும் ராக்ஷஸன் முத்திரையையும் வாங்கி வந்து இக் கடிதத்தையும் முத்திரையையும் ஒத்துப் பார்த்து, உண்மையைத் தெரிந்து கொள்ளலாம்" என்று மலயகேதுவிடம் கூறி, அவ்வாறே கடிதமும் முத்திரையும் வாங்கி வருமாறு ஒரு சேவகனை அனுப்பினான். உடனே சேவகன் சகடதாஸனிடஞ் சென்று "ஐயா! மலயகேது தங்கள் கையால் ஒரு கடிதமெழுதி, அதையும் மோதிரத்தையும் வாங்கி வரச் சொன்னார்" என்று கூறினான். உடனே அவன் ஒரு கடிதமெழுதி, அதையும் முத்திரையையும் கொடுத்தான். சேவகன் அவற்றை வாங்கி வந்து, மலயகேதுவுக்கு எதிரில் வைத்தான்.

ராக்ஷஸனும் இருகடிதங்களையும் முத்திரையையும் ஒத்துப் பார்த்து "சகடதாஸனே பகைவரோடு சேர்ந்து இவ்வாறு சூழ்ச்சிசெய்திருக்கிறான்" என்று தீர்மானித்தான். பிறகு மலயகேது தன் தந்தை அணிந்திருந்த மூன்று நகைகளையும் ராக்ஷஸன் அணிந்து கொண்டிருப்பதைக் கண்டு "சந்திரகுப்தன் அனுப்பியதாகவும் ராக்ஷஸன் பெற்றுக்கொண் டிருப்பதாகவும் இக் கடிதத்தில் கண்டிருப்பவைகள் இந்நகைகளே!" என்று நிச்சயித்து, ராக்ஷஸனைப் பார்த்து, "அமாத்யா! இந்நகைகள் மூன்றும் எவ்வாறு கிடைத்தன?" என்று வினவ, அவன், "அரசே! நான் இவைகளை வியாபாரிகளிடமிருந்து வாங்கினேன்" என்றான். அதற்கு மலயகேது "என் தந்தை அணிந்திருந்த வைகளும், சந்திரகுப்தனை யடைந்தவைகளும், விலை யற்றவைகளுமான இந்நகைகளை வியாபாரிகளிடம் விலை கொடுத்து வாங்கினே னென்றால், நம்புவதெப்படி?" என்று கேட்டான்.

பின்பு ராக்ஷஸன் தனக்குள் "பகைவரின் சூழ்ச்சியானது நன்றாய் அமைந்திருக்கின்றது. 'இக்கடிதம் என்னுடையதன்று' என்று கூறுவது பொருந்தாது. ஏனெனில், இதில் எனது முத்திரையால் அடையாளம் செய்யப்பட் டிருக்கிறது. சகடதாஸன் என்னை ஏமாற்றி விட்டானென்றால், அதை ஒருவரும் நம்பமாட்டார்கள். சந்திரகுப்த சக்ரவர்த்தி நகைகளை விற்றானென்றால், அதைத்தான் யார் நம்புவார்கள்? ஆதலால், இவ்விஷயத்தை ஒப்புக் கொள்வதைத் தவிர, வேறுவிதமாகக் கூறுவது சரியன்று" என்று தீர்மானித்து, "எல்லாம் விதியின் செயல்" என்று கூறிவிட்டு மௌனமாயிருந்தான்.

அப்பால் மலயகேது ராக்ஷஸனை நோக்கி "ஏ அமாத்யா! நீர் முன்பு உம்மிடம் நம்பிக்கை வைத்திருந்த என் தந்தை

யிடம் விஷகன்னிகையை அனுப்பிக் கொன்றுவிட்டு, இப்பொழுது என்னையும் சாணக்யனிட மனுப்பிக்கொல்ல முயற்சி செய்கிறீர் என்பது நிச்சயம்" என்று சொல்ல, ராக்ஷஸன் "அரசே! நான் பர்வதேசுவரனிடம் விஷகன்னிகையை ஏவவில்லை" என்று கூறினன். அதற்கு மலயகேது "ஜீவஸித்திதான் விஷகன்னிகையை அனுப்பினன் என்று சொல்லுமே!" என்றான். ராக்ஷஸன் இதைக் கேட்டதும் "பகைவர் என் மனதையும் வசப்படுத்தி விட்டனர்" என்று தீர்மானித்து வருந்திக்கொண் டிருந்தான்.

பிறகு மலயகேது ராக்ஷஸனைப் பார்த்து "மந்திரீ! நான் உம்மைப்போல் நன்றி மறந்தவனன்று. ஆதலால், நீர் இப்பொழுதே வெளியிற் சென்று என்னைக் கொல்வதற்காக எவ்விதத்திலும் முயற்சி செய்துபாரும். சாணக்யனையும் சந்திரகுப்தனையும் உம்மையும் நான் அழிப்பதற்கு வல்லமையுள்ளவன்" என்று சொல்லிவிட்டு, நிதான புத்தியற்றவனுய்,ராக்ஷஸனுடைய சிநேகத்தினுல் தன்னைக் கொல்வதற்கு முயற்சியுள்ளவர்க ளென்று தான் நினைத்திருக்கும் சித்திரவர்மன், ஸிம்மநாதன் புஷ்கராக்ஷன் சிந்துஷேனன், மேகாக்ஷன் ஆகிய ஐவரையும் தூக்கிலேற்றிவிடுமாறு சேவகர்களுக்குக் கட்டளை யிட்டான். உடனே, அரசனுணைப்படி கொலையாளிகள் அவ்வரசர்களைக் கழுவிலேற்றிக் கொன்றனர்.

பின்பு ராக்ஷஸன் ஒருவனுகவே வெளிக் கிளம்பியவனுய், "அந்தோ! இப்பொழுது நான் கானகஞ் சென்று தவஞ்செய்யலாமா? துவேஷமுள்ள மனம் தவத்தினுல் சாந்தி யடையாதே! அல்லது எனது தலைவர்களைத் தொடர்ந்து செல்வதற்காக இறக்கலாமா? இது வீரமையுள்ள புருஷர்களால் செய்யத் தக்கதன்று; பெண்களுக்கன்றோ இவ்வழி ஏற்றதாகும்? பகைவர்

நடுவே நுழைந்து கத்தியால் வெட்டித் தள்ளிப் போர் புரிய லாமா ? இதுவும் சரியன்று ; நமக்காக உயிரைவிடத் தயா ராய் இருக்கும் நண்பனை சந்தனதாஸனை எவ்விதத்திலும் விடுவிப்பதே முக்கியமானது. அவன் செய்த நன்றியை மறப் பது நன்றல்ல.

"எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

என்று பெரியோர் கூறியிருக்கின்றனர்.

நன்றி மறந்தவர்க்கு நற்கதியேது ?"

என்று தீர்மானித்து, நன்றியுணர்வை முன்னிட்டு மாறுவேஷம் பூண்டு, குஸுமபுரத்திற்கு வெளியிலிருக்கும் ஒரு பாழுந் தோட்டத்திற்கு வந்து சேர்ந்தான்.

அப்பொழுது ராக்ஷஸன் தனக்குள் "அந்தோ! மலயகேது வின் முட்டாள்தனத்தைப்பற்றி என்ன சொல்வேன் ? எஜமா னர்கள் இறந்த பின்பும், அவர்களைத் திருப்தி செய்விப்பதற்காக நான் உழைத்து வருவதை நேரிற்கண்டிருந்தும், அவர்களுக்குச் சத்துருவான சந்திரகுப்தனோடு எப்படிச் சேருவான் என்ற யோசனை இல்லாமற் போய்விட்டதே அவனுக்கு? அவன் பேரில் குற்றங்கூறுவதில் பயனென்ன? தெய்வத்தின் சகாயம் இல்லாம லிருக்கையில் யாரைக் கோபித்துத்தான் பயனென்ன? முற்கா லத்தில் பலசிற்றரசர்கள் சூழ வேந்தன்போல் வெளிக்கிளம்பிய நானே, இப்பொழுது களவு செய்துவிட்டுப் பயந்து ஒருவர் கண்ணிலும் படாமல் ஓட முயற்சிக்கும் கள்ளனைப்போல், இந் தப்பாழுந் தோட்டத்தில் நுழைந்திருக்கிறேன். அந்தோ ! இந்த நந்தவனத்தின் கதியும் இப்படியாய் விட்டதே ! இதில் கட்டி யிருந்த மண்டபங்கள் எல்லாம் இடிந்துவிட்டன. தடாகங்க ளெல்லாம் வறண்டு கிடக்கின்றன. மரங்கள் கனியற்று மல

டாய் நிற்கின்றன; ஜனங்கள் நடமாட்டமில்லாததால் வழி யெல்லாம் புல்முளைத்து மூடிப்போயிருக்கிறது. இங்கேயிருந்த சந்தன மரங்களை யெல்லாம் கருக்குள்ள கோடாரிகளால் கண்டங் கண்டமாய் வெட்டி யெறிந்திருக்கிறார்கள்; வெட்டப்பட்ட குற்றிகளில் பாம்புகள் தோலுரித்துப்போட்டிருக்கின்றன. அடியில் மீன்கொத்தி முதலிய பறவைகள் கூடுகட்டிக்கொண்டு சத்தமிடுகின்றன. நந்தர்களுடைய நாசத்தால் எனக்குக் கஷ்டமேற்பட்டது போல, இந்தத் தோட்டத்திற்கும் துன்பமுண்டாய் விட்டதே!'' என்று யோசித்துக் கொண்டிருந்தான். அப்பொழுது மலயகேதுவின் சேனைத்தலைவர்களா யிருந்த பாகுராயணன் முதலியோர், மலயகேதுவைச் சூழ்ந்து காத்து நின்ற சித்திரவர்மன் முதலியோர் கொல்லப்பட்டு விட்டதை யறிந்து, 'இதுதான் சமயம்'' என்று நினைத்து, மலயகேதுவைச் சிறைப் பிடித்துப் பறை முழக்கத்துடன் குஸுமபுரத்திற்கு அழைத்து வந்தார்கள்.

---

## பன்னிரண்டாவது அத்தியாயம்

---

### அமாத்ய ராக்ஷஸன் அமைச்சனா யமர்தல்.

இஃதிவ்வாறாக, ராக்ஷஸன் நின்றுகொண்டிருந்த அப்பாழுந் தோட்டத்தில், சாணக்யனால் ஏவப்பட்ட பசுலோமன் என்ற தூதன், ஒரு மரக்கிளையில் மணிக்கயிற்றை வீசிச் சுருக்கிட்டு, அதன் நுனியைக் கழுத்தில் மாட்டிக்கொண்டு, உயிரை விட முயற்சிப்பவன் போல் அபிநயித்தான். இதைக் கண்டு ராக்ஷஸன் அங்கே ஓடிவந்து, அவனைப் பார்த்து "ஏனப்பா, பிராணனை விடப்போகிறாய்?" என்று கேட்டான்.

அதற்கு அவன் காலதாமதத்தைப் பொருதவன் போல் அபி நயித்துவிட்டு, "ஐயா! இந்நகரில் சந்தனதாஸன் என்றொரு பெரியவியாபாரி இருக்கின்றான். அவன் அமாத்ய ராக்ஷஸனுக்கு முக்கிய நண்பனவன். அவனுக்கு விஷ்ணுதாஸன் என்று ஒரு சிநேகித னிருக்கிறான். அவன் எனக்கு முக்கிய மித்திரன். அவன் இப்பொழுது அக்னிப் பிரவேசம் செய்வதற்காக இந்நக ரிலிருந்து வெளியே கிளம்பிப்போய்விட்டான். ஆதலால், நண் பனைப் பிரிந்திருப்பதினும் இறப்பது நன்றென்று தீர்மானித்து நான் உயிரைவிடப் போகிறேன்" என்றான்.

பிறகு ராக்ஷஸன் அவனைப் பார்த்து "அப்பா! உனது நண்பன் விஷ்ணுதாஸன் இறப்பதற்குக் காரணம் யாது?" என்று கேட்க, அவன் "விஷ்ணுதாஸன் தன் தோழனான சந்த னதாஸன் காராகிருகத்தி லிருப்பதைப் பொறுமல் சந்திரகுப்த னிடஞ் சென்று, 'அரசே! என் பொருள் முழுவதையும் பெற் றுக்கொண்டு சந்தனதாஸனை விடுவிக்க வேண்டும்" என்று வேண்டிக் கொண்டான். அதற்குச் சந்திரகுப்தன் "ஐயா! நாம் பொருளை உத்தேசித்து அவனைச் சிறைச்சாலையில் வைக்கவில்லை" என்று சொல்லிவிட்டு, அருகே நின்ற காவ லாட்களைப் பார்த்து, "சேவகர்களே! சந்தனதாஸன் ராக்ஷஸனுடைய மனைவி மக்களை நம்மிடம் ஒப்புவிக்காவிடில், அவனைக் கொலை செய்து விடுங்கள்!" என்று கட்டளையிட் டான். அப்பொழுதும் சந்தனதாஸன் ராக்ஷஸனிடங் கொண்ட அன்பினால் ராக்ஷஸன் மனைவி மக்களைக் காட்டிக் கொடுக்கவில்லை. உடனே அரசனுடைய ஏவலாட்கள் அவ னைக் கொலைக் களத்திற்கு அழைத்துச் சென்றனர். ஆதலால் மெய்ந் நண்பன் இறப்பதற்கு முன்னமேயே தான் இறக்க வேண்டுமென்று தீர்மானித்து, என் தோழன் விஷ்ணுதாஸன் இந் நகரிலிருந்து வெளியே சென்றான்" என்று கூறினான்.

இதைக்கேட்ட ராக்ஷஸன், அவனைப் பார்த்து "அன்ப! நீ பயப்படவேண்டாம். நீ போய் விஷ்ணுதாஸனை அக்னிப் பிரவேசஞ் செய்யாமல் தடுத்துவிடு. நானும் சந்தனதாஸனை மரணபயத்திலிருந்து விடுவிக்கிறேன்" என்று சொன்னான். அதற்கு அப்புருஷன் "ஐயா! தாங்கள் யார்?" என்று கேட்க, ராக்ஷஸன் தன் பெயரைத் தெரிவித்தான். உடனே அப்புருஷன் ராக்ஷஸனைப் பார்த்து "ஐயா! முன்பு சந்திரகுப்தனுடைய கட்டளையினால் சகடதாஸனைக் கொலைக் களத்திற்குக் கொண்டு போனபோது, யாரோ ஒருவன் கொலையாளிகளை ஏமாற்றிவிட்டு, அவனை விடுவித்து, வேறு தேசத்திற்கு அழைத்துச் சென்று விட்டான். பிறகு சந்திரகுப்தன் தன் கட்டளை நிறைவேற்றப்படாமற் போனதால் கோபங்கொண்டு, கொலையாளிகளைச் சகடதாஸன் ஏறவேண்டிய கழுவிலேற்றிக் கொல்லும்படி செய்தான். அது முதல் கொலையாளிகள் யாவரும் ஜாக்ரதையாகத் தங்கள் காரியத்தைச் செய்து வருகின்றனர். ஆதலால், தாங்கள் சீக்கிரம் கொலைக் களத்திற்குப் போகவேண்டும். தாமதித்தால் காரியம் பயன்படாது" என்று கூறினான்.

இவ்வாறு கூறியதைக் கேட்ட ராக்ஷஸன், சாணக்யனுடைய புத்திவல்லமையை நினைத்து வியப்புற்றவனாய், "இப்பொழுது நான் போர்புரிவது தகுதியன்று. ஏனெனில், நான் அங்கே போவதற்கு முன்னமேயே கொலையாளிகள் சந்தனதாஸனைக் கொன்றுவிட்டால், என் முயற்சி வீணாகுமன்றோ? எனது நீதியானது காலாந்தரத்தில் பயனையளிக்கும். ஆயினும், நண்பனை விடுவிப்பதில் அதனாற் பயனில்லை. எனக்காக எனது நண்பன் பேராபத்தை அடைந்திருக்கையில், நான் உதாஸீனமாயிருப்பது தகுதியன்று. ஆதலால் இவ்விஷயத்தில் என் உயிரை விலையாகக் கொடுத்தேனும் சந்தனதாஸனை

விடுவிக்கவேண்டும்'' என்று நிச்சயித்து, சாணக்யனால் ஏவப்பட்ட ஸித்தார்த்தகன் ஸமித்தார்த்தகன் என்ற இருவரும் சண்டாள வேஷம்பூண்டு, சந்தனதாஸனை அழைத்துச் சென்ற கொலைக்களத்திற்குப் போய்ச் சேர்ந்தான். அவ்விடம் ராக்ஷஸன், புலம்பிக்கொண்டிருக்கும் தன் மனைவிமக்களுக்குச் சமாதானஞ் சொல்லிக் கொண்டிருப்பவனும், கொலையாளிகளால் அதட்டப்படுகின்றவனும், நண்பனுக்காகத் திருணத்தைப் போல் உயிரை அற்பமாயெண்ணிவிடப் போகின்றவனு மான சந்தனதாஸனைக் கண்டு, கட்டியணைத்துக் கண்ணீருகுத்தான். பிறகு ராக்ஷஸன் கொலையாளிகளைப்பார்த்து ''ஏ சேவகர்களே! நீங்கள் சந்தனதாஸனைக் கொல்லவேண்டாம். முன்பு சத்துருவின் குலத்தைப்போல், நந்தகுலம் நாசமடைந்ததைப் பார்த்துக் கொண்டிருந்தவனும், நண்பர்களுக்கு ஆபத்து வந்த காலத்திலும் உற்சவகாலத்திற்போல ஸ்வஸ்தனாயிருந்தவனும், பகைவரால் அவமானஞ் செய்யப்பட்டும் உயிரை விடாமல் வைத்துக்கொண் டிருப்பவனுமான என்னைக் கொல்வதற்காக, என் கழுத்தில் கள்ளிப் பூமாலையைப் போடுங்கள்! அம்மாலை எமலோகத்திற்குப்போக வழியாயிருக்கின்றதன்றோ?'' என்று சொன்னான். இதைக்கேட்ட சந்தனதாஸன் கண்ணீர் பெருக, ராக்ஷஸனைப் பார்த்து, ''அமாத்ய! நீர் ஏன் என் முயற்சியைக் கெடுக்கிறீர்?'' என்று சொல்ல, ராக்ஷஸன் ''நண்ப! இது உமது நல்லொழுக்கத்திற்கு இணையாகாது'' என்றான்.

பின்பு ராக்ஷஸன் சந்தனதாஸனைப் பலவாறு சமாதானஞ் செய்துவிட்டு, இவ்விஷயத்தைச் சாணக்யனிடம் போய்த் தெரிவிக்குமாறு சண்டாளர்களுக்குச் சொன்னான். அவர்களும் அதற்கு இசைந்தனர். பின்பு அவர்களுள் ஒருவன்

சந்தனதாஸனையும் அவன் மனைவி மக்களையும் அழைத்துக் கொண்டு, சுடலையிலுள்ள ஒரு மரத்தடியில் உட்கார்ந்தான். மற்றொரு கொலையாளி, ராக்ஷஸனை அழைத்துக் கொண்டு, சாணக்யன் வீட்டுக்குச் சென்று, வாயிற் காவலன் மூலமாய் "ராக்ஷஸர் வந்திருக்கின்றார்" என்று சாணக்யனிடம் தெரிவித்தான்.

இதைக்கேட்ட சாணக்யன் ஆச்சரியமுற்று, ஆனந்த பரவசனாகி, உள்ளேயிருந்து விரைவாய் எழுந்து, "கொழுந்து விட்டெரியும் நெருப்பை முன்றானையில் முடிந்தவன் யார்? இடைவிடாது வீசிக்கொண்டிருக்கும் காற்றைக் கயிற்றால் கட்டியவன் எவன்? பல கிராமங்களைச் சுடுகாடாக்கிய சிங்கத்தைப் பிடித்துக் கூட்டில் அடைத்தவன் யாவன்? முதலை, திமிங்கிலம் முதலியன சஞ்சரிக்கும் சமுத்திரத்தைக் கையால் நீந்திக் கரைகண்டவன் எவன்?" என்று சொல்லிக்கொண்டே ராக்ஷஸனிடம் வந்தான். ராக்ஷஸன் சாணக்யனைப் பார்த்து, "இந்த சாணக்யன் மகாத்மாவென்பதில் ஐயமில்லை. சமுத்திரம் இரத்தினங்களுக்கு இருப்பிடமாயிருப்பது போல, சாணக்யன் சகல சாஸ்திரங்களுக்கும் உற்பத்தி ஸ்தானமாயிருக்கின்றான். பொறாமையினாலன்றோ நாம் இவனுடைய குணங்களைக் கண்டு மகிழ முடியாமல் போயிற்று?" என்று மனத்துள் நினைத்தான். பின்பு சாணக்யன் ராக்ஷஸனுக்குத் தக்க மரியாதை செய்து அவனை நமஸ்கரித்தான். அப்பொழுது ராக்ஷஸன் "ஐயா! சண்டாள ஸ்பரிசத்தினால் தூஷிக்கப்பட்ட சந்தனதாஸனை விடுவிடுக்க வேண்டும்" என்று சொன்னான்.

சாணக்யன் இதைக் கேட்டதும் தான் செய்த ஏற்பாடு முழுவதையும் சொல்ல விரும்பியவனாய் ராக்ஷஸனைப் பார்த்து,

“ஹே! அமாத்ய ராக்ஷஸரே! இக்கொலைபாளிகள் சண்டாளர்களன்று; ஒருவன் ஸித்தார்த்தகன்; மற்றொருவன் ராஜகிருஹ சேவகனான ஸமித்தார்த்தகன். சகடதாஸன் யாதொன்றையும் அறியான். நானே அக்கடிதத்தைக் கபடமாக எழுதி வாங்கினேன். பத்ரபடன் முதலியோரும் ஜீவஸித்தியும் எங்களைச் சேர்ந்தவர்களே. சந்திரகுப்தன் உமது சேர்க்கையை விரும்பியே இவ்வாறு செய்தான். ஆதலால், அவன் இப்பொழுது உம்மைப் பார்க்க விரும்புகின்றான்” என்றான். ராக்ஷஸன் இதைக் கேட்டதும் சகடதாஸனிடம் சந்தேக மற்றவனாய், சந்திரகுப்தனைப் பார்ப்பதற்குச் சம்மத மற்றவனாயினும், நிர்ப்பந்தத்தினால் அதற்கு இசைந்தான். பிறகு மகிழ்ச்சியடைந்த சந்திரகுப்தனும் சாணக்யனுடைய நீதியின் வல்லமையைக்கண்டு ஆச்சரிய மடைந்தவனாய்ப் பரிவாரங்களுடன் வந்து சாணக்யனை நமஸ்கரித்தான்.

அப்பால் சாணக்யன், சந்திரகுப்தனைப்பார்த்து, “அரசே! இந்த அமாத்ய ராக்ஷஸர் உன் தந்தைக்கே மந்திரியாயிருந்தவர். ஆதலின், அவருக்கு நமஸ்காரம் செய்!” என்று சொல்லவே, சந்திரகுப்தன் ராக்ஷஸனை நமஸ்கரித்தான். அதற்குராக்ஷஸன் “அரசே! வெற்றியோடு விளங்கக்கடவீர்!” என்றுஆசீர்வதித்துவிட்டு, தனக்குள் “நற்குணமுள்ள அரசனையடைந்து உபதேசிப்பவனுக்குச் சாமர்த்தியமில்லாவிடினும் புகழ் உண்டாவது நிச்சயம். மந்திரியானவன் நீதியில் மகா நிபுணனு யிருந்தாலும், தகுதியற்ற தோன்றலை யடைவதால், ஆற்றங்கரை யோரத்திலுள்ள மரத்தைப்போல் துன்பத்தை அடைகின்றான்” என்று சிந்தித்தான். அப்பொழுது சாணக்யன் ராக்ஷஸனைப் பார்த்து “மந்திரீ! சந்தனதாஸனை விடுவிக்கவேண்டுமோ?” என்று கேட்க, அவன் “ஸ்வாமீ! சந்தேக

மில்லாமல் அவனை விடுவிக்க வேண்டும்; அதற்காகவே நான் இவ்விடம் வந்தேன்" என்றான்.

இதைக்கேட்ட சாணக்யன் ராக்ஷஸனைப் பார்த்து, "அமாத்ய சிரேஷ்டா! சந்தனதாஸன் பிழைத்திருக்க விரும்பினால், நீர் மந்திரிக்குரிய ஆயுதத்தைக் கிரகித்துக் கொள்ள வேண்டும்; இன்றேல், சந்தனதாஸனைத் தூக்கிலிடுவோம்" என்று சொன்னான். இதைக்கேட்ட ராக்ஷஸன் 'அந்தோ! நாம் ஒன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைக்கும்' என்ற பழமொழி, என் விஷயத்தில் உண்மையாயிற்று; நந்தர்களிடம் நான் வைத்திருந்த பிரீதிக்கு மாறாக இப்பொழுது நடக்கவேண்டியதா யிருக்கிறது; என்னைக் கொண்டு வருவதற்காகவே சந்தனதாஸனை இதுவரையில் கொல்லாமல் வைத்திருக்கின்றான்; என் மனைவி மக்களைக் காப்பதற்காகவே சந்தனதாஸன் மரண தண்டனையைப் பெற்றான்; ஆதலின், நான் மந்திரி வேலையை ஏற்றுக்கொண்டாவது சந்தனதாஸனை விடுவிக்க வேண்டும்; இன்றேல், எல்லோரும் என்னை நிந்திப்பார்கள்" என்று தீர்மானித்து, மந்திரி வேலையை யேற்றுக்கொண்டு, அதற்குரிய ஆயுதத்தையும் கிரகித்தான். தனது சபதத்தை நிறைவேற்றிய சாணக்யனும் சந்தோஷமடைந்தான். சந்திரகுப்தனும் தன்னைக் கிருதார்த்தனாக எண்ணினான்.

இதற்கிடையில் ஒரு மனிதன் ஓடிவந்து "தலைவ! பத்ரபடன் முதலியோர் மலயகேதுவைச் சிறைப்பிடித்துக்கொண்டு வந்து வாயிலில் நிறுத்தியிருக்கின்றனர்" என்று சாணக்யனிடம் தெரிவித்தான். அதற்குச் சாணக்யன் "நான் இப்பொழுது மந்திரியாயில்லை; அமாத்ய ராக்ஷஸரே மந்திரியாயிருப்பதால், அவரிடம் தெரிவி!" என்று சொன்னான். அவ்வாறே அவனும் தெரிவிக்கவே, ராக்ஷஸன் சந்திரகுப்தனைப் பார்த்து,! "மன்னவா, நான் சிலகாலம் மலயகேதுவின் அரண்மனையில் வசித்தேன்; ஆதலால், எனக்காக மலயகேதுவை விடுவிக்கவேண்டும்" என்று தெரிவித்தான். உடனே சாணக்யன் முகத்தை நப் பார்த்தான் சந்திரகுப்தன். சாணக்யன் ராக்ஷஸனை மகிழ்விப்பதற்காக அப்புருஷனைப் பார்த்து "அமாத்ய

ராக்ஷஸரால் விஞ்ஞாபிக்கப்பட்ட அரசன் மலயகேதுவுக்கு மீண்டும் அவனது ராஜ்யத்தை அளிக்கின்றார்; ஆதலால் மலயகேது தன் தேசத்திற்குப் போகட்டும்; பத்ரபடன் முதலியோரும் மலயகேதுவோடு சென்று, அவனை ராஜ்யத்தில் ஸ்தாபித்துவிட்டுத் திரும்பி வரட்டும்; 'சந்தனதாஸனைச் சிறையிலிருந்து விடுவித்து, நமது தேசத்திற்குள் பெருத்த வியாபாரியாகச் செய்யவேண்டும்' என்று ராக்ஷஸனிடம் பிரியமுள்ள சந்திரகுப்த சக்ரவர்த்தி கட்டளை யிட்டிருப்பதாக விஜய துர்க்கபாலன் என்ற சேனாபதியரிடம் தெரிவி! யானை குதிரைகள் நீங்கலாக மற்றவர்களின் கட்டை அவிழ்த்து விடுங்கள்! பிரதிஞ்ஞையை நிறைவேற்றிய நான், இப்பொழுது சிகையைக் கட்டப் போகிறேன்" என்றுகூறிவிட்டு, முன்பு அக்ரபோஜனம் தடுக்கப்பட்டதினத்தில் அவிழ்த்துவிட்ட தன் சிகையை முடிந்து கொண்டான்.

பின்பு பத்ரபடன் முதலியோர், மலயகேதுவோடு யவன தேசஞ் சென்று அவனை ராஜ்யத்தில் ஸ்தாபித்து விட்டுத் திரும்பி வந்தனர். சந்தன தாஸனும் நகரத்தில் பெரிய வியாபாரியாகச் செய்யப்பட்டான். சாணக்யனும் முன்பு தனக்கு உபகாரஞ் செய்தவர்களுக் கெல்லாம் தக்கபடி மரியாதை செய்துவிட்டுத் தவஞ்செய்வதற்காகக் கானகத்திற்குச் சென்றான். ராக்ஷஸனும்மீண்டும் தனது மனைவி மக்களுடன்சேர்ந்து மந்திரி வேலையைப் பார்த்துக் கொண்டும், அரசனுக்கு மேன்மேலும் க்ஷேமத்தைத் தேடிக் கொண்டும் சுகமாய் வசித்து வந்தான். சந்திரகுப்த சக்ரவர்த்தியும் நான்கு சமுத்திரங்களாலும் சூழப்பட்ட பூமியை மனுநீதி வழுவாமல் செவ்வனே பரிபாலித்துக் கொண்டு சுகமாக நெடுங்காலம் வாழ்ந்து வந்தான்.

சாணக்ய தந்திரம் முற்றிற்று

சுபமஸ்து

---

PRINTED AT THE B. N. PRESS, MOUNT ROAD, MADRAS.

விசாகதத்தன் என்பான் வடமொழியில் எழுதிய 'முத்திரா ராக்ஷஸம்' என்னும் நாடகத்தைத் தழுவி 'சாணக்ய தந்திரம்' என்னும் இத்தமிழ்நூல் எழுதப்பட்டிருக்கிறது.

'நவசக்தி' சென்னை.

'சாணக்ய தந்திரம்' என்ற புத்தகம் தமிழபிமானியான M. M. நாராயணஸாமி அய்யரால் இயற்றப்பட்டது. இப்புத்தகமானது அநாதையாயிருந்த சந்திரகுப்தனுக்குப் புத்திவன்மையால் ராஜ்யத்தை மீட்டுக்கொடுத்த சாணக்யனென்ற மதிமந்திரியின் ராஜதந்திரங்களைப்பற்றிக் கூறுகின்றது. இப்புத்தகத்தினைப் படிப்போரின் மனதில் அரசியல், அமைச்சியல், சிநேகம், சிறந்த ஒழுக்கம் இவற்றின் லக்ஷணம் படியாதிராது. மேனாட்டுக் கதைகளைப் பார்த்து மொழிபெயர்த்தோ அன்றி அவற்றின் வழிநூலாகவோ உள்ள புத்தகங்களைப் பாடமாக வைப்பதைக் காட்டிலும், இம்மாதிரியான புத்தகங்களைப் பள்ளிக்கூடங்களின் பாடமாக வைத்தால் அது காலத்திற்கொத்த செய்கையாகவும் தேசாபிமானத்தையும் கீழ்நாட்டறிவையும் ஊட்டுஞ் செய்கையாகவும் இருக்குமென்பதில் சிறிதும் ஐயமில்லை.

22—2—1922. "சுதேசமித்திரன்" சென்னை

'சாணக்ய தந்திரம்' என்ற நூல் சாணக்யனுடைய மகிமையையும், விடாமுயற்சியையும், கூரிய புத்தியையும் நன்கு எடுத்துக் காட்டுகிறது. கதை தெளிவாகவும், சுருக்கமாகவும், நன்றாகவும் எளிய நடையில் எழுதப்பட்டிருக்கிறது. நமது நாட்டுச் சிறுவர் சிறுமியர் இக்கதையை ஆவலோடு படிப்பார் என்பதும், பயன் பெறுவார் என்பதும் திண்ணம்.

1922ஞு செப்டம்பர்மீ "தமிழர் நேசன்" சென்னை.

"சாணக்ய தந்திரம்" என்ற நூல் M. M. நாராயணஸாமி அய்யரவர்களால், சிறுவர் சிறுமியர்க்கும் விளங்குமாறு இனிய நடையிற் சுருக்கி யெழுதப்பட்டிருக்கிறது.

"செந்தமிழ்" மதுரை.

# SELECT OPINIONS.

Chanakyatantram by M. M. Narayanaswami Iyer is written in good easy, readable Tamil, and the characteristics of Chanakya as depicted in the book, particularly his unconquerable spirit, and unswerving loyalty, are bound to make an abiding impression on young minds. There is indeed need for books inculcating lessons of an intelligent adherence to a worthy cause and persistent action in view to its accomplishment. I have no doubt that the good author will meet with encouragement, in his present attempt enough to stimulate him to farther and even better ones.

(Sd.) R. Swaminathaiyer,
Headmaster,
Town High School.

Date 22—9—22,
Kumbakonam.

Mr. M. M. Narayanaswami Iyer of Mudikondan has laid the Tamil Public under a deep debt of obligation to him, by the publication of his work "Chanakya Tantra". The book clearly and impressively brings home to the reader the political and diplomatic skill of Chanakya and his greatness as a minister. It is well-fitte to dispel the doubts of those of us, who doubt whether there were politicians of note in Ancient India and whether the Ancient Indians were conversant with political science.

V. Raghava Iyengar,
M.A., L.T.,
Headmaster.

Municipal High School,
Mayavaram, 19—2—1923.

PRINTED AT THE B. N. PRESS, MOUNT ROAD, MADRAS.